

அப்ப... மன்னிப்பளிக்கக் கேட்கும் அரசியல் கைதிகளின் நிலை என்ன?


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28+VIII | சுடர் 31 | கதிர் 294 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 30, வியாழக்கிழமை 15.09.2016


## தியாகி தீலிபனின் அறப்போராட்ட 29ஆவது நினைவு இன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப். 15

ஆயுதப் போராட்டம் மௌனித்து அகிம்சையில் தமிழினத்தின் போராட்டம் தீவிரமடைந்துள்ள நிலையில் அகிம்சைப் போராட்டத்தின் மூலம் தன்னையே ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 29ஆவது ஆண்டு நினைவு தமிழர் வாழும் தேசம் எங்கும் உணர்வு பூர்வமாக இன்று ஆரம்பமாகிறது. எதிர்வரும் 26ஆம் திகதிவரை இது கடைப் பிடிக்கப்படும்.

இராசையா பார்த்திபன் என்ற இயற்பெயர் கொண்ட திலீபன், 1987ஆம் ஆண்டு ஆக்கிரமிப்புப் படையாக தமிழர் >> 23ஆம் பக்கம்

சங்குவேலி ஆள் மாறாட்டக்கொலை

## சந்தேகநபரை நேற்று நீதிமன்றில் அடையாளம் காட்டினார் சாட்சி

யாழ்ப்பாணம், செப். 15

சங்குவேலியில் ஆள்மாறி வெட்டிக் கொல்லப்பட்டவரின் வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள நபர், கொலை செய்யச் சென்றிருந்தவர்களில் ஒருவரே என்று நேற்றைய அடையாள அணிவகுப்பில் சாட்சியால் அடையாளம் காட்டப்பட்டார். ஏனைய கொலைச் சந்தேகநபர்களை விரைவில் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு மல்லாகம் நீதிவான்மன்று நேற்று உத்தரவிட்டது. மானிப்பாய் சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் கோவில் பகுதியைச் சேர்ந்த சிவகுமாரன் பிரணவன் (வயது- 31) என்ற இளம் குடும்பத்தலைவர் கடந்த மாதம் 17ஆம் திகதி மானிப்பாய் சங்குவேலியில் வைத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த பிரசன்னா மற்றும் அவரது நண்பர்கள் தான் வெட்டிக்கொலைசெய்தார்கள் என்று கொல்லை செய்யப்பட்ட நபரின் >> 25ஆம் பக்கம்

## போராளியைக் கொன்ற மேஜருக்கு பொது மன்னிப்பை பரிசீலிக்கலாம்

### அரசு நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் என்ற சந்தேகத்தில், தடுத்து வைக்கப் பட்டிருந்த நபர்மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இராணுவ மேஜர் தொடர்பில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை அரசு மதிக்கின்றது. இது படையினரைப் பழி வாங்கும் நடவடிக்கை அல்ல. அவர் பொது மன்னிப்புக்கு கோரிக்கை விடுத்தால், அது தொடர்பில் ஜனாதிபதி பரிசீலிப்பார்.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரான >> 23ஆம் பக்கம்

# பான் கீ மூனுக்கு பதிலடி அவசியம்

### அரசுக்குக் கடும் அழுத்தம் கொடுக்கிறது மகிந்த அணி

கொழும்பு, செப்ரெம்பர் 15

இலங்கைப் பயணத்தின் போது ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கையின் மனித உரிமை விவகாரம் தொடர்பில் கூறிய பாரதூரமான கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தக் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஜெனிவாக் கூட்டத் தொடரில் அரசு தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினர் மகிந்த அணியினர்.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற பொது எதிரணியின் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீமூன் இலங்கைக்கு வந்தபோது, அவர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பாரதூரமான பிரச்சினைகள் இலங்கைக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் ஏற்பட்டுள்ளது. >> 25ஆம் பக்கம்

## 7 ஈழத் தமிழ்க் கட்சிகள் பிரதமர் மோடிக்கு மனு

### கர்நாடகப் பிரச்சினையைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரி



யாழ்ப்பாணம், செப்.15

கர்நாடகாவிலும், தமிழ்நாட்டிலும் மக்கள் எந்தவித முரண்பாடுமின்றி நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கூட்டாக வலியுறுத்தியுள்ள ஏழு ஈழத் தமிழ்க் கட்சிகள், அது தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரிடம் இன்று மனுக் கையளிக்கின்றன.

இது தொடர்பில் நேற்று மாலையில் யு. எஸ். விருந்தினர் விடுதியில் செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதில் இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி , ஈ.பி.ஆர். எல். எவ். , புளொட், தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி, ஈ.பி.டி.பி. என்பன ஒன்று >> 23ஆம் பக்கம்

## வடக்கில் நிரந்தர அரச நியமன வயது வரம்பு 40ஆக உயர்வு

யாழ்ப்பாணம், செப்.15

வடக்கு மாகாணத்தில் தொண்டர்களாகவும் தற்காலிக அடிப்படையிலும் அரச சேவையில் பணியாற்றி வருகின்ற 40 வயதுக்கு உட்பட்ட அனைவரையும் நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அனுமதி >> 04ஆம் பக்கம்

## விமல் வீரவன்சவிடம் 7 மணிநேரம் விசாரணை

கொழும்பு, செப்.15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய சகாவான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் சுமார் ஏழு மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த ஆட்சியின் போது வீடமைப்பு மற்றும் அரசபொறியியல் துறை அமைச்சராகக் கடமையாற்றியபோது, இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பிலேயே வீரவன்ச விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரால் நேற்றுக் காலை விசாரணைக்கு அழைக்கப்பட்ட கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அங்கு சென்ற நிலையில் மாலையே வெளியே வந்தார்.

சுமார் ஏழு மணி நேரம் இடம் பெற்ற இந்த விசாரணையின் போது மகிந்த தலைமையிலான ஆட்சியின் போது வீடமைப்பு மற்றும் அரச >> 25ஆம் பக்கம்

## டில்லியின் இணக்கத்துடனேயே சம்பூர் அனல்மின்நிலையத்திட்டம்கைவிடப்பட்டது

### அரசு தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

சம்பூர் அனல் மின் நிலையத் திட்டம் இந்தியாவின் இணக்கப்பாட்டுடனேயே கைவிடப்பட்டது என்று இலங்கை அரசு நேற்று அறிவித்தது. இது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை என்று இந்தியத் தூதரகம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்த நிலையிலேயே அரசு மேற்கண்டவாறு குறிப்பிட்டது.

சம்பூர் அனல்மின் நிலையத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று இலங்கை அரசு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தது.

சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணையின்போதே சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் சஞ்சய ராஜரட்ணம் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சரவை >> 23ஆம் பக்கம்

## மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக துரைராஜா நியமனம்

யாழ்ப்பாணம், செப். 15

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக சிதம்பரம் பிள்ளை துரைராஜா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இன்று நண்பகல் பதவியேற்கிறார்.

1988ஆம் ஆண்டு சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட சிதம்பரம் பிள்ளை துரைராஜா, >> 25ஆம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி ஆசிரிய உதவியாளர்கள் சகலரையும் ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கவேண்டும்

## ஜனாதிபதி, கல்வி அமைச்சரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, செப். 15
ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கப்படாமல் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுவரும் எம்மை இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்த்து, அந்தத் திகதியிலிருந்தே எமக்குரிய சம்பள நிலுவைகளையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு கோரியுள்ள வன்னி ஆசிரிய உதவியாளர்கள், அது தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட பலருக்குக்கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், இராஜாங்கக் கல்வி அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோருக்கு வன்னி ஆசிரிய உதவியாளர் ஒன்றியத்தின் மூலம் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட - வன்னிப் பகுதிகளில் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாகச் சேவையாற்றி வரும் எமக்கு 2005ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருக்க வேண்டிய ஆசிரியர் நியமனம் இன்றுவரை வழங்கப்படாத நிலையில், நாம் தொடர்ந்தும் புறக்கணித்து, ஒதுக்கப்பட்டு வருகின்றோம்.

பல போராட்டங்களின் பின்னர் 2013ஆம் ஆண்டு எமக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதாகக் கூறி ஆசிரிய உதவியாளர் என்னும் நியமனம் வழங்கி 6 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட்டது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பயிற்சிகளை நிறைவுசெய்து 6 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் எம்மை இலங்கை ஆசிரியர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்து எமது சம்பளத்தை அதிகரிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மிகவும் குறைந்த சம்பளத்துடன் ஆசிரிய சேவையாற்றி வரும் எமது நிலையினைக் கருத்திற்கொண்டு எமக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட 01.07.2013ஆம் திகதியிலிருந்து வன்னி ஆசிரிய உதவியாளர்கள் 500 பேரையும் இலங்கை ஆசிரியர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்து எமக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவுகளையும் 01.07.2013 ஆம் திகதியிலிருந்து வழ்ங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4,426)

## யாழ். இந்துவின் பரிசளிப்பு விழாவில் தலைமை நீதியரசர் பங்கேற்கிறார்

யாழ்ப்பாணம், செப். 15
தலைமை நீதியரசர் க.சிறிபவன், யாழ். இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார். பரிசளிப்பு விழா நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-5-ரி1)

## தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு

கிளிநொச்சி, செப். 15
கிளிநொச்சி மாவட்ட பேருந்து உரிமையாளர் சங்கத்தில் தற்காலிக வழி அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் வழி அனுமதிப்பத்திரத்தை நிரந்தர அனுமதியாக்குவது தொடர்பான கலந்துரையாடல் நாளை முற்பகல் 10மணிக்குமன்னாரில் அமைந்துள்ள வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் உப அலுவலகத்தில் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சங்க நிர்வாகத்தினர்,அனைத்து தற்காலிக அனுமதிப்பத்திர உரிமையாளர்களும்,அந்த வழி அனுமதிப்பத்திரத்தினை ஒப்பந்த அடிப்படையில் பெற்று சேவையில் ஈடுபடுபவர்களும் சகல ஆவணங்களுடன் தவறாது பங்கு பற்றுமாறு வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் சி.சிவபரன் அறிவித்தார். (வ-ரி1)



கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணித்த காரும் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்குப் பயணித்த கப்ரக வாகனமும் பூநகரியில் நேற்றுப் பிற்பகல் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. இதன்போது 2 பேர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பூநகரி பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (வ-4,21)

## போதைப் பொருள் கடத்தல் முயற்சி; சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

சாவகச்சேரி செப். 15
போதைப் பொருளைக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்ட இரண்டு சந்தேகநபர்களுக்குமான விளக்க மறியல் காலத்தை நீடித்து உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிவான் மன்றம்.

கடந்த நான்காம் திகதி இரவு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கைதடிக்கு விரைந்த மதுவரி நிலையத்தினர் கொழும்பு செல்வதற்கான பஸ்ஸுக்காகக் காத்திருந்த கிராண்ட் பாஸ் வாசிகள் இருவரைச் சோதனையிட்டபோது, அவர்களிடமிருந்த பாண்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1கிலோ 800 கிராம் போதைப் பொருள் (பவுடர்) கைப்பற்றப்பட்டது. அத்துடன் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இருவரையும் மறுநாள் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தியபோது, அவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இரண்டு சந்தேகநபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்றம் உத்தரவிட்டது. (வ- 9)

## வீதியில் சென்ற தாயிடம் தாலிக்கொடி கொள்ளை

### இலக்கத்தகடற்ற மோ. சைக்கிளில் பயணித்தவர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், செப். 15
கைதடியில் இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் சென்ற 2 கொள்ளையர் வீதியால் பயணித்த பெண்ணின் ஐந்தரைப் பவுண் நிறையுடைய தாலிக்கொடியை அறுத்துச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் கைதடி கிழக்கில் நேற்று மாலை 3 மணி யளவில் இடம்பெற்றது. சாவகச்சேரி யைச் சேர்ந்த தாயும் மகளும் கைதடியிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோதே சம்பவம் இடம்பெற்றது.

அவர்களைப் பின்தொடர்ந்த கொள்ளையர் ஆள் நடமாற்றம் இல்லாதநேரம் தமது கை வரிசையைக் காட்டிச் சென்றுவிட்டனர்.

தாலிக்கொடி அறுத்தவனின் கழுத்தை மகள் பிடித்த போதும் உதைத்துத் தள்ளிவிட்டு நகையுடன் கொள்ளையர்கள் தப்பிச்சென்றனர் என்று பாதிக்கப்பட்ட பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (வ-4,ரி7,288)

## வட மாகாண வைத்தியர் மன்றம் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப். 15
விபத்தின்போது உயிரிழந்த மருத்துவர் செந்வரனின் மகளுக்கு என 1.2 மில்லியன் ரூபாவினை வழங்கி வட மாகாண வைத்தியர் மன்றத்தின் அங்குரார்ப்பணம் நேற்று இடம்பெற்றது.

வட மாகாண மருத்துவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் ஆகியோருடன் மாகாண மக்களின் மருத்துவ சேவையை மேம்படுத்தும் நோக்கில் புதிதாக வட மாகாண வைத்தியர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மன்றத்தின் தலைவர் ப.அச்சுதன் தலைமையில் யாழ் . கிறீன்கிராஸ் விடுதியில்அங்குரார்ப்பணம் இடம்பெற்றது.

இதன்போது முதலாவது பணியாக மன்றத்தினால் சேகரிக்கப்பட்ட 1.2 மில்லியன் ரூபாவுக்கான காசோலையினை மருத்துவர் செந்வரனின் மகளுக்கென மருத்துவரின் சகோதரனிடம் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டது. மருத்துவர் செந்வரன் கோப்பாயில் சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற விபத்தின்போது உயிரிழந்தார்.

நேற்றைய அங்குரார்ப்பண நிகழ்வில் விருந்தினராக மருத்துவ வல்லுநர் கணேசமூர்த்தி , ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோருடன், மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் என வடக்கின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர். (வ-4,101)

## போராளிகளுக்கான மருத்துவ ஆலோசனை இன்று முல்லையில்

முன்னாள் போராளிகளுக்கான அடுத்த கட்ட மருத்துவ ஆலோசனை வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் இடம்பெறும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற முன்னாள் போராளிகளுக்கான மருத்துவ பரிசோதனைகள் இந்த மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் வியாழக்கிழமைகளில் வெற்றிகரமாக நடைபெற்றன. இந்த நிலையில் இந்த வாரமும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் மருத்துவ ஆலோசனைகள் இடம்பெற உள்ளன. இன்று வியாழக் கிழமை காலை 8 மணிக்கு முல்லைத்தீவு வைத்தியசாலையில் மருத்துவ ஆலோசனை இடம்பெறும். நாளை வெள்ளிக் கிழமை காலை 8மணிக்கு மன்னார் பொது வைத்தியசாலையிலும், நண்பகல் 1 மணிக்கு வவுனியா பொது வைத்தியசாலையிலும், மாலை 4 மணிக்கு கிளிநொச்சி பொது வைத்திய சாலையிலும் இடம்பெற உள்ளது. இந்தவாரம் போராளிகளுக்கான மருத்துவ ஆலோசனை யாழ்ப்பாணத்தில் இடம்பெற மாட்டாது. அத்தோடு எதிர்காலத்தில் வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மேற்படி மருத்துவ ஆலோசனைகள் நடைபெறவுள்ளன -என்றார். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் மீது அவதூறு; இளைஞருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, செப். 15

பொலிஸார் மீது பொய் முறைப்பாடு செய்த 22 வயது இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார் .

நேற்றுமுன்தினம் அளவுக்கதிகமான போதையில் காணப்பட்ட இளைஞனை பொலிஸார் பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அழைத் துச் சென்றனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவரிடம் தன்னைப் பொலிஸார் தாக்கியதாக இளை ஞன் தெரிவித்தார். இதனையடுத்து சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிவானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

நீதிவான் வைத்தியசாலைக்குச் சென்று இளைஞரை விசாரித்தபோது, பொலிஸார் தாக்கியதாக அவர் கூறியது பொய் எனக் கண்டறியப்பட்டது. இதனால் இளைஞரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.விளக்கமறியல் உத்தரவை அடுத்து இளைஞன் சாவகச்சேரி வைத்தியசாலை விடுதியில் சிறைச்சாலை அலுவலர்களின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகிறார். (வ - 9)

# மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.15

இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) தரம் 111 பதவி மற்றும் பயிற்சித் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம்நடைபெறவுள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் வட மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவால் தகுதியானவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வட மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ற-9)

# கும்பாபிசேகம்

சாவகச்சேரி நகர் வாரிவனேஸ்வரம் புராதன சிவன் வாரியப்பர் ஆலயத்தில் ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் உற்சவ மூர்த்தி பிரதிஷ்டா மகா கும்பாபிசேகம் நாளை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. ஜேர்மனி நாட்டிலிருந்து மீசாலையைச் சேர்ந்த ஒருவரால் கொண்டு வரப்பட்ட திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்படும். (ற-9)

வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்துக்கு பணியாளர்கள் உடன் தேவை.
1. கணக்குப் பதிவாளர்
2. வரவேற்பாளர்
3. சுத்திகரிப்பாளர்
சுய விவரக் கோவையுடன் சமூகம் தரவும்.
இடம் : Tissomed Technologies (Pvt) Ltd
337, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி அருகில்.
காலம் : 17.09.2016
நேரம் : முற்பகல் 10.00 மணி
T.P: 021 222 3533 / 1011
(C/26189)(10.018)

COMMERCIAL BANK
அறிவித்தல்
கட்டட இடமாற்றம்
கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாணக் கிளையானது 19.09.2016 இல் இருந்து **இலக்கம் 484, ஆஸ்பத்திரி வீதியில்** அமைந்துள்ள கட்டடத்தில் தனது சேவைகளை தொடர்ந்து வழங்க இருக்கின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.
முகாமைத்துவம்.

Architectural CAD Centre
[Personal & Group Classes]
2D-Drawing & 3D-Modeling
Auto CAD
Lecturer by K.N.Mugunthan (D.A) Cert.Advanced 3D-Modelling
Cert. 2D-Drawing in Auto CAD University of Moratuwa
University of Peradeniya
0775116320 - 0718617972

வட இலங்கை சுதேச வைத்தியசபை
விசேட பொதுச்சபைக்கூட்டம்
புதிய சபையை தெரிவு செய்வதற்காக 14/09/2016 நடாத்தப்பட்ட மேற்படி பொதுக்கூட்டம் எதுவித முடிவும் எடுக்காத குழப்பமான நிலையில் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. புதிய இயக்குனர் சபை தெரிவு செய்யப்படும் வரை பழைய சபையே தவிர்க்கமுடியாது இயங்கவேண்டியுள்ளது. மேலதிக விவரங்கள் சம்பந்தப்பட்ட உயர திகாரிகளுடன் கலந்தாலோசித்து பின்னர் அறியத்தரப்படும்.
வட இலங்கை சுதேச வைத்தியசபை.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2800 திகதி 14.09.2016
36 49 52 56 B 34 ரூ. 17,206,050/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
02.09.2016 2025 சிவப்பு
03 46 49 51
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 34,28,940 /-

Galaxy Star
வெற்றி வாரம் 92 திகதி 14.09.2016
08 14 26 43 51
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,727,120/-

முகாமைத்துவ உதவியாளர் சேவை
தடை தாண்டல் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு
முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சகல தரங்களுக்குமான தடை தாண்டல் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் இலவசமாக யாழ். நகரத்தில் நடைபெறவுள்ளன.
பதிவுகளுக்கு
செயலாளர் - 077 645 0703
மத்திய-மாகாண பொது முகாமைத்துவ உதவியாளர் சங்கம்
பதிவு இல. 4645 Facebook: PMA Union Srilanka

Begin your Career in
INTERNATIONAL
DIPLOMA
After A/L's



assured by PEARSON
Dual Certification
Pearson (UK) + ESOFT
IT + ENGLISH
Diploma in Information Technology
Diploma in English
பதிவுகளை புரட்டாதி 30ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்
சேமிப்பு Rs. 16,375
Dual Diploma Usual Price Rs. 40,000
Dual Diploma With Discount Rs. 29,625
25% off for the 1st Diploma
50% off for the 2nd Diploma
ESOFT Branded T-Shirt FREE for Every 1st Diploma Registration
8GB Pendrive FREE for Every 2nd Diploma Registration
Other international Diplomas
Diploma in Software Engineering
Diploma in Business Management
Diploma in Computerized Accounting
Diploma in Business English
Diploma in Web Engineering
Diploma in Hardware & Networking
Diploma in Multimedia
Diploma in Academic English
NEW BATCHES
18.SEP.2016
19.SEP.2016 @ 9:00am
ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline: 077 309 9 308 Tel : 021 222 4142
www.esoft.lk
The Sri Lanka's Largest Higher Education Network

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவும் விக்கியுமே தீர்வுக்கு முட்டுக்கட்டை

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 15

மகிந்த ராஜபக்சவின் சிங்கள இனவாதமும் விக்கி னேஸ்வரனின் தமிழ் இனவாதமும் பன்னாட்டுச் சமூகத்தின் தலையீடுகளும் இலங்கையின் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டையாகவுள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவும் அதனோடு தொடர்புபட்ட அமைப்புகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர் மாநாடுகளை நடத்தி இலங்கை விடயம் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது வழக்கமாகி விட்டது. உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

அரசு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கால தாமதம் காட்டுவதே இவ்வாறான தலையீடுகளுக்கு ஏதுவாக அமைகின்றது. காணாமற் போனோர் தொடர்பாகக் கண்டறியும் அலுவலகம் நாட்டில் நிறுவுவதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதுவரை அந்த அலுவலகத்தின் நடவடிக்கைகளை அரசு ஆரம்பிக்கவில்லை. இவ்வாறு சட்டங்களை நிறைவேற்றிவிட்டு அதனை நடைமுறைப்படுத்தாமல் காலந் தாழ்த்துவதனாலேயே ஐ.நா.வும் வேறு நாடுகளும் அமைப்புகளும் எமது விடயத்தில் தலையிடுகின்றன.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவும் பன்னாட்டு புலம்பெயர் புலிகளினதும் பிரிவினைவாதிகளினதும் தேவையை நிறைவேற்றுகிறது.

மறுபுறம் இலங்கைக்குள் மகிந்த ராஜபக்ச இதனைப் பயன்படுத்தி சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிட்டு அரசியல் செய்கின்றார். விக்னேஸ்வரன் தமிழினவாதத்தைத் தூண்டிவிடுகிறார் – என்றார். (த-5)

இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் இரண்டாம் மொழி கற்கைநெறிகள் ஆரம்பம்

இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் வடமாகாணத்தில் நடத்தப்படும் இரண்டாம் மொழிகளான ஆங்கில, சிங்கள மொழிகளுக்கான வகுப்புக்கள் புரட்டாதி மாதம் 17 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட உள்ளன. அதில் பயிற்சி பெற விரும்பும் பயிற்சியாளர்கள் 16.09.2016 பி.ப 3.00 மணி தொடக்கம் 05 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் நிலையங்களில் தங்களின் விண்ணப்பங்களைப் பெற்று பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இதுவரை 8000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கை நெறியில் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். தொடர்ந்து இக் கல்விச் சேவை இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் கண்காணிப்பில் வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்தினதேரோ அவர்களின் தலைமையிலும் தேசமானிய MTS இராமச்சந்திரன் அவர்களின் அனுசரணையிலும் நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு: 076 669 6879

கற்கை நிலையங்கள்:- உருத்திரபுரம் மகா வித்தியாலயம், வரணி மத்திய கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி (பெண்கள் மட்டும்), சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி, தாவடி இந்துக் கலவன் பாடசாலை, நெல்லியடி மத்திய கல்லூரி, வட்டு மத்திய கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி

ஒளி அழகன் ஸ்ருடியோவும்
British College of Beauty Studies
உம் இணைந்து நடத்தும்
பெண்களுக்குப் பொருத்தமான
துறை சார்ந்த பாடநெறிகள்

- தையற்கலை
- அழகுக்கலை
- கேக்ஐசிங்
- கணினி
- Ladies Skills Development
- ஆங்கிலம்

ஆகிய பாடநெறிகளும், பயிற்சி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

- வயதெல்லை கிடையாது.
- இலகு தவணை முறையிலான கட்டண வசதி.
- எங்களிடம் எந்தப் பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் உலகின் எப்பகுதியிலும் சுயமாக உரிய தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

British College of Beauty Studies
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 076 701 1645

தேவை

1) நெல் கொள்வனவு செய்யப்படும்
2) மில் உபகரணங்கள் தேவை
3) மில்லில் வேலை செய்ய விரும்புவோர் தேவை.

மாப்பியன் மில்
சுதுமலை மானிப்பாய். 077 7722215

பணிப்பெண் தேவை

கொழும்பிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப் பெண் தேவை. வயது 45-60

077 522 2533

கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

10 நாள் நிரம்பிய வான் கோழிக் குஞ்சுகள், ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

077 245 3673

தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 30.06.2016க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 27.09.2016ம் திகதி காலை 10.00 மணி முதல் இல.56/22/B, ஸ்ரென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No. PB139

## பாம்பனில் கரையொதுங்கிய அரிய வகைப் புள்ளிச் சுறா



ராமேஸ்வரம், செப்.15

தமிழ்நாட்டின் பாம்பன் அருகே குந்துகால் கடற்கரைக் கிராமத்தில் இறந்த நிலையில் ராட்சத புள்ளிச் சுறா ஒன்று கரை ஒதுங்கியது. கிராம மக்கள் வனத்துறைக்குத் தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த வனத்துறை அதிகாரிகள் புள்ளிச் சுறாவை உடல் கூறு சோதனை செய்து மணலில் புதைத்தனர்.

உலகிலேயே மிக அரியவகை கடல்வாழ் உயிரினங்கள் அதிகம் வசிக்கும் பகுதி மன்னார் வளைகுடா கடற்பகுதியாகும். கரையொதுங்கிய அரியவகை புள்ளிச்சுறா ஆயிரத்து 500 கிலோ எடையும், 17 அடி நீளமும் கொண்டதாகும். அது நோய் வாய்ப்பட்டோ அல்லது பெரிய அளவிலான சரக்குக் கப்பலின் இயந்திரத்தில் அடிபட்டோ இறந்திருக்கலாம் என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது ஆழ்கடல்பகுதியில் வசிக்கக்கூடியது எனவும் சங்கு வகைகள் மற்றும் அதிக முள் பகுதிகொண்ட இன மீன்களை உணவாகக் கொண்டு வாழும் தன்மையுடையது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரியவகை ராட்சத புள்ளிச் சுறாவை அந்தப் பகுதி பொது மக்கள், சிறுவர்கள மற்றும் மீனவர்கள் அதிசயத்துடன் பார்வையிட்டனர். (ற)

## அதிபர் நியமனம்

தென்மராட்சி, செப்.15

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் ஏற்பட்ட அதிபர் பதவி வெற்றிடத்துக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதி அதிபர் சு.சிவானந்தம் மாகாணக் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய வே.கணபதிப்பிள்ளை பதவியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். (ற-9)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டது.

இவ்வாறு நேற்று அறிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே.

வடக்கு மாகாணம் போரினால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற அடிப்படையில் மாகாண அரச சேவையில் உள்ளீர்க்கப்படுபவர்களுக்கான வயதெல்லையை அதிகரிக்குமாறு வடக்கு மாகாண அமைச்சரவை விடுத்த கோரிக்கைக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கினார்.

போர் நடைபெற்ற காலம் தொடக்கம், வடக்கு மாகாணத்தில் அரச திணைக்களங்களில் நிலவிய ஆளணிப் பற்றாக்குறை காரணமாகப் பலர் தொண்டர் சேவை மற்றும் தற்காலிக அடிப்படையில் பல பதவிகளில் பணியாற்றி வருகின்றனர்.

போர் முடிவுக்கு வந்ததையடுத்து, அரச சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்தபோது, அவர்கள் 35 வயதுக்கு மேற்பட்டிருப்பதாகக் கூறி, அதிகாரிகள் அவர்களை நிராகரித்தார்கள்.

அரசு சேவையில் சேர்பவர்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று வேலைக்கு ஆள்சேர்ப்பதில் அரசு நிபந்தனை விதித்திருப்பதை அதிகாரிகள் தமது மறுப்புக்குக் காரணமாகத் தெரிவித்திருந்தார்கள்.

வடமாகாணத்தில் வேலையில்லாத பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனால், பெரும் எண்ணிக்கையானவர்கள் தொண்டர் சேவை அடிப்படையில் அரச திணைக்களங்க்ளில் பதினைந்து இருபது வருடங்களாகப் பணியாற்றி வருகின்றார்கள்.

அவர்கள் 35 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பதனால், அவர்களை அரச சேவையில் நிரந்தரமாக உள்வாங்குவதற்கு அவர்களுடைய வயது ஒரு பிரச்சினையாக மாறியிருக்கின்றது. அரசு சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

எனவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக வடமாகாணத்தில் அரசு சேவையில் சேர்வதற்கான வயது எல்லையை 35லிருந்து 40ஆக நாங்கள் உயர்த்தியுள்ளோம். இது அவர்களுக்கு நன்மையளிக்கும் என்று நம்புகிறேன் என்று ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கூறினார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு நலனுக்காக குரல் கொடுத்தால் இனவாத முத்திரை

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, செப். 15
நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்காகக் குரல் கொடுத்தால் அவர்களை இனவாதிகள் என்றும் கடும் போக்காளர்கள் என்றும் முத்திரை குத்தி அரசு திட்டமிட்டு ஓரங்கட்டி வருவதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர எழுதிய நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் தெரிவித்ததாவது:

இன்று நாம் வெளிநாடுகளுக்குக் கீழ்படிந்த யுகத்தில் இருப்பதாக நான் கருதுகிறேன். வெளிநாடுகளுடன் இணைந்து போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான ஆணைக் குழுக்களுக்கு நாமே ஆலோசனை முன்வைக்கின்றோம்.

நாம் இணை ஆலோசகராக மாறுகின்றோம். அந்த நிலை இன்று உருவாகியுள்ளது. வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிமன்றத்தை உருவாக்க வேண்டுமென மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிக்கின்றார். இது தொடர்பில் ஆராயுமாறு பணிப்புரை விடுக்கின்றார்.

பான் கீ - மூன் இங்கு வந்து கத்துகிறார். இனவாதத்துடன் இனப் படுகொலை நடைபெற்ற நாடுகளின் பட்டியலில் எம்மையும் இணைக்க அவர் தயாராகின்றார். நாங்கள் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பல தடவைகள் மூன் என்னைச் சந்தித்திருக்கின்றார். போருக்கு முன்னரும் என்னைச் சந்தித்தார். பின்னரும் என்னைச் சந்தித்தார். போரின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் இவ்வாறான ஒரு கதையைக் கூற முனையவில்லை. இது புதிய கதை. எமது நாட்டில் இருந்துகொண்டு எம்மைப் பற்றிக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்.

நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்காகக் குரல் கொடுத்தால் அவர்களை இனவாதிகள் என்றும் - கடும் போக்காளர்கள் என்றும் முத்திரை குத்தி அரசு திட்டமிட்டு ஓரங்கட்டி வருகின்றது. அரசு தனது சூழ்ச்சிகளைத் தடையின்றி மேற்கொள்வதற்காகவே இவ்வாறு திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

புதிய அரசமைப்புத் தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கத்தை இல்லாமல் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. அரச மர இலைகள் நான்கையும் தேசியக் கொடியில் இருந்து நீக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. என்ன நடக்கிறது? அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு இருக்கும் இடத்தை இல்லாமல் செய்யக் கோரப்பட்டுள்ளது. இது எவருடைய தேவைக்காக? இது இனவாதத்தை தூண்டும் நடவடிக்கை இல்லையா? மதவாதிகளை தூண்டி விடுவதற்காகவா இதனைச் செய்கிறார்கள்? எனக்குச் சந்தேகம் எழுகின்றது.

மதம் அல்லது இனம் பற்றிப் பேசினால் இனவாதிகள் என்கின்றனர். நான் பௌத்தன் என்றால் என்னை இனவாதி என்கின்றனர். இது புதிய நிலை. எவருக்கும் தங்களது கருத்துக்களை வெளியிட உரிமையுள்ளது. இது இனவாதமல்ல. தனது இனத்தை மதத்தைப் பற்றிக் கதைக்க, அதனை நேசிக்க அனைவருக்கும் உரிமையுள்ளது என்றே நான் நம்புகின்றேன். சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் தற்போது பேசுவதில்லை. தன்மீது ஒரு முத்திரை குத்தப்படும் என்ற பயமே அதற்குக் காரணம். இந்த நிலை மாற வேண்டும். தாய்நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைய முடியும். அதில் பிரச்சினை இல்லை. எனினும் பகுதிகளாகப் பிரித்து வேறு ஒரு யுகத்தை உருவாக்கிக் கொள்ள, வேறு ஒரு இராச்சியத்தை தோற்றுவிக்க இடமளிப்பதா என்பது தொடர்பில் பிரச்சினை இருக்கிறது - என்றார். (த-5)

# அத்தியாவசியப் பொருள்களின் வற் வரி அதிகரிக்கப்படமாட்டா?

கொழும்பு, செப். 15
வற்வரி திருத்தங்களின்போது அத்தியாவசியப் பொருள்களுக்கான வற்வரி அதிகரிக்கப்படாது. அரசின் 'உயரிய சில்லறை விலையை' மீறி அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்வோரைக் கண்டு பிடிக்க நாடு முழுவதும் விழிப்புக் குழுக்கள் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறு வாழ்க்கைச் செலவு தொடர்பாக ஆராயும் அரசின் குழு தெரிவித்தது.

நிதியமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

வர்த்தக வாணிபத்துறை அமைச் சின் செயலாளரும் வாழ்க்கைச் செலவு தொடர்பாக ஆராயும் குழுவின் தலைவருமான ரி.வி.கே.பி. தென்னக்கோன் தெரிவித்ததாவது:

16 அத்தியாவசியப் பொருள்களுக்கு வற்வரி நீக்கப்பட்டது. தொடர்ந்தும் அது நடைமுறையில் இருக்கும். வற்வரி திருத்தப்பட்டாலும் அத்தியாவசியப் பொருள்களுக்கான கட்டுப் பாட்டு விலைகள் அரசு தீர்மானித்த உயரிய சில்லறைவிலையில்தொடர்ந்தும்இருக்கும். இதில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படாது. நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருள்கள், மரக்கறி வகைகளின் விலைகள் தொடர்பாக பொய்யான செய்திகளைச் சிலர் வெளியிடுகின்றனர். அத்தியாவசியப்பொருள்களுக்கான வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொய்யான பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர்.

தற்போது சுப்பர் மார்க்கெட்டுக்களில் அரசு அறிவித்த உயரிய சில்லறை விலையைவிடக் குறைந்த விலைக்கு அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்கின்றனர். சந்தையில் ஏற்பட்டுள்ள இந்தப் போட்டித் தன்மை ஆரோக்கியமானதாக உள்ளது. இதன் மூலம் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கின்றன.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரித்து விற்பனை செய்தால் அது தொடர்பில் 1290 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறையிடலாம்.

அதிக விலைக்கு பொருள்களை விற்ற 85 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான வர்த்தகர்களை கண்டு பிடிப்பதற்கு எமக்கு ஆளணி போதாமல் உள்ளது. பிரதமருடன் இடம்பெற்ற பேச்சின்போது சுட்டிக்காட்டினோம். தேவையான ஆளணியை இணைத்துக்கொள்ளுமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார். எதிர் காலத்தில் ஆளணி அதிகரிக்கப்படும். அதே வேளை விழிப்புக் குழுக்களும் அமைக்கப் பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்பவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள் - என்றார்.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவன முக்கியஸ்தர் துமிந்த பிரியதர்சன குறிப்பிடுகையில், ஒக்ரோபர் மாதம் நடுப்பகுதியில் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரிக்கலாம். வழமையான விலை அதிகரிப்பாகும். அரிசி விலைகளில் தற்போது குறைப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டரிசியின் விலை குறைந்துள்ளது.

நாட்டுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் உள்ளது. எனவே அரிசியின் விலை அதிகரிக்காது - என்றார். (த-5)

# 9 மாதங்களுக்கு மட்டுமே வற் வரி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

ஒன்பது மாதங்களுக்கு மட்டுமே வற் வரி நடைமுறையில் இருக்கும். அதன்பின்னர் மக்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படாது எனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கடந்த அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 1.3 ட்ரில்லியன் ரூபா கடன் தொகையைச் செலுத்துவதற்காகவே இவ்வாறு செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த அரசு கடன்களை உரிய முறையில் செலுத்தாமல் நாட்டை பெரிய கடன் பொறியில் சிக்க வைத்துள்ளது. அதிலிருந்து மீட்டு எடுக்கும் நோக்கில் வற் வரி விதிக்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

தற்காலிக அடிப்படையில் வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், ஒன்பது மாதங்களின் பின்னர் மக்களுக்குச் சுமையற்ற வகையில் வற் வரியில் மாற்றங்கள் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (த-5)

# பணயக் கைதிகளாக உள்ள மக்களை மீட்பதற்கு சட்டங்களை மீற முடியும்

## அதனையே படையினர் செய்தனர் என்கிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, செப். 15
பன்னாட்டுச் சட்டத்தின் அடிப்படையில் பணயக் கைதிகளாக உள்ள மக்களை மீட்பதற்கு எந்தவொரு விதிமுறையையும் மீற முடியும். இதுவே தர்மமுமாகும். இதனையே எமது படையினர் மேற் கொண்டனர்.

இவ்வாறு முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை இராணுவம் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த மக்களை மீட்கும் நோக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்டமையானது எந்தவொரு விதத்திலும் பன்னாட்டுச் சட்டங்களை மீறும் செயலாக அமையாது. அதேபோன்று இரா ணுவத்துக்கு எதிரான குற்றங்களைப் பன்னாட்டுச் சட்டத்தின் பிரகாரமே தோல்வியடையச் செய்திருப்போம். ஐக்கிய நாடுகள் விவகாரத்தில் அரசு செயற்பட்ட விதத்தினாலேயே பெரிய நெருக்கடி நிலை உள்ளது. விடுதலைப் புலிகள் செய்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் எவரும் எதுவும் பேசுவதில்லை. இராணுவம் குற்றங்கள் செய்ததாக போலியான சாட்சி ஆதாரங்களை முன்வைத்து அனைத்தும் நடைபெறுகின்றது. பொதுமக்களைப் பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு இறுதிக்கட்டப் போரில் விடுதலைப் புலிகள் மோசமான முறையில் போரிட்டனர்.

முழு உலகுக்கும் தெரியும். இந்த மக்களை மீட்பதற்காக மனிதாபிமான நடவடிக்கையை ஆரம்பித்து இராணுவம் செயற்பட்டது. இதன் பிரகாரம் பல லட்சம் மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தனர். பன்னாட்டுச் சட்டத்தின் அடிப்படையில் பணயக் கைதிகளாக உள்ள மக்களை மீட்பதற்கு எந்தவொரு விதிமுறையையும் மீற முடியும். இதுவே தர்மமுமாகும். நாம் ஆட்சியில் இருந்திருந்தால் இந்த விதி விளக்கத்தை மையமாக வைத்து இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நீக்கியிருப்போம்.

தற்போது என்ன நடந்துள்ளது. பாரதூரமான மனித உரிமை மீறல்களை இராணுவம் செய்துள்ளதாக ஒப்புக்கொண்டு அதனை விசாரணை செய்வதாகக்கூறி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்கள். இதனால் பல்வேறு நெருக்கடியான நிலையே எமக்கு ஏற்பட்டுள்ளது. புலிப் பயங்கரவாதியைக் கொலை செய்ததற்காக 20 இலட்சம் ரூபாவை இராணுவச் சிப்பாயால் வழங்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால்புலிகளால் கொலை செய்யப்பட்ட இராணுவ குடும்பங்களுக்கு ஒன்றும் இல்லாத நிலையே காணப்படுகின்றது - என்றார். (த-5)

# வரி அறவீட்டு நடமாடும் சேவை

சாவகச்சேரி, செப்.15
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 10ஆம் வட்டா ரத்தில் இன்று வரிகள் அற வீடு தொடர்பான நடமாடும் சேவை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணி தொடக்கம் கெருடாவில் ஸ்ரீ பால முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடமாடும் சேவை இடம் பெறும் என்றும் - அதில் 10 ஆம் வட்டாரப் பிரிவு வரியிறுப் பாளர்கள் தமது ஆதனவரி , வியாபார உரிமம், சைக்கிள் இலக்கத் தகடு போன்றவற்றுக்கான வரிகளைச் செலுத்த முடி யும் என்று நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்.

நகரசபையால் கடந்த எட்டு மாதங்களாக சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் வட்டார ரீதியாக நடமாடும் சேவைகளை நடத்தி, வரியிறுப்பாளர்களுக்கு ஏற் படும் சிரமங் கள் குறைக் கப்படுகின்றன. நடமாடும் சேவைகளால் கிடைக்கும் நிதியை அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தி வருகின்றோம் என்றும் அவர்தெரிவித்தார். (ற-9)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் ஆசிரியராக
பணிபுரிந்து அகவை அறுபதில்
ஓய்வுபெற்றுச்செல்லும்
திருமதி சந்திராதேவி
மார்க்கண்டு
(பயிற்றப்பட்ட சமூகக்கல்வி
ஆசிரியை - SLTS I)
அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சிறப்புடன்
வாழ வாழ்த்துகின்றோம்.
(சி.26181)
(13.19)
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொறுக்கப்பட்ட கள் தவறணைக்கு நட்டஈடு செலுத்துமாறு அறிவுறுத்து

## இல்லையெனில் சட்ட நடவடிக்கை என்று நவ்வி மக்களிடம் தெரிவித்தனர் பொலிஸார்



வவுனியா, செப். 15
கள் தவறணையை அடித்து நொறுக்கியமைக்கு 58 ஆயிரம் ரூபா நட்டஈடு செலுத்த வேண்டும். அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவீர்கள் என்று வவுனியா ஓமந்தை பொலிஸார் நவ்வி கிராம மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பனை, தென்னை கூட்டுறவு சங்கத்தின் கீழ் வவுனியா ஓமந்தை நவ்வி கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கி வந்த கள் தவறணை கடந்த திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் அடித்து நொறுக்கப்பட்டது. கள் தவறணை நவ்வி கிராமத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலை, மற்றும் முன்பள்ளி ஆகியவற்றிலிருந்து 100 மீற்றருக்கு அண்மையிலும், கிறிஸ்தவ ஆலயம், இந்து ஆலயங்களுக்கு அண்மித்தும் காணப்படுகின்றது என்று தெரிவித்த மக்கள், கள் தவறணையை வேறு இடத்துக்கு மாற்றுமாறு கோரியிருந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை கள் தவறணை சேதமாக்கப்பட்டது.

சம்பவத்தை அடுத்து நேற்றுக் குறித்த பகுதிக்குச் சென்ற ஓமந்தைப் பொலிஸார் கிராம மக்களுக்கு மேற்கண்டவாறு அறிவுறுத்தல் விடுத்தனர்.

ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் அடித்து நொறுக்கப்பட்ட கள் தவறணையை பார்வையிட்டனர். ஏற்பட்ட நட்டத்தையும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். கிராம சேவையாளர், பிரதேச செயலாளர் உட்பட பொலிஸாரும் அந்தப் பகுதி மக்களை ஒன்றிணைத்து கலந்துரையாடினர். சட்டத்தை பொதுமக்கள் கையில் எடுப்பது தவறு. சட்டத்திற்குட்பட்டு, நடந்த சம்பவத்துக்கு நட்ட ஈடாக 58ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும். அல்லது சட்ட நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பல அதிகாரிகள் மட்டத்தில் இந்தக் கள் தவறணையை அகற்றுமாறு பல தடவைகள் தெரிவித்திருந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. எமது இளம் சமூகம், அப்பகுதியிலுள்ள முன்பள்ளி மாணவர்கள், குடும்பங்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் நட்டஈடு செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தனர். அந்தப் பகுதியிலுள்ள ஆலய நிர்வாகத் தலைவரிடம் பணம் சேகரிக்கும் பொறுப்பை ஒப்படைத்துள்ளனர். உடனடியாகப் பணம் திரட்டமுடியாததால் பிறிதொரு தினத்தில் பணத்தைத் தயார் செய்து வைக்குமாறு தெரிவித்து பொலிஸார் சென்றுள்ளனர்- என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

(ற-21)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இளையதம்பி
அருமைநாதன்
(அருமை)
திதி: வளர்பிறை சதுர்த்தசி
(15.09.2016)



அன்னை மடியில்
06.10.1954

ஆண்டவன் அடியில்
29.08.2012

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் சிகரமே! அணையாத விளக்கே!
காலனும் தன் கணக்கை கணப்பொழுதில் முடித்துவிட
ஆண்டுகள் நான்கு அவனியிலே கரைந்ததப்பா!
கண்முன்னே உங்கள் உருவம் கண்ணீரில் கரைகிறது
காரிருள் சூழ்ந்த பாரினிலே எம்மைத் தவிக்கவிட்டு
பரமனடி நாடிச் சென்றீர்கள் அப்பா!
வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை வாழவைத்த தெய்வமே!
மனம் விட்டு மறையாமல் எந் நாளும் இருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன்தாள் நித்தமும் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

(ஜ.4589) (13.18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி
உரோகினி
குருசாமி



தோற்றம்
23 . 11 . 1942

மறைவு
17 . 08 . 2016

கடந்த17.08.2016 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியான உரோகினி குருசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை(16.09.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து குறித்த கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

கீரிமலை, அளவெட்டி மத்தி,
அளவெட்டி.
குடும்பத்தினர்.

## நினைவஞ்சலி

| 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | | 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | |
|---|---|---|---|
| பிறப்பு | இறப்பு | பிறப்பு | இறப்பு |
| 29.03.1938 | 29.08.2004 | 29.12.1946 | 13.09.2005 |





கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை

புன்னகையின் திருவுருவமாய்
எங்கள் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்து
பாசத்தின் பொருளாய் இருந்து
எம்மை வழி நடத்திய எம் தாய் தந்தையராய் இருந்து
இறைவனின் பாதச்சுவடுகளை பற்றி
பசுமை தரும் நினைவுகளோடு கண்ணீர்
பூக்களால் நினைவஞ்சலியை காலடியில் சமர்ப்பிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிரந்தர முகவரி:
பலாலி கிழக்கு, வசாவிளான்.
தற்காலிக முகவரி:
மீசாலை வடக்கு, மீசாலை.

பிள்ளைகள்.

## நீங்கா நினைவுகளும் நன்றி நவிலலும்

60 ஆம் நாள



அமரர்
ஆசீர்வாதம் பாக்கியநாதன்
(ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் - ஊர்காவற்றுறை வைத்தியசாலை)

தோற்றம் 19.09.1950
மறைவு 21.07.2016

31 ஆம் நாள்



திருமதி
சிவரூபி [நங்கா] திலீபன்

தோற்றம் 11.06.1978
மறைவு 16.08.2016

எமது அன்புத் தெய்வங்களின் மறைவுச் செய்தி கேட்டு உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் இருந்தும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் உடன் வந்து உதவிகள் புரிந்தோருக்கும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (15.09.2016) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

151, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,500 கிலோ பிளாஸ்ரிக் கொழும்பு செல்லத் தயார்

## காக்கைதீவு மீள்சுழற்சி நிலையத்திலிருந்து

யாழ்ப்பாணம், செப். 15

காக்கை தீவு மீள்சுழற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றரை மாத காலத்துக்குள் தூளாக அரைக்கப்பட்ட ஆயிரத்து 500 கிலோ பிளாஸ்ரிக் கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தயார் படுத்தப்பட்டுள்ளது.



இவ்வாறு யாழ். மாநகர சபையின் மீள்சுழற்சி நடவடிக்கைக்கான பொறுப்பதிகாரி இரத்தினசிங்கம் அசோகன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

யாழ். மாநகர சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட, காக்கைதீவு மீள்சுழற்சி நிலையம் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. அந்தக் கழிவுகளில் உக்காத பொருள்களான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் என்பன தனியாக்கப்படுகின்றன. இவ்வாறு தனியாக பிரித்தெடுக்கப்படும் பிளாஸ்ரிக் – பொலித்தீன் காக்கைத்தீவு மீள்சுழற்சி நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன.

அவை தூய்மைப்படுத்தப்படுகின்றன. பின்னர் தரம் பிரிக்கப்படுகின்றன. தரம்பிரிக்கப்படும் பிளாஸ்ரிக் – பொலித்தீன் துகள்களாக்கப்படுகின்றன. எட்டு வகையாக அவை பிரிக்கப்பட்டு பின்னர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. இது வரையில் ஆயிரத்து 500 கிலோ பிளாஸ்ரிக் – பொலித்தீன் துகள்கள் பெறப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருள்களால் ஏற்படக்கூடிய தாக்கத்துக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு பொதுமக்களும் எங்களுடன் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். வீட்டுத் தேவைகளுக்காக கொள்முதல் செய்யப்படும் பொருள்களுடன் வரும் பொலித்தீன்களை வீதிகளில் எறியாது மாநகர சபை கழிவகற்றும் வாகனங்களிடம் ஒப்படைக்கலாம். அதை உரிய முறையில் கடைப் பிடிக்குமிடத்து தரப்படுத்தி மீள் சுழற்சிக்கு அனுப்பி வைக்கும்போது நகரமும் துய்மையாவதுடன் வருமானமாகவும் அமைந்துவிடுகின்றது – என்றார்.(ற-5-ரி7)

# உடுவில் மகளிர் கல்லூரி விவகாரத்தை கையாண்ட விதம் கண்டிக்கத்தக்கது

## வடமாகாண அதிபர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.15

யாழ். உடுவில் மகளிர் கல்லூரியில் ஏற்பட்ட அதிபர் நியமன நிர்வாகச் செயல்முறையில் மாணவர்கள் ஈடுபடும் சூழ்நிலையை உருவாக்கி சம்பந்தப்பட்டவர்கள் அதனை கையாண்ட விதத்தை வன்மையாகக்கண்டிக்கின்றோம். இவ்வாறு வடமாகாண அதிபர் சங்கம் தெரிவித்தது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது–

வட மாகாண கல்விப் புலத்தில் அண்மைக்கால சம்பவங்களும், மாணவர் ஆசிரியர்களுக்கு இடையான உறவுகளுக்கிடையே உன்னதத் தன்மையை இழந்து வேறு யாராவது அறிவுரை பகர வேண்டிய கையறு நிலையில் இன்று நாம் உள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

பாடசாலைளில் ஏற்படும் முரண்பாடுகளை சுமுகமாக தீர்த்துக் கொள்ளாது சுயநலம் சார்ந்து அரசியல் நோக்கங்களுக்காக அவற்றைத் திசை திருப்பி அவற்றால் ஏற்படும் விளைவுகளை தவறாகப் பயன்படுத்தும் உள்நோக்கம் கொண்ட பொறுப்பற்ற செயற்பாடுகள் மற்றும் தேவைகளும் அவை சார்ந்த கோரிக்கைகளும் தீர்மானம் எடுத்தல்களும் யதார்த்தமானவையாகும். அவை ஏற்றுக் கொள்ளப்படுவதும் நிராகரிக்கப்படுவதும் சாதாரண நிர்வாக நடைமுறைகளாகும். இவற்றில் ஏதும் அறியாத, இதனால் ஏற்படும் எதிர்கால பாதகமான விளைவுகளை உய்த்தறிய முடியாத மாணவர்களைப் பயன்படுத்துவதும் அதற்கான சூழலை உருவாக்குவதும் கல்விப் புலத்தில் மிகவும் கண்டிக்கத்தக்கவை ஆகும்.

எங்கள் பிரதேசத்தின் வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க பெண்கள் கல்லூரிகளில் ஒன்றான இந்தக் கல்லூரியில் பயின்று வரும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் மலினப்படுத்தப்படுத்தப்படுவதற்கு எவரும் இடமளித்தல்கூடாது. குறித்த பிரச்சினைகளுக்குரிய சம்பவங்களில் மாணவர்கள் தாக்கப்பட்டிருப்பின் அது கண்டனத்துக்கும் விசாரணைக்கும் உரியதாகும்.

பாடசாலை என்பது மாணவர்களை முதன்மை மையமாகக் கொண்டதாகும் என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் கருத்தில் கொள்வதோடு உன்னதமான கல்விச் சேவையை சமூகத்துக்கு வழங்குகின்ற ஆசிரியர்கள் தங்கள் பொறுப்புக்கள், கடமைகள், வரையறைகள், ஒழுங்கு விதிகளை, கருத்தோடு கவனத்தில் எடுத்து மாணவர்களதும், தங்களதும், சமூகத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஆசிரியத்துவத்தைப் பாதுகாக்க வேண்டும் என வினயமுடன் வேண்டிக் கொள்கிறோம் – என்றுள்ளது.

(ற-ரி7)

# ஏனைய மாகாணங்களின் நிதி திரும்பிச் செல்வது இல்லையா?

## வடக்கு விவசாய அமைச்சர் கேள்வி

வவுனியா, செப். 15

இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கு கொழும்பு அரசால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்கின்ற பிரச்சினை இல்லையா? ஏனைய மாகாணங்களில் செயற்பாடுகள் நடைபெறவில்லையா? வடக்கு மாகாணமும், வடக்கு மாகாண முதலமைச்சரும்தான் அதிகம் பேசப்படுகின்ற நிலமை காணப்படுகின்றது.

– இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.



வவுனியா அரச விவசாயப் பண்ணையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது–

எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை கொழும்பு அரசுக்குத்திருப்பி அனுப்புவது கிடையாது. இன்று வரையில் அறுபது வீதமான நிதி எமது அமைச்சு ஊடாக செலவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி ஆண்டு இறுதிக்குள் செலவு செய்யப்படும். எங்களுடைய அமைச்சைப் பொறுத்த வரையில் எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதி திரும்பிப் போவது கிடையாது. நாங்கள் தேவையற்றுச் செலவு செய்வதும் கிடையாது. கொழும்பு அரசுக்கு இந்த நிதியைப் பயன்படுத்தாமல் திரும்பிப் போவதற்கு அனுமதியளிப்பதும் கிடையாது.

எமது அமைச்சால் இன்னமும் செலவு செய்யப்படாத நிதி, ஆண்டு இறுதிக்குள் செலவு செய்து முடிக்கப்படும். இதன் அர்த்தம் இனிமேல்தான் அந்த நிதிக்கு திட்டம் தீட்டப் போகின்றோம் என்பது அல்ல. ஏனைய அனைத்து மாகாணங்களையும் விட மிக வினைத்திறனுடன் எமது மாகாணம் இயங்கி வருகின்றது. அதிகம் பேசப்படுகின்ற மாகாணமாக வடக்கு மாகாணம் இருக்கின்றது. அதே போல அதிகம் விமர்சிக்கப்படுகின்ற மாகாணமாகவும் வடக்கு மாகாணமே இருக்கின்றது. அதிகம் பேசப்படுகின்ற முதலமைச்சராக எங்களுடைய வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இருக்கின்றார்.

எமது மாகாணம் போர் நடந்த ஒரு மாகாணம். யாருக்கும் தலை வணங்காமல் தன்னுடைய மனதில் படுகின்றதை சரி என்று முகத்துக்கு நேராக சொல்லக்கூடிய ஒரு முதலமைச்சர் கிடைத்துள்ளார். தமிழ் பேசுகின்ற மக்களுடைய அரசியல் அபிலாசைகளுக்காக எந்த விதமான தயக்கமும் இன்றி வெளிநாடுகளிலிருந்து தேடிவருகின்ற தூதுவர்களுக்குக் கூட உரத்துச் சொல்லுகின்ற ஒரு முதலமைச்சர்தான் விக்னேஸ்வரன். இது ஊடகங்களில் அதிகம் பேசப்படுவதற்கு காரணமாக இருக்கின்றது என்றார். (ற-5-ரி1)

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் 27ஆம் திகதி

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும். தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற அபி விருத்தித் திட்டங்கள் தொடர் பாக கடந்த 31 ஆம் திகதி வரை யான முன்னேற்ற அறிக்கைத் திட்டங்களை மேற் கொள்ளும் போது தடைகள் இருப்பின் அவை பற்றிய விவரம், திட்டங்கள் தொடர்பான ஒளிப்படங்கள், 2016 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறவேண்டிய திட்டங்களின் விவரங்கள் போன்றவற்றை அனுப்புமாறு திணைக்களத் தலைவர்களுக்கு மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ற-9)


# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாதேவி சரவணபவான்



நெட்டிலிப்பாய் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாதேவி சரவணபவான் 13.09.2016 செவ்வாய்க்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணபவானின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - சொர்ணம் தம்பதியரின் அன்பு மருமகளும், பரமேஸ்வரி, சிவலோகநாதன், சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசரத்தினம், யோகேஸ்வரி, ரதிக்குமாரி, நவரத்தினராசா, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், லதீஸ்குமார், லதா, விஜிதா, சுஜாத்தா ஆகியோரின் அன்புத் தாயும், சித்திரா, பாலேந்திரன், சிறிஸ்கந்தராஜா, நந்தகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியும், அஜய்குமார், சங்கரி, சகானா, சரத் பவோஜன், சங்கவி, ரஷீபன், ரிஷோபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 959 9480 / 075 053 1973 (ஜே.4609) (13.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுத்தூர் நீர்த் தாங்கியிலிருந்து கிராமங்களுக்கு நீர் இணைப்பு

மன்னார், செப்.15

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் முன்னெடுக்கப்பட்ட உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்கு அமைவாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மன்னார் எழுத்தூர் நீர்த் தாங்கியிலிருந்து அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு உள்ளக குடிதண்ணீர் இணைப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தாழ்வுபாடு, பட்டித்தோட்டம், கீரி, தாராபுரம் ஆகிய கிராமங்கள் உள்ளடங்கலாக நீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய நீர் இணைப்பைப் பெற விரும்புவோர் தங்களது பகுதியிலுள்ள கிராம அலுவலர் அல்லது மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்பு கொண்டு இணைப்பை பெற்றுக் கொள்ளுவதற்கான விண்ணப்பப்படிவங்களை பெற்று, புதிய நீரிணைப்பைப் பெற்றுக்கொள்ளுமாறு மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர். (ந-56)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போராட்டம் வேலை நிறுத்தமானது

## தீர்வு கிடைக்கும் வரை தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.15

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பணிப் புறக்கணிப்பு போராட்டம் முழு நேர வேலை நிறுத்தப் போராட்டமாக மாற்றம் பெற்றுள்ளது.

முன்வைக் கப்பட்ட கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் போராட்டம் தொடரும் என வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது-

திறமையானதொரு சேவையைப் பெற்றுக்கொள்ளவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு உரிய அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்கவும் ஒருங்கிணைந்த நாடு முழுவதுமான தொழில்நுட்ப உத்தியோ கத்தர் (குடிசார், மின்சாரம், இயந்திரவியல்) தனியானதொரு சேவையொன்றை உருவாக்குதல், அரச தொழில் நுட்பவியலாளர் நிறுவனம் அமைத்தல் அதன் மூலம் தொழில் வாண்மை விருத்தியை மேம்படுத்திக் கொள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி பாடத்திட்டங்களில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல், அரச அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் பயின்ற டிப்ளோமா பட்டதாரிகளை உகந்த தொழில்சார் கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் தரமான நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளுதல்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் தொழில்சார் தகைமைகளைக் குறைத்து நியமனம் செய்வதன் மூலம் வளமான நாட்டின் அபிவிருத்தியின் தரத்தை குறைப்பதை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளல், ஒழுங்கு முறையாக தயாரிக்கப்பட்ட இடமாற்றம், பதவி உயர்வு செயற்பாடுகளை ஏற்படுத்தல், தொழில் சார் கொடுப்பனவு, வெளிக்களக் கொடுப்பனவு, தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் தொலைபேசிக் கொடுப்பனவு பெற்றுக் கொடுத்தல் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் தொடரவுள்ளது.

கோரிக்கைகளுக்கான தீர்வுகள் கிடைக்காதவரை தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் நலன் கருதியும், கொழும்பு அரசாலும் மாகாண அரசாலும் முன்னெடுக்கப்பட்டு வரும், அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய காலங்களில் முடிவுறுத்த வேண்டியதையும் கருத்தில் கொண்டும், எமது வேண்டுகோள்களுக்கான உரிய தீர்வை மாகாண மற்றும் கொழும்பு அரசுகளினூடாக ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றுள்ளது. (ந-5-ரி)

> “அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய காலங்களில் முடிவுறுத்த வேண்டிய தையும் கருத்தில் கொண்டும் உரிய தீர்வை மாகாண மற்றும் கொழும்பு அரசுகளினூடாக ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.”

## அணையாத நினைவுகளுடன் நான்காண்டு



திருமதி
யோகமலர் இரத்தினசிங்கம்

மண்ணில் 31.10.1947
விண்ணில் 30.08.2012

திதி : 15.09.2016 சதுர்த்தசி

கண்ணில் மணிபோல எமைக்காத்து
மண்ணில் வளமோடு வாழவைத்து
கண்ணில் தெரியும் தெய்வமென
வாழ்ந்த அன்னையே யோகமலர் மம்மியே!
இன்று நீங்கள் மறைந்து நான்காண்டுகள் ஆனாலும் உங்களை
என்றும் மறக்கும் இதயம் இல்லை எமக்கு
ஆண்டுகள் நான்கு ஆனதே!
அன்புத் தெய்வமே உமைப்பிரிந்து...
அன்பு முகமும் இனிய பேச்சும் புன்னகையும்
இப்பொழுதும் நினைவில் நிழலாடுதே!
இன்பவாழ்வு நாம்வாழ
எமக்கு இனியவை பல செய்த உம்மை
எப்படித்தான் மறப்போம் குலவிளக்கே!
இன்றும் என்றும் நினைப்போம்!
உடன் பிறந்தோர் உள்ளங்களில் நீங்கள் வாழ
ஊரும் உறவும் உங்களைச்சுமக்க
நீங்கள் மறைந்து சென்றதே நான்காண்டுகள்

(ஜே.4574) (13.18)

அணையாத நினைவுகளுடன்
கணவர், [illegible]
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 077 254 5370

## பதினேழாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 13.06.1981
சந்நிதியான் அடியில் 25.08.1999

செல்வி திருமகள் கனகசபை

திதி: சதுர்த்தசி

பத்தொடு ஏழாண்டுகள் ஓர் பகலாய் மறைந்ததுவோ
பாரிலிருந்த எம் மகள் பேரொளியில் கலந்தனளோ
பாவிகள் என எண்ணி எமை பாடாய் படவைத்த தேனோ -உன்
பாவை நினைவுகளை மட்டும் எம்முடன் விட்டுச் சென்றதேனோ

தேரேறி வந்த ஆற்றங்கரை வேலவன் - எம்
வேராகிய உன்னை தன் வேலோடு அணைத்தானோ
வேரின்றிய மரமாய் நாம் வேதனையால் வாடுகிறோம்
வேலவனின் அருளால் நாம் ஆறுதல் அடைவோம்

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

த.மு: 125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தில் 13 சதவீதம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

## மாவட்ட புள்ளி விவரங்கள் தெரிவிப்பு

வவுனியா, செப்.15
வவுனியா மாவட்டத்தில் உள்ள குடும்பங்களில் 13 சதவீதமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகும். மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 54 ஆயிரத்து 622 குடும்பங்கள் உள்ளன. அவற்றில் 6 ஆயிரத்து 893 குடும்பங்களுக்குப் பெண்கள் தலைமை தாங்குகின்றனர். இவ்வாறு வவுனியா மாவட்டச் செயலகப் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவித்தன.

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 604 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 972 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 782 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 621 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் உள்ளன.

> “ வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 385 குடும் பங்களும், வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 282 குடும் பங்களும், வவுனியா வடக்கில் 317 குடும் பங்களும், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 10 குடும் பங்களும் போரால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக மாற்றப்பட்டுள்ளன ”

6 ஆயிரத்து 893 பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் 914 குடும்பங்கள் நேரடியாகப் போரால் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களாகும்.

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 385 குடும்பங்களும், வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 282 குடும்பங்களும், வவுனியா வடக்கில் 317 குடும்பங்களும், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 10 குடும்பங்களும் போரால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக மாற்றப்பட்டுள்ளன. (ற-5-101)

# சாவகச்சேரியில் 8 மாதங்களில் 53 பேருக்கு டெங்குத் தொற்று

சாவகச்சேரி, செப்.15
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களில் மீசாலை மேற்குத் தவிர்ந்த ஏனையவற்றில் கடந்த எட்டு மாதங்களில் 53 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன.



நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிகரித்து வரும் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற போது இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ், சுகாதார வைத்திய அதிகாரி திருமதி திருமகள் சிவசங்கர், மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம் உட்பட பலர் உரையாற்றினர்.

கருத்தரங்கில் 11 பிரிவின் கிராம அலுவலர்கள், வாழ்வின் எழுச்சி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

டெங்கு நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு கிராம அலுவலர் பிரிவுதோறும் உருவாக்கப்பட்டு செயற்படாமல் உள்ள கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்களின் செயற்பாட்டை அதிகரித்து ஒவ்வொரு வாரமும் தத்தமது பிரிவுகளில்உள்ள வீடுகளுக்குச் சென்று பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த எட்டு மாதங்களில் டெங்குத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 200ஐத் தாண்டியுள்ளது. அவர்களில் 70 வீதமானோர் பல்வேறு தேவைகளுக்காக தென்னிலங்கை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் தங்கிவிட்டு வந்த வர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# படகுகளைப் பதிவு செய்யாதவர்கள் உடன் பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

## இதுவரை 6 ஆயிரம் படகுகளே பதிவு

யாழ்ப்பாணம், செப்.15
யாழ். மாவட்டத்தில் பாவனையில் உள்ள படகுகளாக இதுவரை 6 ஆயிரத்து 353 படகுகள் மட்டுமே பதியப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
யாழ். குடாநாட்டில் உள்ள கடற்றொழில் பரி சோதகர்கள் பிரிவில் தொழில் புரியும் அனைத்துப் படகுகளையும் பதிவு செய்யுமாறு அறிவித்தல் விடுத்திருந்தோம். நேற்று வரை யாழ். மாவட்ட திணைக்களத்தின் எல்லைப் பரப்புக்கு உட்பட்ட பகுதிகளில் மொத்தமாக 6 ஆயிரத்து 353 படகுகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் 2015ஆம் ஆண்டின் உறுதி செய்த தகவலின் பிரகாரம் 6 ஆயிரத்து 771 படகுகள் உள்ளன. கடந்த ஆண்டு பதிவிடப்பட்ட படகுகளில் 418 படகின் உரிமையாளர்கள் இதுவரை தமது பதிவுகளை மேற்கொள்ளவில்லை.

பல புதிய படகுகளும் தருவிக்கப்பட்டன. கணிப்பிப் பின்படி இன்னும் பலர் பதிவை மேற்கொள்ளவில்லை. பதிவு செய்யாத படகு உரிமையாளர்கள் உடனடியாகக் கடற்றொழில் பரி சோதகர்களை நாடி பதிவு செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படும் எந்த வகையான திட்டங்கள், அனுமதிகள், மானியங்கள் ஆயினும் இறுதியாண்டின் பதிவின் பிரகாரமே மேற்கொள்ளப்படும். இந்தப் பதிவின் அடிப்படையிலேயே திணைக் களம்மாவட்டத்துக்கான அனுமதிகளை வழங்கும் என்பதால் குறித்த பதிவு முக்கியமானது - என்றார். (ற-101)

# உருவாக்கும் அரசமைப்பு திருப்திகரமாக அமையும்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை

திருகோணமலை, செப்.15
நாட்டின் மிக முக்கியமான இரண்டு கட்சிகளும் சேர்ந்து உருவாக்கும் புதிய அரசமைப்பு திருப்திகரமானதாக அமையும் என்று நாம் நம்புகின்றோம். இந்த அரசமைப்பின் ஊடாக இலங்கையில் உள்ள சகல இன மக்களும் நல்லிணக்கத்துடனும் புரிந்துணர்வுடனும் ஒத்துழைப்புடனும் வாழ வேண்டும் என்பதே எமது நோக்கம்.

இவ்வாறு எதிர்கட்சித் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பிருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இணைத் தலைவர் களுள் ஒருவராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
1978ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த அரசமைப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் கொண்டு வரப்பட்டது. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் மக்களும் அங்கீகாரம் வழங்கவில்லை.

1978 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொண்டு வரப் பட்ட அரசமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டு வரப்பட்டது. அதற்கு சிறிலங்கா சுதந்திர கட்சியும் தமிழ் மக்களும் அங்கீகாரம் வழங்கவில்லை.

தற்போது நல்லாட்சியில் இலங்கையில் அரசியலில் முதல் முறையாக இந்த இரண்டு பிரதான கட்சிகளின் தலைவர் களும் சேர்ந்து ஆட்சியை அமைத்துள்ளனர். இவர்கள் நாட்டின் பிரச்சினையைத் தீர்க் கக் கூடிய வகையில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவார்கள் என்று நம்புகின்றோம் - என்றார். (ற-5-40)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3,225 ஆசிரியர்களுக்கு ஒக்ரோபர் 4 நியமனம்

கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்த 3 ஆயிரத்து 225 பேருக்கு அடுத்த மாதம் 4ஆம் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட இருப்பதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அலரி மாளிகையில் மு.ப. 10 மணிக்கு இந்த நிகழ்வுநடைபெறவுள்ளது. இவர்களது நியமனம் அந்த மாதம் முதல் நடைமுறைக்கு வருமென்றும் கல்வி அமைச்சின் கல்விச் சேவைகள் உள்ளக மேலதிக செயலாளர் ஐ.எம்.கே.பி.இங்கசிங்ஹ தெரிவித்தார்.

ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் தேசிய மற்றும் மாகாண சபைப் பாடசாலைகளில் இவர்கள் சேவையில் அமர்த்தப்படுவார்கள். பின் தங்கிய பாட சாலைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும். ஆயிரத்து 46 தமிழ்மொழி ஆசிரியர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டுக்குக் கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த மாதம் 30 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். இந்த முறை கல்வியியல் கல்லூரிகளுக் குச் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

# மருத்துவர்கள் ஓய்வு வயது 63

## அனுமதியளித்தது அமைச்சரவை

கொழும்பு, செப். 15

நாட்டில் மருத்துவர்களுக்கான வெற்றிடம் காணப்படுவதால், மருத்துவர்கள் ஓய்வு பெறும் வயதை 63 ஆக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயது தற்போது 60. ஆனால் இதை 63 ஆக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டில் தற்போது ஆயிரத்து 164 மருத்துவர்களுக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. இவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ள அனுபவமிக்க மருத்துவர்களின் ஓய்வூதிய வயதை மூன்று வருடங்கள் அதிகரிப்பதால் மருத்துவர்களுக்கு நிலவும் வெற்றிடங்களைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அமைச்சர் ராஜித கூறினார். (த-5)

# போர் குறித்து புத்தகம் எழுதும் பொன்சேகா

போர் பற்றிய புத்தகமொன்றை எழுதவுள்ளதாக பீல்ட் மார்சலும், அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

புத்தகங்களை எழுதுவதன் ஊடாகப் போர் இரகசியங்களை வெளியிடுபவர்களைத் தண்டிக்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

போர் ஒரு வரலாற்றை உருவாக்கியுள்ளது. அது எவ்வாறு நடைபெற்றது, இறுதியில் அது எவ்வாறு வெற்றியாக மாறியது என்பது உள்ளிட்ட பல விடயங்களை தனது புத்தகத்தில் உள்ளடக்கவுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

புத்தகத்தை எழுதி அச்சிடுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை தாம் முன்னெடுத்துள்ளதாகவும், அடுத்த வருடம் அதனை வெளியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தில் இருந்து கடந்த 5 ஆம் திகதி ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி கமால் குணரத்ன 'நந்திக்கடலுக்கான பாதை' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ள நிலையில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# நுழைவிசைவு சலுகை இடைநிறுத்தம்

## விளக்கம் கோருகிறது பங்களாதேஷ்

கொழும்பு, செப். 15

பங்களாதேஷ் பிரசைகளுக்கான நுழைவிசைவு சலுகை இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்கவேண்டுமென பங்களாதேஷ் அரசு, இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பங்களாதேஷ் பிரசைகள் நாட்டை வந்தடைந்ததும் நுழைவிசைவு பெற்றுக் கொள்ளும் வசதியைக் கடந்த வாரம் இலங்கை அரசு வழங்கியிருந்தது. தற்போது எவ்வித முன்னறிவித்தலும் இன்றி பங்களாதேஷ் பிரசைகளுக்கான நாட்டை வந்தடைந்ததும் நுழை விசைவு பெற்றுக் கொள்ளும் வசதியை இடை நிறுத்தியுள்ளது. இந்த வசதி இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை இலங்கை தெளிவுபடுத்தவேண்டுமென பங்களாதேஷ் கோரியுள்ளது.

பங்களாதேஷ் அரசு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை பிரசைகளுக்கான நாட்டை வந்தடைந்ததும் நுழைவிசைவு வழங்கும் நடைமுறையை இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. பங்களாதேஷுக்கான இலங்கைத் தூதுவர் யசோஜா குணசேகரவை அழைத்து இது தொடர்பில் அறிவித்துள்ளதாகவும் அந்த நாட்டு அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் அரசின் அயலுறவுகளுக்கான மேலதிக செயலளர் கம்ருன் அசான் தெரிவிக்கையில், சுமார் ஒரு மணித்தியாலம் இலங்கைத் தூதுவருடன் பேச்சு நடத்தியதாகவும், இந்த விடயம் தொடர்பில் தங்கள் நாட்டின் அதிருப்பதியை வெளிப்படுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ள தூதுவர் யசோஜா குணசேகர, எவ்வாறெனினும் அயலுறவுத்துறை அமைச்சுடன் பேசியதன் பின்னர் இது குறித்துத் தெளிவுபடுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த-5)

நிர்மாண இரசாயனப்பதார்த்தங்கள் மற்றும் பொறியியல் தீர்வுகள்




30 வருடங்களுக்கு மேலான அனுபவம்

FINCO ENGINEERING (PVT) LIMITED
+94 112 546 052 / +94 117 513 500 www.fincoengineering.com
FINCO
MediaWize.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கடத்தலை தடுப்பதில் தீவிரம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, செப். 15
போதைப் பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வருதலை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் கடந்த காலங்களை விட முறையாகவும் - திட்டமிட்ட வகையிலும் - செயற்றிறனாக முன்னெடுத்தல் தொடர்பாக அரசு கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 'மதுவிலக்கு விருது விழா' நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
எமது நாடு ஓர் அழகிய தீவாகக் காணப்படுகின்றது. கடத்தற்காரர்கள் அதனைப் பிழையாகப் பயன்படுத்துகின்றனர். இன்று வெளிநாடுகளில் இருந்து பெரியளவிலான போதைப் பொருள்கள் எமது நாட்டுக்குக் கடத்தப்படுவது பாரதூரமானதொரு சவாலாக மாறியுள்ளது.
நாட்டில் புகைபிடித்தல் ஒப்பீட்டு ரீதியாகக் குறைவடைந்துள்ள போதிலும் போதை மாத்திரைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. போதைப் பொருள், போதை மாத்திரைகள் போன்றே சட்டவிரோத மதுசாரங்கள் இன்று பாடசாலைகளுக்கு அண்மையிலும் கிராமங்களிலும் வியாபிக்கத் தொடங்கியுள்ளது.
இதனைத் தடுப்பதற்காக அரசு உயர்ந்தபட்ச நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.
இந்தப் பணியினை அரசினால் மாத்திரம் வெற்றி கொள்ள முடியாது. சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த அனைவரினதும் கூட்டுப் பொறுப்புடன் இதனை மேற்கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.
போதைப் பொருள்களுக்கு அடிமையான நபர்களின் தராதரம் எதுவாக இருப்பினும் அவர்களைச் சமூகத்திலிருந்து ஓரங்கட்டாது மனதில் உள்ள பீதியை அகற்றிச் சமூகத்தின் உயர் அந்தஸ்து வரை அவர்களை உயர்த்தி ஊக்கப்படுத்துவதன் மூலம் சமூகப் பொறுப்புள்ள மற்றும் கடமைப் பொறுப்புள்ள நபர்களாகச் சமூகமயப்படுத்துதல் முக்கியமான பொறுப்பாகும் - என்றார். (த-5)

## பன்னாட்டு வெசாக் 2017 இலங்கையில்

கொழும்பு, செப். 15
பன்னாட்டு வெசாக் தின உற்சவத்தை 2017 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையானது பௌத்த மக்களுக்கு முக்கியமானது என ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார்.
இந்த விழா ஏற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான முக்கியமான கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.
பௌத்த நாடுகளை மையப்படுத்தி வருடா வருடம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு வெசாக் தின உற்சவம் 2017ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முறையாக நடைபெறவுள்ளது.
பன்னாட்டு வெசாக் தின உற்சவத்தில் இந்தியா, சீனா, ஜப்பான், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், மியன்மார், லாவோஸ், திபெத், பூட்டான், மொங்கோலியா உள்ளிட்ட பௌத்த நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.
வெசாக் தின உற்சவத்தை அரச அனுசரணையுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி இதன்போது அமைச்சுக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பணிப்புரை விடுத்தார்.
வெசாக் தின உற்சவ ஏற்பாடுகளுக்காக அமைச்சரவை உப குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு ஆலோசனை வழங்கினார்.
இந்த உற்சவத்தை வெற்றியடையச் செய்வதற்காக ஏற்புடைய முன்னேற்ற மேற்பார்வைகளை மேற்கொள்வதற்குத் தன்னுடைய தலைமையில் மாதாந்தம் கூட்டமொன்றைக் கூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அறிவுரை வழங்கினார். (த-5)



## எயர்சீவ் மார்சலாக ககன் புளத்சிங்கள

கொழும்பு, செப். 15
விமானப்படைத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற ககன் புளத்சிங்கள எயர்சீவ் மார்சலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
1981 ஆம் ஆண்டு விமானப் படையில் இணைந்து கொண்ட எயர் சீவ் மார்சல் ககன் புளத்சிங்கள, 33 ஆண்டுகள் சேவையாற்றிய நிலையில் கடந்த திங்கட்கிழமை ஓய்வுபெற்றார்.
நான்கு முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரின் மிக முக்கிய பிரமுகர்களுக்கான உலங்கு வானூர்தி விமானியாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.
ஓய்வுபெற்றுச் செல்லும், எயர் சீவ் மார்சல் ககன் புளத்சிங்கள பாதுகாப்பு அமைச்சில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி ஆகியோரைச் சந்தித்து விடைபெற்றுக் கொண்டார். (த-5)

## இந்திய அரசுக்கு அறிவிக்கவில்லை

### சம்பூர் அனல் மின் திட்டம் கைவிடப்படல் தொடர்பில்

கொழும்பு, செப். 15
சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தைக் கைவிடுவது தொடர்பாக இலங்கை அரசு இந்தியாவுக்கு அறிவிக்கவில்லை என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.
இந்தியாவுடன் இணைந்து கூட்டு முயற்சியாக [illegible] திட்டமிட்டிருந்த சம்பூர் அனல் மின் திட்டத்தைக் கைவிட்டுள்ளதாக, சட்டமா அதிபர் மூலம் அரசு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றத்தில் அறிவித்தது.
இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர், சிறிவத்சவா,'சம்பூர் விவகாரம் தொடர்பாக எந்த விடயங்களையும் இலங்கை அரசு இதுவரை தெரியப்படுத்தவில்லை' என்று தெரிவித்தார். (த-5)




### தேரேறி வருகிறான் சந்நிதி வேலவன்

ஆற்றங்கரைதனில் வீற்றிருக்கும் சந்நிதிவாழ் முருகா!
அருள் வேண்டி வருவோர்க்கு வரமருளும் முருகா!
அடியவர்க்கு அமுதளிக்கும் அன்னதானக் கந்தா!
பச்சைமயில் ஏறி வரும் பாலமுருகா!
பரமனுக்கு உபதேசம் செய்த பால முருகா எம்
தலைமைகளுக்கு நல் உபதேசம் செய் பாலமுருகா
தேவர் சிறை மீட்டுக் காத்த வேலவா
எம்மக்களை இனியும் அல்லல் பட விடாதே ஆறுமுகா!
தமிழர் குலம் தனைக் காத்திட இன்று
தேரேறி வருகிறான் சந்நிதி வேலவன்

- நயினை விசு இராசநாயகம்.

### இன்பமெல்லாம் தந்திட ஏறுமயில் வாகனன் வருவான் திருவீதியிலே

தனித் தமிழ் நாதம் தரணியில் ஓங்க
தமிழிசை பண்பட
திரணி புகழும் சந்நிதிக் குமரன்
அருள் வடிவேலாகி
இன்பமெல்லாம் தந்திட ஏறுமயில் வாகனன்
வருவான் திருவீதியிலே
இசைத் தமிழரங்கம் கண்ட நற்சுவையென
திகழும் திருவுடையோன்
கலங்கும் அடியவர் வேதனை போக்கிடும்
வேதாந்த வேலனவன்
தரணி யெங்கும் தமிழிசை முழங்கிட
நற்றமிழ் பண்பாட
சந்நிதிக் குமரன் அன்னதானக் கந்தன்
இவனடி பணிமனமே

- கலாபூசணம் க. லோகேஸ்வரன் தொல்புரத்தூர்

### ஆற்றுவாய் ஆறுமுகா!

நேற்று நிகழ்ந்தது தான் இன்றும் நடக்குதையா!
மாற்று இல்லையோ? மால் மருகா! ஆற்று
எங்களது ஆறாத் துயர் தீர்! நாளை
எங்கும் விடிவு மலர்ந்திடவே!

– நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்



செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (15.09.2016) வியாழக்கிழமை
தேர்த் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை
நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை பகல்,
இரவு என வழங்கிவருகிறது
BUS BOOKING
வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
உடனடித் தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| கொழும்பு | + 94 77 544 9251 |
| யாழ்ப்பாணம் | + 94 77 544 8503 |
| வல்வெட்டித்துறை | + 94 21 226 1977 |
| | + 94 77 544 7359 |
| நெல்லியடி | + 9477 285 0285 |
| பருத்தித்துறை | + 9477 555 2973 |

| | காலை | இரவு |
|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 am | 7.00pm |
| யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00pm |
| வெள்ளவத்தை | 7.30 am | 7.30pm |
| கொட்டஹேனா | 8.30 am | 8.30pm |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மகிந்த அரசின் பாதையில் நல்லாட்சி அரசும் நகர்கிறதே!

உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே என்ற சங்கேத மொழி ஒன்று தமிழில் உண்டு. மற்றவர்களை ஏய்க்காட்டி, தான் அவர்களுக்கு உதவிடப் போவதாக வாய் வேதாந்தம் பேசுபவர்களையே மேற்கண்டவாறு குறிப்பிடுவது வழக்கம்.

இந்தப் பத்தி, அது குறித்து எதனை விளாசப் போகிறது என்று நீங்கள் அங்கலாய்ப்பது தெட்டெனப் புலப்படுகிறது. எதற்கான பீடிகை என்று நீங்கள் முணு முணுப்பதும் கேட்கிறது.

எங்கள் நாட்டில் வாழும் இனங்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கு நல்லாட்சி அரசு முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் குறித்து, அனைத்துலக நாடுகளுக்குப் "பீற்றுவதற்காக", அமைச்சர் மகிந்த சமரசிங்கா, வெனிசுலாவில் நடைபெறும் அணிசேரா நாடுகள் அமைப்பின் 17ஆவது உச்சி மாநாட்டில் பங்குபற்றும் சிறப்புப் பிரதிநிதியாக அரசால் நியமிக்கப்பட்டு அங்கு சென்றுள்ளார்.

சும்மா சொல்லக்கூடாது, ஜனாதிபதியின் சிறப்புப் பிரதிநிதியாக மாநாட்டில் அவர் கலந்து கொண்டுள்ளார். உச்சி மாநாட்டில் பங்குபற்றும் உலகத் தலைவர்களுடனும் அமைச்சர்களுடனும் பேச்சு நடத்துவதோடு, சிறப்புரை ஆற்றுவதற்கும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், உள்ளக விசாரணைப் பொறிமுறை, நாட்டின் நீதித்துறையின் சுயாதீனம் என்பவை குறித்து அமைச்சர் மகிந்த சமரசிங்க அனைத்துலகப் பிரதிநிதிகளுக்கு விளாசித்தள்ளி, விளக்கம் அளிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பின்னோக்கிப் பார்த்தால், கடந்த கால அரசின் ஆட்சியின்போது, அதன் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் வகையில் களத்தில் இறக்கப்பட்டவர் அமைச்சர் மகிந்த சமரசிங்க.

அப்போது, அவர் மகிந்த ராஜபக்ச அரசின் நிலைப்பாடுகளை, ஐ.நாவில் ஊன்றி ஒலிபரப்பும் பங்கை வகித்தார் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய பிரதான அம்சம் எனின் தப்பன்று.

மறுபுறத்தில் --

போர்க்குற்ற விசாரணை விடயம் முடிவேதுமின்றி இப்போதும் தளர்ந்து, மெலிந்து தொங்கிக் கொண்டே இருப்பதும்--

தமிழ் மக்களின் பூர்வீகச் சொத்தான காணிகள், படையினரால் அபகரிக்கப்பட்டுள்ள நிலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் தொடர்வதும்--

தமிழ் மக்களின் அகதி வாழ்வு தொடர்வதும்--

தமிழ் அரசியல்கைதிகள் விடுதலை செய்யப்படாமல் இருப்பதும் --

கொலைவெறிச் சட்டம் எனக் கருதவல்ல பயங்கரவாதச் சட்டம், நீக்கப்படாமல் பொன்பூசி அழகுபடுத்தப்படுவதும்--

நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகள் நூற்றுக்கு நூறு வீதம் பின்தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதிலும் இருந்து, நல்லாட்சியின் பொட்டுக்கேடு, கையாலாகாத்தனம் புலப்படுகிறது எனலாம்.

மகிந்த அரசின் பாதையிலேயே, நல்லாட்சி அரசும் கட்டியம் கூறி காலத்தைப் போக்கி வருகிறது என்ற நிலையே நாளாந்தம் உயர்ந்து வருகிறது!



மிலே டீமெர்

# பிரேஸில் நாட்டின் அரசியல் உறுதியடைய வாய்ப்பு அமையுமா?

தமிழில் சுருக்கமாக:
வெ.சந்திரமோகன்

பிரேஸில் நாட்டின் அதிபர் தில்மா ரூசெஃபைப் பதவி நீக்கம் செய்ய எடுக்கப்பட்டிருக்கும் முடிவு, ஜனநாயகத்துக்கும் பிரேஸில் மக்களுக்கும் கிடைத்திருக்கும் வெற்றி. இந்த விடயத்தில் முடிவு வேறு விதமாக அமைந்திருந்தால், அது பிரேஸிலில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்பத்தை மேலும் சிக்கலாக்கியிருக்கும். தில்மா ரூசெஃபின் எதிர்ப்பாளர்கள், விமர்சகர்களிடம் கடும் எதிர்ப்பையும் உருவாக்கியிருக்கும்.

ஆளுங்கட்சியாக இருந்த தொழிலாளர் கட்சியின் ஊழல்கள், அந்தக்கட்சி ஆட்சியைப் பிடித்த விதம், அந்தக்கட்சித் தலைவர் லூயி இனா சியோ லூலா மற்றும் தில்மா ரூசெஃப் ஆகிய இருவரும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை ஆகியவற்றின் விளைவுகள் அரசியல் பதிவேடுகளிலிருந்து மறையும் முன்னர், செய்ய வேண்டிய விடயங்கள் நிறைய உள்ளன.

அதிபர் பதவியிலிருந்து தில்மா ரூசெஃபை நாடாளுமன்றம் நீக்கியிருப்பது சரியான நடவடிக்கை தானென்றாலும், எட்டு ஆண்டுகளுக்கு அவர் அதிபர் பதவி உட்பட, எந்தப் பொதுப் பதவியையும் வகிக்கத் தடை விதிக்கும் விடயத்தில் நாடாளுமன்றம் தோல்வியடைந்து விட்டது.

அரசுப் பதவிக்கு ரூசெஃப் மீண்டும் வர முடியாமல் தடுப்பதற்கு வழிவகுக்கும் வண்ணம், கடைசி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட புத்திசாலித்தனமான நடவடிக்கை அது. எனினும், அந்த முடிவை எடுப்பதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைக்காததால் அதற்கான பிரேரணை நிறைவேற்றப்பட இயலாது போய் விட்டது. பிரேஸிலின் 37ஆவது அதிபராக, ஃபெடரேடிவ் ரிபப்ளிக் ஆஃப் பிரேஸில் கட்சித் தலைவர் மிலேல்டீமெர் பதவியேற்றுவிட்டார். அரசியல் வரலாற்றில் அந்தக் கட்சி பெற்றிருக்கும் முக்கிய வெற்றி இதுவாகத்தான் இருக்கக்கூடும்.




தில்மா ரூசெஃப்

அனைவருக்குமான பொதுக் கொள்கையைத் தொடங்குவது, சமூக, பொருளாதார மீட்டெடுப்பு போன்ற பல விடயங்களில் புதிய அதிபர் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அவரது பொறுப்புகள் கடினமானவை. அவர் இனிச் செல்லவிருக்கும் பாதை, தடைகளும் ஆபத்துக் களும் நிறைந்தவை. எனினும், இனி வரப்போகும் நாள்கள், பிரேஸிலுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கை உருவாகியிருக்கிறது. அரசுப் பதவிக்கு ரூசெஃப் வருவதற்கு எட்டு ஆண்டுகளுக்குத் தடை விதிப்பது தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் முடிவை மறுபரிசீலனை செய்வதில் உச்ச நீதி மன்றம் வழிகாண வேண்டும்.

இந்த வாக்கெடுப்புத் தொடர்பாக விசாரிப்பதற்கும், அதன் முடிவுகளை மாற்றுவதற்கும் நீதி அமைப்பு களுக்குச் சட்டரீதியாக ஏதேனும் வாய்ப்பு இருக்கும் பட்சத்தில், அவை தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.


இல்லையென்றால், தொழிலாளர் கட்சி, லூயி இனாசியோ லூலா மற்றும் தில்மா ரூசெஃப் இணைந்து, தங் களுக்கான சந்தர்ப்பம் வரும்வரை காத்திருந்து, பிரேஸிலின் ஜனநாயகத்தின் மீது மீண்டும் தாக்குதல் தொடுக்கும் ஆபத்து ஏற்படலாம். அப்படி எதுவும் நடந்து விடக்கூடாது. பிரேஸில் இனித் தனது எதிர்காலத்தில் கவனம் செலுத்த வேண்டும். திரும்பிப் பார்க்கக்கூடாது. கடந்தகாலம் கடந்து விட் டது. எதிர்காலம் இன்னும் எழுதப்படவில்லை!

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் காய் நகர்த்தல்கள் பயன் தருமா?



சேரலாதன்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைதியான முறையில் அரசியல் காய் நகர்த்தல்களில் ஈடுபட்டு வருகின்றார். முன்னர் ஒரு கால கட்டத்தில் ஐ.தே. கட்சியின் தலைமைப் பொறுப்புக்கூட அவரது கைகளிலிருந்து பறிபோகும் நிலை இருந்ததுண்டு. அந்தக் கட்சிக்குள்ளேயே அவரை எதிர்ப்பவர்கள் பலர் இருந்தார்கள். தேர்தல்களில் கட்சிக்குக் கிடைத்த தொடர்த் தோல்விகள், அவரது கட்சித் தலைமைத்துவத்தை ஆட்டம் காணும் நிலைக்குக் கொண்டு சென்றன. ஆனால், கடந்த ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல், ரணில் குறித்த ஊகங்கள் எல்லாவற்றையும் பொய்யாக்கி விட்டது.

உண்மையில், 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வென்றிருக்க வேண்டியவர் ரணில் விக்கிரமசிங்கதான். அந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்சவிடம் வெறும் ஒருலட்சம் வாக்குகளாலேயே அவர் தேல்வியைத் தழுவினார். 2015 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவைத் தோற்கடிப்பதற்கு உதவிய தமிழர்களின் வாக்குகள் 2005 ஆம் ஆண்டு அளிக்கப்படவில்லை. அப்போது தமிழர்கள் வாக்களித்திருந்தால் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெற்றிருந்திருப்பார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணைத் தலைவர்களில் ஒருவராகப் பணியாற்றிய கருணா என அழைக்கப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் புலிகளின் போர் வெற்றிகளுக்கு ஒரு காரணமாக இருந்தவர். ஒரு கட்டத்தில், சில விடயங்களில் இவருக்கும் புலிகளின் தலைமைக்கும் இடையில் கசப்பு நிலவியது. இந்த நிலையில்தான் கருணா புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றார். ஆனால், இதன் பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க இருந்துள்ளமை பின்னாளில் தெரிய வந்தது. கருணாவை ரணில் புலிகளிடமிருந்து பிரித்தமையால் புலிகள் இயக்கத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டமை உண்மைதான். ரணிலின் ஏற்பாட்டில் கருணா கொழும்புக்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டதும், அங்கு பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டதும் காலம் கடந்து வெளிவந்த உண்மைகள். கடந்த 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கருணாவைப் புலிகளிடமிருந்து பிரித்த விவகாரம் ஐ.தே.கவின் பரப்புரைக் கூட்டங்களில் பிரதான இடத்தை வகித்தது. இந்த விடயத்தைக்கூறி சிங்கள வாக்காளர்களைக் கவர்வதே அந்தக் கட்சியின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முழு ஆதிக்கம் செலுத்திய புலிகள், இதனால் சீற்றமுறுவார்கள் என்பதை ரணில் தரப்பினர் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர். அன்றைய தேர்தல் நிலவரங்களின்படி, தமிழ் மக்களின் வாக்குகள் ரணிலுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்புக்களும் நிறையவே காணப்பட்டன. ஆனால் புலிகளால் விடுவிக்கப்பட்ட கட்டளை, தமிழர்கள் வாக்களிப்பதைத் தடை செய்து விட்டது. இதனால் மகிந்த வெற்றிபெற, ரணில் மீண்டும் தோல்வியைத் தழுவினார்.

> மகிந்த ராஜபக்சவின் கீழ் பணியாற்றிய சாதாரண மனிதராகிய மைத்திரிபால சிறிசேன எவருமே எதிர்பாராத வகையில் தேர்தலில் வெற்றி பெற்று மகிந்தவுக்கு அதிர்ச்சி வைத்தியம் பார்த்திருந்தார். இதற்கான வியூகத்தை வகுத்தவர்களில் ரணில் விக்கிரமசிங்க முக்கியமானவர். இதுவே அவரை அண்மைக்கால அரசியலில் முன்னிலைப் படுத்திவிட்டது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரமான அணுகுமுறைகள் அரசியலின் உச்சத்துக்கு அவரைக் கொண்டு சென்று விட்டன. கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவின் கீழ் பணியாற்றிய சாதாரண மனிதராகிய மைத்திரிபால சிறிசேன எவருமே எதிர்பாராத வகையில் தேர்தலில் வெற்றி பெற்று மகிந்தவுக்கு அதிர்ச்சி வைத்தியம் பார்த்தார். இதற்கான வியூகத்தை வகுத்தவர்களில் ரணில் விக்கிரமசிங்க முக்கியமானவர். இதுவே அவரை அரசியலில் முன்னிலைப்படுத்தி விட்டது.

செல்வச் செழிப்பு மிக்க செல்வாக்கான குடும்பத்தில் பிறந்த ரணில் விக்கிரமசிங்க ஒரு சட்டத்தரணியாவார். முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன இவரது நெருங்கிய உறவினர். இதன் காரணமாகவே 1977ஆம் ஆண்டு இடம் பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன் அமைச்சரவையிலும் இடம்பிடித்துக் கொண்டார். பின்னர் பிரதமர் பதவியை வகிக்கும் அளவுக்கு அரசியலில் அவர் தம்மை உயர்த்திக் கொண்டார். சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் இவர் பிரதமர் பதவியை இழக்க நேர்ந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஐ.தே.கட்சியின் தலைவராக இருந்தவரை கட்சிக்குள் முரண்பாடு ஏற்படவில்லை. அவரது மறைவுக்குப் பின்னர் ஆர்.பிரேமதாஸா கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அந்த வேளையில்தான் காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி ஆகியோர் பிரேமதாஸவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார்கள். ஆனால் ரணில் விக்கிரமசிங்க அப்போதும் அமைதியாகவே இருந்தார். அரசியல் கவர்ச்சி இல்லாதவர் எனப் பலரால் ரணில் விமர்சிக்கப்பட்ட போதிலும், அவற்றையெல்லாம் அவர் கண்டு கொள்ளவேயில்லை.

தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் ரணில் விக்கிரமசிங்க உறுதியான கொள்கை நிலைப்பாடு கொண்டிருக்கவில்லை. சிங்கள மக்களின் ஆதரவை இழப்பதற்கு இவர் ஒரு போதுமே விரும்பியதில்லை. இதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடுவதை ரணில் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்து கின்ற நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுமுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை வீழ்த்துவதற்கு உருவாக்கப்பட்ட கூட்டணி இனிமேல் அமைய இடமில்லை. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ரணில் விக்கிரமசிங்க தமது அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றார். இதற்குப் பலன் கிடைக்குமா? இல்லையா ? என்பதற்குக் காலம்தான் பதில் கூறவேண்டும்.

## காரைநகர், சங்கானை, மானிப்பாய் ஊடாகச் செல்லும் யாழ்ப்பாண வீதி காப்பெற் வீதியாக மாற்றப்படுமா?

இன்றைய இயந்திரமான வாழ்க்கையில், போக்குவரத்து என்பது மிகப் பிரதான பங்கை வகிக்கின்றது. நேர முகாமைத்துவக் கட்டமைப்பில் போக்குவரத்து இன்றியமையாததாக விளங்குகின்றது. இந்தப் போக்குவரத்துக்கு இன்றியமையாததாக அமைவது சிறு வீதிகளும் அவை வந்து இணையும் பெருவீதிகளுமே. எனவே வீதிகள் சீரானவையாக இருத்தல் அவசியமாகும். மேற்படி காரைநகர் யாழ்.வீதியை தொடர்புபடுத்தும் பிரதேசம் பரந்த எல்லைப்பரப்பைக் கொண்டதாகும். இது நான்கு பிரதேச செயலர் பிரிவுகளான காரைநகர், வலி.மேற்கு, வலி.தென்மேற்கு, யாழ்ப்பாணம் உள்ளடக்கியதாகும். யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, சுழிபுரம், மூளாய், பொன்னாலை, காரைநகர் என்ற பிரதேசங்களுடாகச் செல்லும் வீதியான போதிலும், இந்த வீதியை காரைநகர்,மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, சில்லாலை, பண்டத்தரிப்பு, மாதகல், விளான், இளவாலை, தொட்டிலடி, சங்குவேலி, கட்டுடை, சுதுமலை, நவாலி, ஆனைக்கோட்டை போன்ற பல பிரதேச மக்களும் பயன்படுத்தி வருகின்றனர். இந்தப் பிரதேசங்களில் பிரசித்தி பெற்ற பாடசாலைகள், கோயில்கள், கடல்வளத் துறைகள், விவசாய நிலங்கள் அமைந்துள்ளதால் கால்நடை வளர்ப்போர், கூலித்தொழிலாளர்கள், வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவோர் என நாளாந்தம் பல தரப்பட்ட மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த வீதிகளில் உருவாகும் குழிகளைத் தேடிப்பிடித்து அவ்வப்போது கலவை இட்டு உடனடிப் புனரமைப்பைப் பூர்த்திசெய்து சீரற்ற முறையில் திருத்தம் மேற்கொள்ளப்படுவது வழமையானதொரு செயற்பாடாகத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. மழைவெள்ளம் வரும்போது இவை, இந்த வீதிகளில் செல்லும் பெரிய பாரவூர்திகளால் கிளறப்பட்டு மீண்டும் குழிகளாக மாறுகின்றன. இதன் காரணமாக, இந்த வீதியால் பயணிக்கும் வயோதிபர், கர்ப்பிணித்தாய்மார் நேரடிப் பாதிப்புக்குள்ளாகின்றனர். அதாவது நாரிப்பிடிப்பு, குறைப் பிரசவம், முள்ளந்தண்டு வலி, விபத்துக்கள் போன்றவற்றுக்கு அவர்கள் முகம் கொடுக்க நேர்கிறது.

நீண்ட காலமாக மக்கள், அரச அதிகாரிகள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் இது குறித்துத் தெரிவித்த போதிலும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப்படும், எடுக்கப்படுகிறது எனக் கூறுவார்கள். அத்தோடு எல்லாம் முடிந்துவிடும். சொகுசு வாகனங்களில் செல்பவர்களுக்கு இதன் தாக்கம் தெரியாது. உடன் மறந்து விடுவார்கள். வடக்கின் வீதி அபிவிருத்திக்கென அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகின்றது. இந்தத்தருணத்திலாவது குறித்த இந்த வீதி காப்பெற் வீதியாக அமைக்கப்படுமா? அதிகாரிகள் இதுவிடயத்தில் கவனம் எடுப்பார்களா?

வை.கைலைநாதன்.
சுழிபுரம். மத்தி.

## சரியான நடைமுறை குறித்த ஐயத்தைப் போக்குவீர்களா?

பூசைவேளைகளில் கோயில்களில் சிலர் தேவார திருவாசகத்தை ஓதும் போது சுரம் சேர்த்து ஓதுவதைக் கேட்க நேர்கிறது. சுரம் சேர்த்து தேவார திரு வாசகத்தை ஓதுவது முறையா? அல்லது அது தவறா என்பதை தேவார திருவாசகம் ஓதல் நடைமுறை தெரிந்தோர், பண்ணிசை வித்தகர்கள், சங்கீத விற்பன்னர்கள், உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகம் ஊடாக தயவு செய்து அறியத்தந்து எனது ஐயத்தைப் போக்குமாறு பணிவோடு வேண்டுகின்றேன்.

சின்னத்தம்பி. சண்முகசுந்தரம்
கேணிக்கரை, அளவெட்டி
கிழக்கு அளவெட்டி.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்க வனப்பூங்காவில் 750 நீர்யானைகள் மாயம்

பிறிட்டோறியா, செப்.15

தென்னாபிரிக்க தேசிய வனப் பூங்காவில் வசித்த 750 நீர் யானைகள் வேட்டையாடப்பட்டதாக குறித்த பூங்காவின் நிர் வாகத்துக்கு எதிராக ஆர்வலர்களால் குற்றம் சுமத்தப்பட்டது. இங்கிலாந்தின் ஊடகமொன்று இந்தத் தகவலைத் தெரிவித்தது.

குறித்த பூங்காவில் இருந்த நீர் யானைகளின் எண்ணிக்கை கடந்த இரு வருடங்களில் பெருமளவு வீழ்ச்சியடைவது அவதானிக்கப்பட்டதையடுத்து அங்கு நீர் யானைகள் வேட்டையாடப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மறுத்த தென்னாபிரிக்க தேசிய வனப்பூங்காவின் நிர்வாகம் கடந்த இரு வருடங்களில் தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட கடுமையான வறட்சி காரணமாகவே அவை உயிரிழந்தன எனக் குறிப்பிட்டதுடன் 4 ஆயிரத்து 700 காட்டெருமைகளும் உயிரிழந்ததாக மேலும் தெரிவித்தது. (ம-ரி4)



# தமக்கெதிரான உளவாளிகளை கொலை செய்தது ஐ.எஸ்.ஐ.எஸ்.

டமஸ்கஸ், செப்.15

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது காவலில் வைத்திருந்த சிறைக் கைதிகளை கொடூரமாகக் கொலை செய்யும் காணொலியை நேற்று முன்தினம் வெளியிட்டது.

ஹஜ் பண்டிகையின் ஓர் அங்கமாக இதை வெளியிடுவதாக குறித்த அமைப்பு தெரிவித்தது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை உளவு பார்த்த குற்றத்துக்காக தடுத்து வைக்கப்பட்ட கைதிகளே அவ்வாறு கொல்லப்பட்டவர்களாவர். 12 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தக் காணொலியில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் நிகழ்த்தப்பட்ட முந்தைய தாக்குதல்களும் இணைக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக பிரான்ஸில் நைஸ் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்கள், ஏனைய கொலைச் சம்பவங்களும் காண்பிக்கப்பட்டன. (ம-ரி4)



தலைகீழாக தொங்கவிடப்பட்டிருக்கும் கைதிகள்



# குருதிக் காடானது டா
# ஹஜ் திருநாளின் எதி

டாக்கா, செப். 15

பங்களாதேஷின் தலைநகரமான டாக்கா குருதிக் காடாக காட்சியளிக்கிறது.

இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் நாடுகளில் பங்களாதேஷும் ஒன்று. பங்களாதேஷின் மொத்த சனத் தொகையில் 90 சதவீதத்தினர் இஸ்லாமியர்கள். கடந்த 12 ஆம் திகதி ஹஜ் பெருநாள் உலக இஸ்லாமியர்களால் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவிலும் இந்தக் கொண்டாட்டங்கள் மும்முரமாக நடைபெற்றன. ஏராளமாக விலங்குகள் கொல்லப்பட்டு அவற்றின் மாமிசங்கள் சமைக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் அங்கு கடும் மழை பெய்தது. பெருக்கெடுத்த வெள்ளம் ஹஜ் பெருநாளுக்காகக் கொல்லப்பட்ட விலங்குகளின் குருதியுடனும், ஏனைய கழிவுப் பாகங்களுடனும் கலந்து எங்கும் குருதிக் காடாக காட்சி தருகிறது.

> ஏராளமாக விலங்குகள் கொல்லப்பட்டு அவற்றின் மாமிசங்கள் சமைக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் அங்கு கடும் மழை பெய்தது. பெருக்கெடுத்த வெள்ளம் ஹஜ் பெருநாளுக் காகக் கொல்லப்பட்ட விலங்குகளின் குருதியுடனும், ஏனைய கழிவுப் பாகங்களுடனும் கலந்து எங்கும் குருதிக் காடாக காட்சி தருகிறது.

பங்களாதேஷின் அபிவிருத்தியடைந்த நகரான டாக்காவில் வருடாவருடம் 4 லட்சம் மக்

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் அணு ஆலை தரைமட்டம்

## அமெ. வான்படையின் குண்டு மழையால்

வொஷிங்ரன், செப். 15

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இரசாயன அணு ஆலை, அமெரிக்க போர் விமானங்களின் தாக்குதலில் தரைமட்டமாக்கப்பட்டதாக அமெரிக்க வான் படை இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார். பன்னாட்டு ஊடகமான சி.என்.என். இதை வெளிப்படுத்தியது.



கடந்த 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீது அல் குவைதா அமைப்பு தாக்குதல் நடத்தியது. கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலின் 15 ஆவது ஆண்டு நினைவஞ்சலி கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இந்தத் [illegible] ஆகச் சிறந்த [illegible] தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. இது போன்ற பல தாக்குதல்கள் நடத்தப்படும் என அமெரிக்காவை அல் குவைதா எச்சரித்தது. இதனால் அமெரிக்கா விரைவில் ஏதாவது அதிரடியாகச் செய்யும் என்ற எதிர்பார்ப்பு உலக மக்களிடையே நிலவியது. இதற்கேற்றால்போல் ஐ.எஸ்.ஐ.எஸ். அறிக்கைவிட்ட 24 மணி நேரத்துக்குள் அதன் இரசாயன அணு வாலையை அமெரிக்கா தரைமட்டமாக்கியது.

அமெரிக்க வான்படை இராணுவ அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தினார். ஈராக்கின் மருந்து உற்பத்தி தொழிற்சாலையை, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் இரசாயன அணு ஆலையாக மாற்றிப் பாவித்து வந்தனர். இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் திட்டமிட்டு துல்லியமாக குறித்த தாக்குதல் அரங்கேறியது. அணு வாலையைத்தவிர ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் 50 தளங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது என குறித்த அதிகாரி மேலும் தெரிவித்தார். தாக்குதலை வீடியோவாகப் பதிவுசெய்தும் அமெரிக்கா வெளியிட்டுள்ளது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டாக்கா
# திரொலி

கள் குடியேறுகின்றனர். அளவுக்கு அதிகமான இந்தக் குடியேற்றம் நகரின் வடிகால் அமைப்பையும், கழிவகற்றல் திட்டத்தையும் முழுவதுமாகப் பாதித்துள்ளது. தண்ணீர் வடிந்தோடும் இடங்களில் கட்டடங்கள் எழுப்பப் பட்டதால் தண்ணீர் நகருக்குள் தேங்கி நிற்கும் நிலமை ஏற்பட்டது. இதுவே நகர் குருதிக் காடாக காட்சி தருவதற்கான பிரதான காரணம் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. நீருடன் கலந்துள்ள விலங்கு களின் ...வுகள், குருதி என்பவற்றால் நகரில் ...நாற்றம் வீசுவதாகவும் சொல்லப்படு...து. (ம-ரி4)

## ஆயுதக் கொள்வனவால் இளைஞர் கைதானார்

லண்டன், செப்.15
லண்டன் நகரில் சந்தேகத்துக் குரிய வகையில் ஆயுதங் களைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் இளைஞர் கைதானார்.
கடந்த ஏப்ரல் மாத்தில் இருந்து இந்த மாதம் வரை குறித்த இளைஞரின் இணையத்தளப் பாவனையை நோட்டமிட்ட பொலிஸார், அவர் இணையத் தைப் பயன்படுத்தி ஆயுதங் களையும், வெடிபொருள்களை யும் கொள்வனவு செய்ததை அறிந்தனர். இதனையடுத்து மேற்கு லண்டனில் உள்ள அவரது வீட்டில் வைத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிமன்று அவரை இரு தனிநபர் பிணையில் செல்ல உத்தரவிட்டதுடன் அவர் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவார் என்றும் எச்சரித்தது. (ம-ரி4)

### அமெரிக்காவில்
## இஸ்லாமிய பெண்ணின் ஆடையில் தீவைப்பு

வொஷிங்ரன், செப்.15
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், இஸ்லா மியப் பெண்ணின் ஆடைமீது அடையாளம் தெரியாத நபரால் தீ வைக்கப்பட்ட சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.
இஸ்லாமிய ஆயுதக் குழுவினரான அல் குவைதா அமைப்பால், அமெரிக்க வர்த்தக மையம் கடந்த 2001 ஆம் ஆண்டு தகர்க்கப்பட்டது. இதன் 15 ஆவது அஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதற்கு முன்னைய தினமே குறித்த பெண்ணின் ஆடை மீது தீயிடப்பட்ட சம்பவம் நடைபெற்றது. பெண்ணின் ஆடையில் தீ பற்றி யதை பார்த்த அங்கிருந்த வேறு சிலர் உடனடியாக அணைத்ததையடுத்து அவருக்கு தீக்காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. விடயம் குறித்து பொலி ஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இத னையடுத்து அங்கிருந்த கண்காணிப்புக் கமராக் களின் பதிவுகளை பார்வையிட்ட பொலிஸார் சந்



சம்பவ இடத்தைப் பரிசீலனை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்

தேகத்துக்குரிய நபரொருவரின் வீடியோவை வெளியிட்டு தேடுதல் நடத்தி வருகின்றனர்.
சம்பவம் தொடர்பாக நியூயோர்க் இஸ்லாமிய அமைப்பு கண்டனம் தெரிவித்தது. அமெரிக்கா வில் இஸ்லாமியர்கள் தாக்கப்படுவது வழமை யான செயலாக மாறிவிட்டது. இந்த நிலமையை கட்டுப்படுத்த வேண்டும். சாதாரண பொது மக்கள் தாக்கப்படுவது கண்டனத்துக்குரியது. பொலிஸார் சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அந்த அமைப்பு தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டது. இந்த விடயங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட் டர்ஸ் வெளிப்படுத்தியது. (ம-ரி4)



## மணிக்கு 230 மைல் வேகத்தில் தாய்வானை மிரட்டும் சூறாவளி

பீஜிங், செப். 15
மணித்தியாலத்துக்கு 230 மைல் வேகத்தில் தாய் வானை கடந்த மூன்று தினங்களாக புயல் தாக்கி வருகிறது. லைவீசன் நகரி லேயே புயலின் தாக்கம் அதிகம் உணரப்பட்டது.
மெறான்டி எனப் பெயரிடப் பட்டுள்ள குறித்த புயலால் நூற்றுக்கணக்கான வீடு கள், கட்டடங்கள் என்பன தரைமட்டமாகியுள்ளன. ஆயிரத்து 500 பேர் வீடு களை விட்டு வெளியேற்றப் பட்டு பாதுகாப்பான இடங் களில் தங்க வைக்கப்பட் டனர். அரச அலுவலகங் களுக்கும், பாடசாலை களுக்கும் விடுமுறை வழங் கப்பட்டது. அசாதாரண வானிலை காரணமாக விமா னப் பயணங்களும் நிறுத் தப்பட்டன. கட்டட இடிபாடு களுக்குள் மக்கள் சிக்குண் டனர். இராணுவத்தினரு டன் இணைந்து பொலிஸா ரும் மீட்புப் பணியில் ஈடு பட்டு வருகின்றனர். இது வரை உயிரிழப்புக்கள் எவையும் ஏற்படவில்லை எனச் சொல்லப்படுகிறது. ஆனால் தாய்வானில் கடந்த 2013 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியைவிட மெறான்டி வலிமை மிக்கது என்பதால் லைவீசன் நகர் குறித்து அச்சம் வெளியிடப் பட்டது. (ம-ரி4)

## காவிரித்தண்ணீர்விவகாரம்; கட்டுப்பாட்டுக்குள் கர்நாடகா

காவிரித் தண்ணீர் விவகாரத்தால் கலவர பூமியாக காட்சியளித்த கர்நாடகா நேற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக இந்திய ஊடகமான தி இந்து செய்தி வெளி யிட்டது.
தமிழ்நாட்டில் 40 ஆயிரம் ஏக்கர் அளவில் சம்பா பயிரிடப்பட்டது. போதிய நீர் இல் லாததால் நெற்செய்கை பாதிப்படையும் நிலை தோன்றியது. இதனால் காவிரியி லிருந்து நீர் தருமாறு தமிழ்நாட்டு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. விசாரித்த மன்று 7 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை 10 கட்டமாக தண்ணீர் வழங்க கர்நாடகாவை உத்தரவிட்டது. முதல் கட்டமாக தண்ணீர் திறந்துவிடப்பட்டதும் தமிழ்நாட் டுக்கு தண்ணீர் கொடுத்ததைக் கண்டித்து கலவரங்கள் வெடித்தன. படிப்படியாக இந் தக் கலவரங்கள் உருப்பெற்று தமிழர், கன் னடர் எனும் இரு தரப்பினருக்கிடை யிலான கலவரமாக மாற்றம் பெற்றது. தமிழ்நாட்டில் கன்னடத்தினர் தாக்கப்பட்டனர். அவர்களது வாகனங்கள் நொறுக்கப்பட்டன. அதேபோல் கர்நாடகாவில் தமிழ்நாட்டு வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இதனால் கர்நாடகா வெங்கும் கலவர பூமியாக காட்சியளித்தது. விடயம் எல்லை மீறிச் சென்றதையடுத்து கலவரத் தடுப்பு சிறப்புப் பிரிவைச் சேர்ந்த துணை இராணு வப் படையினரை மத்திய அரசு கர்நாடகாவுக்கு அனுப்பியது. இவர் களின் அதிரடி நடவடிக்கையால் கர்நாடகா படிப்படியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு நேற்று இயல்பு நிலை ஓரளவு வழமைக்குத்திரும் பியதாக அறியவருகிறது. ஆனால் தமிழர்களுக்கு எதிராக கர்நாடகா வில் நடந்த கலவரங்களைக் கண்டித்து நாளை தமிழ் நாட்டில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.
விவசாய சங்கங்களின் இந்த முடிவுக்கு வணிகர் கழகங்கள் பல ஆதரவு தெரிவித் ததுடன், தமிழ்நாட்டில் உள்ள பலமான அரசியல் கட்சிகளில் ஒன்றான தி.மு.க.வும் தனது ஆதரவை நேற்றுத் தெரிவித் தது. (ம-ரி4)

## உலகின் ஆடம்பரக் கப்பலில் விபத்து ஒருவர் சாவு: நால்வருக்குக் காயம்

பாரிஸ், செப்.15
உலகின் மிகப்பெரிய ஆடம் பரக் கப்பலில் (ஹாமனி ஒப் த சீஸ்) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சாவடைந்தார்.
பிரான்ஸின் கடல்பகுதியில் கப்பல் சென்றுகொண் டிருந்த போது கப்பலுக்குள் விபத்து ஏற்பட்டதாக குறித்த கப்பலின் பேச்சாளர் தெரி வித்தார்.
இந்த விபத்தில் ஒருவர் சாவ டைந்தார். நால்வர் காயம டைந்தனர். காயமடைந் தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டது. இந் தக் கப்பல் 362 மீற்றா நீள முடையது. (ம-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத பலன்

**செப்ரெம்பர் 1 - 30 வரை**

## கும்பம்

எதையும் வேகமாக செய்ய வேண்டும் என்ற எண்ணமும் வாழ்க்கையில் முன்னேற்றமும் காணும் கும்ப ராசியினரே! நீங்கள் உழைத்து முன்னேற வேண்டும் என நினைப்பவர்கள். ராசியில் கேது இருக்கிறார். ராசிநாதன் சனி தொழில் ஸ்தானத்தில் இருக்கிறார். வீண் செலவுகள் உண்டாகும். எதிர்பார்த்த இடமாற்றம் உண்டாகலாம். காரியங்கள் முடிவதில் தாமதப்போக்கு காணப்படும். தேவையற்ற மன சஞ்சலம் உண்டாகலாம். எவரையும் நேருக்குநேர் எதிர்க்காமல் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். கெட்ட கனவுகள் தோன்றலாம். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் ஸ்தானத்தில் ராசி நாதனான சனி இருக்க தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் லாப ஸ்தானத்தில் இருக்கிறார். தொழில், வியாபாரம் சுமாராகக் காணப்பட்டாலும், பணவரவு இருக்கும். புதிய வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசி வியாபாரம் செய்வது நல்லது. போட்டிகளைக் கண்டு கொள்ளாமல் தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், பதற்றமும் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. மேலிடத்துடன் இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கும்.

குடும்ப ஸ்தானத்தை செவ்வாய் - புதன் - குரு - சுக்கிரன் ஆகியோர் பார்க்கிறார்கள். கணவன் -மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விடயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே, கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளால் திடீர் செலவு உண்டாகலாம். கடன் தொல்லைகள் நீங்கும். பெண்கள் எவரையும் எதிர் கொள்ளாமல் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். வீண் மனக்கவலை, காரிய தாமதம் உண்டா கலாம் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும்போதும், வெளியூர்களுக்குச் செல்லும் போதும் கூடுதல் கவனம் தேவை. சூரியனின் சஞ்சாரத்தால் முன் கோபம் ஏற்பட்டு, அதனால் வீண்தகராறு ஏற்படலாம். நிதானமச் செயற்படுவது நல்லது. அரசியல் துறையினருக்கு வளர்ச்சி பெற மிகவும் கவனமாக இருப்பது நல்லது. செலவைக் குறைப்பதன்மூலம் பணத்தட்டுப்பாடு குறையலாம். பேச்சில் கடுமையை காட்டாமல் இருப்பது நன்மை தரும். மேலிடத்தின் மூலம் மனமகிழும் படியான சூழ்நிலை உருவாகும். நண்பர்கள் உறவினர்களுடன் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது. மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள் பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. பாடங்களைப் படிப்பதில் கூடுதல் கவனமும், ஆசிரியர்களிடத்தில் பேசும்போது நிதானமும் தேவை.

**பரிகாரம்:** ஸ்ரீசர்வேஸ்வரரை ஞாயிற்றுக்கிழமைகளில் தீபம் ஏற்றி வழிபட்டு வர எல்லா தடங்கல்களும் நீங்கும். காரிய வெற்றி ஏற்படும்.




# செல்வச்சந்நிதி அன்னதானக் கந்தனுக்கு இன்று தேர்

கலாவித்தகர்
திருமதி மலர்விழி கனகசபை



இலங்கைத் தீவின் வடபால் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க முருகன் ஆலயங்களில் ஒன்றான ஆற்றங்கரை தன்னில் வீற்றிருந்து தன்னை அண்டியோர் பசி போக்கும் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் துர்முகி வருட 2016 ஆம் ஆண்டுக்குரிய மகோற்சவத்தின் சிகரம் என்று சொல்லப்படுகின்ற தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7மணிக்கு வெகு சிறப்பாக இனிதாக, எளிதாக இடம்பெறுகின்றது. முருகன் என்றால் அழகன். அழகன் என்றால் முருகன். அந்த வகையில் சந்நிதியில் வேல் வடிவில் முருகன் எழுந்தருளி அருளாட்சி செய்கின்றார். வள்ளிக்கொடி முளைத்தெழும் அற்புத நிகழ்வுடன் கொடியேற்றம் தொடங்கும். மகோற்சவம் தொடர்ந்து பதினாறு நாள்கள் இடம்பெற்று, மௌன பூசையுடன் இனிதே நிறைவுபெறும். சந்நிதியான் மகோற்சவத்தைப் பொறுத்தவரை இங்கு கொடித்தம்பம் அமைந்திருக்கவில்லை. ஆனால், வருடாந்த உற்சவத்தை வெளிப்படுத்தும் அடையாளமாக தாமாகவே முளைத்தெழும் வள்ளிக்கொடியின் தோற்றப்பாடும், அதனைத் தொடர்ந்து பூர்வபட்ச பிரதமை திதி கூடும் வேளையில் கொடியேற்றச் சடங்குகளும் இடம்பெறும். வைரவப் பெருமானுக்குக் காப்புக் கட்டுதலுடன், பிள்ளையார் பூசை, வேலவர் பூசை என்பன நிகழப்பெற்று கொடியேற்றத்துக்கான பூசை இடம்பெறும்.

ஆலய வாசலில் மூலஸ்தானத்தை நோக்கியவாறு அமர்ந்துள்ள நந்திக்கு முன்பாக வைக்கப்படும் கேடகம் இந்தக்கொடியேற்ற வைபவத்தில் பிரதான இடத்தைப் பெறுகின்றது. கலச பூசை நிறைவடைந்ததும், வேற்பெருமானுக்குப் பூசை இடம்பெறும். இவ்வாறு நடைபெறும் பூசை, சடங்குகளைத் தொடர்ந்து எழுந்தருளி வேலவருக்கும் பூசை இடம் பெற்று, அதே கேடகத்தில் வேலவர் வீதி உலாவருவார். அப்போது ஆலயத்தின் முகப்பின் சேவல்கொடி ஏற்றப்பட்டு பழம்பெரும் பாரம்பரிய சடங்குகளும் சந்நிதியான் கொடி யேற்றத்திருவிழாவின் அன்று இடம்பெறும்.

அழகே உருவான முருகன் இன்று வேல் வடிவில் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்து, அழகான தேரிலே ஆரோகணிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்,
பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகக்,
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே,
ஒரு திருமுருகன் வந்தான் உதித்தனன் உலகமுய்ய

என்ற கச்சிப்ப சிவாச்சாரியாரின் திருவாக்குக்கமைய ஆறு குழந்தைகளாகச் சரவணப் பொய்கையிலே தோன்றி, அம்பிகையான உமையவள் பரிவோடு அரவணைக்க பன்னிரண்டு கைகளுடன் ஆறுமுகப் பெருமானாக ஐயன் அவதாரம் செய்தான் என்பது பூர்வீக வரலாறு. அந்த ஆறுமுகன் இந்த ஆற்றங்கரையிலே அருள் வேல் வடிவில் எழுந்தருளி வீற்றிருந்து தன்னை வழிபடும் அடியார்களின் துன்ப-துயரங்கள் நீக்கி வல்வினை அகற்றி வேண்டுவோர் வேண்டும்வரங்களை ஈந்து அருள் ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்றான். மற்றெல்லா முருகன் கோயில்களை விட சந்நிதியில் மட்டும் அடியார்கள் கூட்டம் அலை மோதுவதற்குக் காரணம் மூலஸ்தானத்தில் இருக்கின்ற வேல் ஓர் அருள் சக்தி. அதாவது சொல்ல முடியாத இன்பத்தை அள்ளிச் சொரியும் காந்தசக்தி இருக்கின்றது.

இன்று இடம்பெறும் சந்நிதியான் தேர்த்திருவிழாவிலே லட்சோபலட்சம் மக்கள் கலந்துகொள்வர். எங்கு பார்த்தாலும் அடியார்கள் கூட்டம். பக்தர்களின் அரோகரா ஒலி வானைப்பிளக்கின்றது. பக்திப் பாமாலை, காவடிகள், தூக்குக் காவடிகள் ஒரு புறம், ஆண்கள் அகப்பிரதட்டை செய்தும், பெண்கள் கர்ப் பூரச்சட்டி ஏந்தியும் அடி அழித்தும் தங்கள் நேர்த்திக்கடன்களைச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கும். எனவே, எம்மைப்பற்றி உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் வேரோடு அழித்து, ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்காக இன்று முருகன் தேரேறி வருகின்றான். தொண்டமானாற்றிலே மூழ்கி முருகனை உள்ளன்போடு வணங்கினால் தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்து, வேண்டிய வரங்களை முருகன் அள்ளித்தருவான் என்று எம் முன்னோர்கள் கூறுகின்றார்கள். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்தச் சென்னியும் தந்தது எதற்காக? அந்த அழகன் முருகனை வாயார நினைத்துப் பாடி வேண்டும் வரங்களைப் பெறுவதற்காகவே. துர்முகி வருட நல்லாட்சி அரசிலே நெருங்கி வருகின்ற சமாதானத்தீர்வு எமது நாட்டு மக்களுக்கு நிறைவான தீர்வைத்தர வேண்டும், என்றும், இன்று தேரிலே ஆரோகணிக்கும் சந்நிதி முருகன் தன்னை வழிபட வரும் பக்தர்களுக்கு வல்வினை அகற்றி நல் வாழ்வு அளித்து நாட்டிலே சாந்தி, சமாதானம் என்று நிலவ அருள்பாலித்து இந்த மண்ணிலே எல்லா மக்களும் இன்புற்று நல்ல வண்ணம் வாழ அருள் பாலிப்பாராக!

*கட்டுரையாளர்*
*உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்)*
*தீவக வலயம், வேலணை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



ப.அருந்தவம்



# முருங்கையைப் பயிரிட்டு அதிக பயன்பெறுவோம்

ஒரு முருங்கை மரமும், பசுமாடும் இருந்தால் ஒரு குடும்பத்தையே காப்பாற்றலாம்.

ஒரு முருங்கை மரமும் ஒரு வாழை மரமும் இருந்தால் வரும் விருந்தினருக்கு ஒரு வாரம் உணவு பரிமாறலாம்.

பண்டைக்காலம் தொட்டு இலங்கை இரத்தினக்கல், கறுவா, யானைத் தந்தம், முத்து போன்றவற்றுக்குப் புகழ் பெற்றது போல யாழ்ப்பாணம் கறுத்தக் கொழும்பான் மாம்பழம், இராசவள்ளிக் கிழங்கு, முருங்கை என்பவற்றால் புகழ் பெற்றது.

முருங்கையானது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிரசித்து பெற்றிருந்தபோதும் இலங்கையின் உலர்வலயப் பிரதேசம் எங்கும் சிறப்பாக வளரக்கூடியது. உலகில் இன்று இந்தியா, பிலிப்பைன்ஸ், வட ஆபிரிக்க நாடுகளிலும் முருங்கைச் செய்கை பண்ணப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டு, புதிய உயர்தர அதிக விளைவுதரும் வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டு, வீட்டுத் தோட்டங்களிலும் பண்ணை முறையிலும் செய்கை பண்ணப்படுகிறது.

(ஒரு ஏக்கர் விளைநிலத்திலிருந்து பத்து மெற்றிக் தொன் விளைவு பெறப் படுகிறது)

**முருங்கை எனும் சஞ்சீவித் தாவரம்**

முருங்கை மரத்தில் பயன்படாத பாகமே இல்லை எனலாம். துளிர், இலை, பூ, பிஞ்சு, காய் , விதை, மரப்பட்டை, பிசின், தண்டு போன்ற அனைத்துப் பாகங்களும் மருந்தாகவும், உணவாகவும் பயன்பட்ட வண்ணமே உள்ளன.

உயர் குருதி அழுத்தம் உள்ளவர்கள் முருங்கைக் கீரையை உருவாமல் காம்புடன் சிறுசிறு துண்டுகளாக வெட்டி சூப் செய்து தினமும் ஒரு வேளை பருகுபவரின் குருதி அழுத்தம் கட்டுப்பாட்டில் இருக்கும்.

முருங்கைக் கீரையைச் அரைத்து காலையில் ஆட்டுப்பாலுடன் பருகினால், கண் சம்பந்தமான நோய்கள் தீரும். கண்ணுக்கு ஒளியும் பெருகும்.

இடுப்புவலி, இடுப்புச்சுழுக்கு உள்ளவர்கள் வாரத்தில் இரண்டு நாள்கள் முருங்கைக் கீரையைச் சமைத்துண்ணல் சிறப்பாகும். இது மட்டுமன்றி இடுப்பு வலியால் கஷ்டப்படுபவர்கள் இந்தக் கீரையை உப்புக்கலந்து இடித்து சூடு செய்து காலையும், மாலையும் பற்றுப்போட இடுப்புவலி இருந்த இடம் தெரியாது பறந்து விடும்.

முருங்கையின் இளம் பிஞ்சை சிறுசிறு துண்டுகளாக வெட்டி சிறிதளவு உப்பு, மிளகுத்தூள் தூவி பச்சையாக உண்டால் வயோதிபரும் வாலிபராகலாம்.

முருங்கைப் பிசினை சுத்தப்படுத்தி நன்கு காயவைத்து தூள் செய்து அரைத்தேக் கரண்டி காலையும், மாலையும் பாலில் கலந்து உண்டால் ஆண்மைத்தன்மை பெருகுவதுடன் ஆண்கள் அழகான மிடுக்கான தோற்றமுள்ளவர்களாகவும் தோன்றுவார்.

முருங்கையின் எப்பாகத்தை ஆண்கள் உண்டாலும் ஆண்மைத்தன்மை அதிகரிக்கும்.

முருங்கைக் கீரையை உண்பதால் என்பு, பல் வளர்ச்சி சீரடைவதுடன் குருதி ஓட்டத்தையும் சீராக்கும்.

கருப்பை நோயுள்ள பெண்கள் முருங்கைப் பூவின் 50 கிராமை எடுத்து பருப்புடன் சேர்த்து உண்டு வர இப்பிணி தீரும்.

சமிபாட்டுக் குறைபாடு உள்ளவர்கள் முருங்கை விதைப் பவுடரை வெறுவயிற்றில் உண்பவரின் சமிபாட்டுக் குறைவு சம்பந்தமான தொல்லைகள் குறையும்.

இவ்வாறு சிறந்த பயன்கள் பலவும் தரும் முருங்கையை சஞ்சீவித் தாவரம் என்றே அழைக்கலாமல்லவா!

**முருங்கை இனங்கள்**

முருங்கையில்; செடி முருங்கை, மர முருங்கை என இருபெரும் பிரிவுகள் உண்டு. பாரம்பரியமாக எமது பிரதேசத்தில் மர முருங்கையிலே செய்கை பண்ணப் பட்டு வந்தது. தற்போது இந்தியத் தெரிவு செடி முருங்கைகளையும் பலரும் விரும்பிப் பயிரிட்டு அதிக இலாபம் பெற்று வருகின்றனர்.

மரமுருங்கையைப் பொறுத்தவரையில் எமது நாட்டில் உள்ளூர் மரங்களின் தெரிவால் உருவாகிய வர்க்கங்களே பெரிதும் பாவனையில் உண்டு. இருந்தபோதும் இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

உள்ளூர் வர்க்கங்களில் யாழ்ப்பாண முருங்கை, சாவகச்சேரி முருங்கை, புனல் முருங்கை, பால் முருங்கை, வாகரை முருங்கை, கப்பல் முருங்கை, இலையான் முருங்கை எனவும் சில பேதங்கள் உண்டு.

> எமது பிரதேசத்தில் பலர் "முருங்கை நட்டவன் வெறுங்கையோடு போவான்" என்ற பழமொழியைத் தவறாகப் புரிந்து கொண்டு முருங்கை வீட்டில் நடுவதில்லை. உண்மையில் முருங்கையை உணவுகளை நாள்தோறும் உண்பவர்களை முதுமை அணுகுவதில்லை. அவர்கள் என்றும் இளைஞர்களாகத் தோன்றுவார்கள். எனவே அவர்கள் பொல்லுப் பிடித்து நடக்கவேண்டிய தேவையுமில்லை. இதனாலேயே முருங்கை நட்டவன் வெறுங்கை யோடு போவான் எனக் கூறப்பட்டது. முருங்கையில் மயிர்க் கொட்டித் தாக்கம் அதிகம் என்பதாலும் பலர் இதனை வீட்டில் நடுகை செய்யத் தயக்கம் காட்டுவதுண்டு.

**செடி முருங்கை**

அதிக விளைவை எதிர்பார்ப்பவர்கள் செடி முருங்கையை பயிர்செய்கின்றனர். இவை பெரும்பாலும் விதை மூலமாகவே இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன.

இந்த முருங்கை நட்டு 6 மாதத்தில் காய்க்கத் தொடங்கும். ஒரு போகத்தில் காய்த்து ஓய்ந்ததும் செடிகள் மூன்று அடி உயரத்தில் கப்பாத்துப் பண்ணப்படும். இதன்பின் புதிய கிளைகள் உருவாகி 4 மாத காலத்தில் மீண்டும் காய்க்கத் தொடங்கும். இவ்வாறாக நான்கு, ஐந்து வருடங்களுக்கு தொடர்ச்சியாக வருமானம் பெறலாம்.

**மரமுருங்கைச் செய்கை**

கொல்லைப் புறத்தோட்டத்துக்கு மிகவும் உகந்தது. இங்கு தண்டுத் துண்டங்களே நடுகைக்குப் பயன்படுகிறது. இந்தத் தண்டுத் துண்டங்கள் ஓர் ஆண்டு வயதுக்குக் கூடியவையாகவும் இரண்டாண்டு வயதை விடக் குறைவாக உள்ள கிளைகளிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

**நடுகைக் காலம்**

ஜூன், ஜூலை மாதங்களில் நடுகை செய்தல் சிறப்பானது. (பெரும்பாலும் ஆடி அமாவாசை தினத்திலும் ஆடிப்பிறப்பன்றும் முருங்கை நடுகின்ற எமது முன்னோரின் பண்பாட்டை எம்மவர்கள் இன்றும் கடைப் பிடித்து வருகின்றனர்.) பண்ணையாகச் செய்கை பண்ணுபவர்கள் 5 X 5 மீற்றர் இடைவெளியில் தண்டுத் துண்டங்களை நட்டு பயன் பெறமுடியும்.

முருங்கையைப் பொறுத்தவரை மயிர் கொட்டியினால் ஏற்படும் சேதமே அதிகம். இவை இலைகளை இரவு வேளைகளில் அரித்து உண்டுவிட்டு பகலில் மரத்தின் அடியில் கும்பலாக வந்து வாழும். அப் போது காவோலை கொண்டு மயிர் கொட்டிகளை சுட்டு அளிக்கலாம்.

**வீடுதோறும் முருங்கை நடுவோம்**

எமது பிரதேசத்தில் பலர் "முருங்கை நட்டவன் வெறுங்கையோடு போவான்" என்ற பழமொழியைத் தவறாகப் புரிந்து கொண்டு முருங்கை வீட்டில் நடுவதில்லை.

உண்மையில் முருங்கை உணவுகளை நாள்தோறும் உண்பவர்களை முதுமை அணுகுவதில்லை. அவர்கள் என்றும் இளைஞர்களாகத் தோன்றுவார்கள். எனவே அவர்கள் பொல்லுப் பிடித்து நடக்கவேண்டிய தேவையுமில்லை. இதனாலேயே முருங்கை நட்டவன் வெறுங்கையோடு போவான் எனக் கூறப்பட்டது.



முருங்கையில் மயிர்க் கொட்டித் தாக்கம் அதிகம் என்பதாலும் பலர் இதனை வீட்டில் நடுகை செய்யத் தயக்கம் காட்டு வதுண்டு. நாள் தோறும் மரத்தை அவதானித்து மயிர் கொட்டித் தாக்கமின்றி மரத்தை முகாமை செய்தால் சிறந்த விளைவைப் பெறமுடியும்.

வெட்ட வெட்டத் தழைக்கும் ஒரு மரமான முருங்கையை நட்டுப் பயன் பல பெறுவோம். வீட்டுத்தோட்டங்களிலும், வெற்றுத் தரைகளிலும், கொல்லைப் புறங்களிலும், வேலிகளிலும் முருங்கை மரத்தைப் பயிரிட்டு அதிக பயன் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலமரத்துக் குயிலின் போதனை

அது ஓர் அழகிய கிராமம். புனிதம் நிறைந்த ஆலயங்களும் சமய ஆசாரங்கள் கொண்டவர்களும் வாழும் அந்தக் கிராமத்தில் உள்ள இளைஞன் ஒருவன், ஆசாரங்களைக் கேலி செய்தும் எப்போதும் விதண்டாவாதப்பேச்சுக்களில் ஈடுபட்டும் வந்தான். தன்னைவிட்டால் இந்தக்கிராமத்தில் புத்திசாலி இல்லை என்ற கர்வம் அவனிடம் காணப்பட்டது. அதனால் அவன் கிராமத்திலுள்ளவர்களை மதிப்பதில்லை.



அவனைக் கண்டதுமே அங்குள்ள பெரியவர்கள் விரைந்து ஒதுங்கிக் கொள்வர். ஏனெனில் அவன் அவர்களைக் கேலி செய்தும் பட்டிக்காடு என்று நையாண்டி செய்தும் வந்தான்.

அவனது செயலுக்காக, அவனது பெற்றோர் மிகவும் மனம் வருந்தினர். அவன் அவர்களுக்கு ஒரே ஒருபிள்ளை. அதனால்தான் சிறுவயதிலிருந்தே அவனுக்கு அதிக செல்லம் கொடுத்தனரே ஒழிய கண்டித்து வளர்க்காமல் இருந்து விட்டனர். சிறுவயதினனாக அவன் இருந்தபோது அவனை அவனது போக்கில் வளரவிட்டதனால் இன்று அவர்கள் மனம் வருந்துகிறார்கள். அவனை ஒரு நல்லவனாக்கி கல்வியறிவு மிக்கவனாக்கித் தருமாறு அவர்கள் ஊரிலுள்ள தெய் வங்களிடம் வேண்டாத நாளில்லை.

அவனுக்காக அவர்கள் இறைவனிடம் வேண்டும் போதெல்லாம் கேலியாகப் பேசிப் பேசி மேலும் அவர்களை வேதனைப்படுத்தி விடுவான். கடவுளைக் கும்பிடுவது எல்லாம் சோம்பேறித்தனம், “கடவுள்தான் எமக்கு எல்லாவற்றையும் தருபவர் என்றால் எங்கே வானத்திலிருந்து 100 ரூபாக்காசு வரட்டும் பார்ப்போம்” என்பான். “ஒன்றைப் போடும்படி கேளுங்கள் கடவுள் தருவாரா?” என்பதெல்லாம் கேலி பேசுவான். எல்லாம் மனிதனால் முடியும். கடவுள் என்பதெல்லாம் சும்மா போலிநம்பிக்கை என்ற கொள்கையைக் கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன் கடும் வெயில் நேரத்தில் அயலூருக்குப் போகவேண்டி ஏற்பட்டது. தகிக்கும் கடுமையான வெயிலில் அவன் நடந்து கொண்டிருந்தான். அவனுக்குக் களைப்பாக இருந்தது. நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள். அவனுக்கும் நிழல் தேவைப்பட்டது. சற்றுத் தூரத்தில் நின்ற பெரிய ஆலமரம் அவன் கண்ணில் பட்டது. அதனைநோக்கி விரைந்தான்.

அவன் மரத்தை வந்தடைந்தபோது அங்கே ஒரு யானையும் ஒரு குரங்கும் ஒன்றுடன் ஒன்று தர்க்கமாடிக் கொண்டிருந்தன. தான் சிறுவனாக இருந்த போது இந்த ஆலமரம் சிறிய கன்றாக இருந்தாகவும், தான் நிலத்தில் நின்றபடியே அதன் நுனியைத் தொட்டு குருத்தை நுள்ளியெடுத்ததாகவும் குரங்கு புளுகித் தள்ளியது. யானையும் விடவில்லை. “தான் சிறியவனாக இருந்தபோது தனது காலில் மிதிபடவிருந்தது இந்த ஆலமரம்” என்று யானையும் வெடித்துப் புளுகியது. இப்படியாக இவை இரண்டும் மாறி மாறி நீயா நானா பெரியவன் என்று மல்லுக்கட்டிக்கொண்டிருந்தன.

அந்த நேரம் மரத்தின் மேலிருந்த குயில் ஒன்று, “அடே மூடர்களே உங்களுக்குத் தெரியுமா? ஆலம்பழத்தை உண்ட பின் நான் இட்ட எச்சத்தில் இருந்த விதையிலிருந்து முளைத்தது தான் இந்த ஆலமரம். இது தெரியாமல் நீங்கள் இருவரும் உங்களில் யார் பெரியவன் என்று வீணே சண்டையிடுகிறீர்களே. இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள் உங்கள் இருவரையும் விட நானே வயதில் பெரியவன் என்பதுடன் எங்கள் எல்லோரையும் விட அனைத்து உயிர்களையும் படைத்த கடவுளே மகா பெரியவர் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்” என்றது.

கப்சிப் என்று வாயடைத்துப் போன குரங்கையும் யானையையும் பார்த்த இளைஞன் குயில் சொல்வதை ஏற்றுக் கொண்டு அமைதி அடைந்து குரங்கையும் யானையையும் விட மனிதப்பிறவியாகிய தான் எவ்வளவு கேவலமானவன் என்பதையும், தன்னை விட்டால் கிராமத்தில் புத்திசாலி கிடையாது எனும் தனது கர்வத்தினால், அங்குள்ளோரைத் தான் மதிக்காமல் நடந்து கொண்டதையும் எண்ணி வெட்கமடைந்தான். ஆலமரத்துக் குயில் சொன்னது போல் கடவுள் எவ்வளவு பெரியவர்; நான் அறியாது அவரைத் தூற்றி விட்டேனே என மனம் நொந்து கடவுளைக் கைகூப்பித் தொழுதான். அன்றிலிருந்து அவன் தெய்வ நிந்தனை செய்வதையும், மற்றவர்களை மதிக்காமல் நடப்பதையும் விட்டுவிட்டான்.

-துஜா

# வரலாற்றில் இன்றைய தினம்

1812 - நெப்போலியன் தலைமையிலான பிரான்ஸ் இராணுவம், மொஸ்கோ கிரெம்ளினை அடைந்தது.

1821 - கௌதமாலா, எல்சவபோர் ஹொண்டூராஸ் ,நிசாராகுவா மற்றும் கோஸ்ரறிகா கூட்டாக ஸ்பெயினிலிருந்து சுதந்திரம் பெற்றதாகப் பிரகடனம் செய்தன.

1935 - நியூறெம்பேர்க் சட்டத்தின் மூலம் ஜேர்மன் யூதர்களின் குடியுரிமை மறுக்கப்பட்டது.

1947 - ஜப்பான் கன்ரோ பிராந்தியத்தில் கத்லீன் சுழற்காற்றினால் 1077 பேர் உயிரிழந்தனர்.

1948 - F - 86 சப்றே போர் விமானம் மணிக்கு 671 மைல் வேகத்தில் பறந்து சாதனை.

1952 - ஐக்கிய நாடுகள் சபை எதித்திரியாவை, எதியோப்பியாவிடம் கையளித்தது.

1971 - அணுப் பரிசோதனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கிறீன் பீஸ் கப்பலின் பயணம் தொடங்கியது.

1974 - வியட்நாம் விமான சேவை விமானம் 706 கடத்தப்பட்டு பின் தரையிறங்க முயற்சித்தவேளை 75 பயணிகளுடன் விபத்துக்குள்ளாகியது.

1978 - முகமட் அலி மீள் குத்துச் சண்டைப் போட்டியொன்றில் லியோன் ஸ்பிங்கை தோற்கடித்து மூன்றாவது தடவையாகவும் வெற்றி பெற்ற உலக அதிபார குத்துச் சண்டை வீரரானார்.

1983 - இஸ்ரேலிய பிரதமர் மனாச்சம் பெகின் பதவி விலகினார்.

1990 - பேர்சியன் கல்ப் போருக்கு 4000 துருப்புக்களை அனுப்பப் போவதாக, பிரான்ஸ் அறிவித்தது.

2002 - குடாநாட்டில் புனரமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் தேசியக் கொடியேற்றல்.


- நிமலராஜன் கொலை வழக்குத் தொடர்பாக மேலும் இரண்டு ஈ.பி.டி.பி உறுப்பினர்களைக் கைது செய்யும் முயற்சி ஆரம்பம்.

2003 - முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர்; அமரர் சின்னத்தம்பி சிவபாதசுந்தரம் மறைவு.

- புலிகளே ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலையைக் கூட்டணி தொடர வேண்டும் என தமிழ்க் காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி கோரிக்கை.

2006 - குடாநாட்டைப் பஞ்சத்திலிருந்து காக்க ஏ-9 பாதையைத் திறக்கச் செய்வதே மாற்று வழியென சமாதானம், நல்லெண்ணத்துக்கான மக்கள் குழு ஜனாதிபதியிடம் வலியுறுத்து.

- பளைப் பகுதியில் கிபிர் குண்டு வீச்சினால், அரச கட்டடங்கள் பலவும் நாசம். கடந்த வருடம் கட்டப்பட்ட மருத்துவ மனையும் முற்றாகச் சேதம்.





# மாம்பழம்

மாம்பழமே மாம்பழமே
மஞ்சள் நிற மாம்பழமே
மாமி வீட்டு முற்றத்திலே
மலையாய் குவியும் மாம்பழமே
திலக்சி அக்கா எங்களுக்கு

தினம் தரும் மாம்பழமே
தின்னத் தின்ன உன்மீது
தீரா ஆசை ஏற்படுமே
கறுத்தக் கொளும்பான்
வெள்ளைக் கொளும்பான்
அம்பலவி விளாட் சேலம் என்றும்
எத்தனையோ பெயர் உனக்கு
இவற்றைச் சொல்ல நேரம் போகாதே



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பவன் சமூகத்தை நேசிப்பான்

அன்ரனி பீற்றர்

வாசிப்பது என்பது இசையை வாசிப்பது, நூல்கள், செய்தித்தாள்களை வாசிப்பது என்று பல வகையான கருத்து வெளிப்பாடுடையதாக இருப்பினும், வாசிப்பவர்கள் பல வகையான நோக்கங்களுக்காக வாசிக்கின்றார்கள். சிலர் நாளாந்தம் சில குறிப்பிட்ட செய்திகளை அறிந்து கொள்ளவும் சிலர் அறிவுத் தேடலுக்காகவும், சிலர் வர்த்தகத்தை நோக்கமாகக் கொண்டும், சிலர் பொழுதைப் போக்குவதற்கும், சிலர் கௌரவத்துக்காகவும் வாசிக்கின்றார்கள். எது எப்படியாயினும், வாசிப்பின் மூலமாக அவரவர் நோக்கங்களுக்கான பயனை அடைந்து கொள்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.

நூல்களை வாசிப்பதன் மூலமாக மனிதன் பல வகையான நன்மைகளை அடைந்து கொள்கின்றான். வாசிப்பு ஒருவனை முழுமையான மனிதனாக்குகிறது என்று சொல்லப்படுகின்றது. வாசிப்பதன் மூலம் அறிவு வளம் பெருகுகின்றது; ஆற்றல் பெருகுகின்றது; நம்பிக்கை ஏற்படுகின்றது. உடல், உள நோய்கள் குணமாகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக நீண்ட காலம் உயிர்வாழ்வதற்கான ஆயுள் அதிகரிக்கின்றது என்றும்- அண்மையில் செய்யப்பட்ட ஓர் ஆய்வின் மூலம் அறியப்படுகின்றது. பார்ப்பதன் மூலமாக நாம் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முடியாது. கேட்பதன் மூலமும், வாசிப்பதன் மூலமும் தான் பலரும் அறிந்து கொள்ளவும், தமது ஆற்றல்களை விருத்தி செய்யவும் முடியும் என்பதை வாசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். கற்றல் என்பதன் ஒரு பகுதியே வாசிப்பாகும்.

மறந்தவைகள், மறைந்தவைகள் ஆகின்றன. கரைந்தவைகள் (கதைத்தவைகள்) காற்றினிலே கலக்கின்றன. வரைந்தவைதான் (எழுதியவைதான்) வரலாறுகள் ஆகின்றன. சான்றுகள் தான் சரித்திரங்கள் ஆகின்றன. என்று இந்தக் காலக் கவிஞன் ஒருவன் குறிப்பிடுகின்றான். பானையில் இருந்தால் தான் அகப்பையில் வருமென்பார்கள். அவ்வாறு கற்று, வாசித்து அறிந்த அறிவைச் சமூகத்துக்குப் பயனுள்ள அறிவு சார்ந்த நூல்கள், கட்டுரைகள், செய்திகள், சஞ்சிகைகள், இலக்கியங்களாகப் படைக்க முன்வர வேண்டும். ஒவ்வொருவரின் திறமைகள், ஆற்றல்கள், அறிவுரைகள் மேற்சொன்ன வடிவங்களின் மக்களைச் சென்றடையும் போதே, வாசிப்பின் பயனை மற்றவர்களும் பெற்றுக் கொள்கின்றார்கள். ஜென்னிங்ஸ் பரபன் என்ற அறிவியலாளர் இவ்வாறு கூறுகிறார். எதையும் பொறுப்புடன் முனைந்தால் சாதித்து விடலாம். வாழ்க்கைப் போக்கு என்பது வெறும் சந்தர்ப்பங்களல்ல. தேர்வு செய்வதன் மூலமாகத்தான் அது உருவாகிறது. காத்திருந்து பெறுவது அல்ல. முயன்று பெறுவதுதான் அது. எனவே, எமது முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பது இந்த வாசிப்புப் பழக்கமாகும். அதன் மூலமாக நாம் சாதிக்கலாம்.

இன்று வாசிப்புப் பழக்கம் அருகிக் கொண்டுவருகிறது என்று கூறப்படுவதில் உண்மையில்லை. ஆனால், பயனுள்ள வாசிப்புக்கள் குறைவாக இருக்கின்றன. பயனுள்ள வாசிப்புக்கான ஊக்கப்படுத்தல்கள் போதாது இருக்கின்றது. எத்தனை பாடசாலை நூலகங்களில் வாசிக்கும் பிள்ளைகள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்? அவர்களுக்கு ஊக்கியாக வெகுமதிகள் வழங்கப்படுகின்றது? பாடசாலைகளில் நூலகத்துக்கென்று ஒதுக்கப்படும் நேரம் எவ்வளவுக்கு பயனுள்ள முறையில் அறிவூட்டலாக அமைகின்றது?



ஆரம்பவகுப்புக்களில் வாசிப்பு மூலை என்று ஆரம்பிக்கப்படுகின்றது. பின்னரான வகுப்புக்களில் வாசிப்பின் நிலை கேள்விக்குறியாகவும், அனேக பாடசாலைகளில் பிரச்சினையாகவும் உள்ளது என்று கூறுவதையும் அறியக்கூடியதாக உள்ளது.

இன்று எழுத, வாசிக்கத் தெரியாத பெற்றோர்கள் குறைவாகவே காணப்படுகின்றார்கள். ஆனால், அவர்கள் தங்கள்பிள்ளைகளின்கல்வியிலே (ஒரு சிலரைத் தவிர) அனேகர் கருத்துள்ளவர்களாக ஆர்வமுடன் செயற்படுவதை ஆரம்ப புலமைப்பரிசில் வகுப்புச் சந்திப்புகளில் அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், வாசிக்கத் தெரிந்த பெற்றோரின் பிள்ளைகள் (எல்லோருமல்ல) வாசிப்பில் ஈடுபாடு இல்லாமல் இருப்பது கவலையளிக்கும் விடயமாகும். காலை, மாலை பிள்ளைகளுடன் சில நிமிடங்களையாவது செலவிட வேண்டும். அவர்களை ஊக்கப்படுத்தும் முறையில் நடந்து கொள்ளவேண்டும். கற்பதற்கு, வாசிப்பதற்கு இடறல்படும் மாணவர்களை ஊக்கப்படுத்தும்போது, அவர்கள் கல்வியில் ஊக்கமும், ஆர்வமும் உள்ளவர்களாக மாற்றம் பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது. எனவே, வாசிப்பு என்பது மாணவர்களின் கல்வியிலும் ஏனையவர்களின் வாழ்விலும் உயர்நிலையை அடைவதற்கு சிறந்த ஊடகமாக இருக்கின்றது. வாசிப்போம், வாசிக்க ஊக்கமளிப்போம். வாழ்வை வளம் பெறச் செய்வோம்.

# தேசியமட்டப் போட்டியில் தலைதூக்குகிறது வடக்கு

மாகாண மட்டப் போட்டிகளுடன் முடங்கியிருந்த வடமாகாண வீர, வீராங்கனைகளின் பெறுபேறுகள் தற்போது அடுத்த கட்டத்துக்குச் சென்றுள்ளன. தேசிய மட்டத்தில் கணிசமான வெற்றிகளைப் பெறும் அளவுக்கு வடக்கு வீர, வீராங்கனைகள் வளர்ந்துள்ளனர். கடந்த இரு மாதங்களில் அவர்கள் வெளிப்படுத்திய பெறுபேறுகள் இதற்கு தக்க சான்றுகளான அமைந்தன.

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகள், இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகள், பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான போட்டிகள் என்பன தற்போது நடைபெற்று வருகின்றன. மூன்றிலும் வடக்கு மாகாண அணிகள் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ளன. பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் வடக்கு மாகாணத்திலிருந்து கலந்து கொண்ட 15 வயதுப்பரிவுக்கு உட்பட்ட அணிகள் முதல் மூன்று இடங்களையும் பிடித்தன. சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனாகி தங்கப் பதக்கத்தை வென்றது. பற்றிக்ஸுடன் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி இறுதியாட்டத்தில் விளையாடி வெள்ளிப் பதக்கத்தைத் தனதாக்கியது. மன்னார் சென். லூட்சியா அணிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது. ஒரு விளையாட்டில், ஒரே வயதுப்பரிவில் ஒரு மாகாணத்தின் அணிகள் தங்கம், வெள்ளி, வெண்கலம் என அத்தனை பதக்கங்களையும் கைப்பற்றுவது இதுவே முதல் தடவை. இந்த வகையில் வடக்கின் வீரர்கள் மறக்க முடியாத ஒரு பதிவை இந்த வருடத்தில் ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் பற்றிக்ஸின் 17 வயதுப் பிரிவு அணி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

15 வயதுக்குட்பட்ட கபடியில் மன்னார் கட்டையடம்பன் றோ.க.த.க. பாடசாலையின் அணி, ஆண்கள் பிரிவிலும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் அணி, பெண்கள் பிரிவிலும் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றின. மன்னார் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் 78 ஆண்டுகால வரலாற்றில் அந்தப் பாடசாலைக்கு தேசியத்தில் கிடைத்த முதலாவது தங்கப் பதக்கமாக இது அமைந்துள்ளது.




சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது. குறித்த பாடசாலையின் 112 ஆண்டுகால வரலாற்றில் அந்தப் பாடசாலையின் முதலாவது தேசியமட்ட பதக்கம் இதுவே. பெண்கள் பிரிவு சைக்கிளோட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவி என்.விதுசனா வெள்ளிப் பதக்கத்தையும், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் மாணவி என்.நிதர்சனா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான போட்டியைப் பொறுத்தமட்டில் கால்பந்தாட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி சம்பியனானது.

இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட இளைஞர் கழகம் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது. ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட இளைஞர் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. அந்த அணி எதிர்வரும் 23 ஆம் திகதி மொனராகலை மாவட்ட இளைஞர் கழகத்துடன் மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் தோல்வியடைந்தாலும் யாழுக்கு வெள்ளிப் பதக்கம் உறுதி. ஆனால் அந்த அணி தங்கத்தை தனதாக்கத் தகுதியானதே.

மொத்தத்தில் தேசியத்தை எட்டப் படாதபாடுபட்ட காலம் மாறி, வடக்கு வீர, வீராங்கனைகள் கணிசமான வெற்றிகளை நிலைநாட்ட ஆரம்பித்துள்ளனர். ஒழுங்கைக்குள்ளும், வளவுக்குள்ளும் விளையாடும் கழகங்களுக்கு துடுப்புமட்டை வாங்கிக் குவிக்கும் அரசியல் பிரமுகர்கள், தமது நிதியை நன்கு கட்டமைக்கப்பட்ட கழகங்களுக்கும், பாடசாலைகளுக் கும் செலவுசெய்வார்களாயின் வடக்குக்கு இன்னும் அதிகமான பதக்கங்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடிகர் சங்கத்திலிருந்து சரத்குமார், ராதாரவி, சந்திரசேகர் நீக்கம்

காவிரி விவகாரத்தில், நடிகர் சங்கத்தின் நிலைப்பாடு குறித்த சங்க செயற்குழுக் கூட்டம் அண்மையில் தி.நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் கர்நாடக அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கப் பட்டது. அதோடு தமிழக அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும், நடிகர் சங்கம் ஆதரவு அளிக்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தின் போது முறைகேடு செய்தது தொடர்பாக முன்னாள் நிர்வாகிகளான சரத்குமார், ராதாரவி, வாகை சந்திரசேகர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. நடிகர் சங்கத்தின் தலைவராக சரத்குமார், பொதுச் செயலராக ராதாரவி, பொருளாளராக வாகை சந்திரசேகர் பணியாற்றினர். அப்போது, நடிகர் சங்க அறக்கட்டளைக்கு சொந்தமான, ஒரு கோடியே, 65 லட்சம் ரூபாய்க்கு சரிவரக் கணக்கு காட்டாமல் இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. அவர்கள் மீது, பொலிஸில் முறையிடப்பட்டது. இதற்கிடையில், அவர்கள் மூவரையும், உறுப்பினர் பதவியில் இருந்து, நடிகர் சங்க நிர்வாகம் நீக்கி உள்ளதாகக் கூறப்படுகிறது.

நடிகர் சங்க, முன்னாள் நிர்வாகி களான சரத்குமார், ராதாரவி, வாகை சந்திரசேகர் ஆகி யோர் மீது வழக்குப் பதிவு செய்ய உத்தரவிடக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்காக, கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பெண்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்களைவாங்குவர். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** மாறுபட்ட கருத்துக் கொண்டவரைச் சந்திக்க நேரிடலாம். பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் கடைபிடிக்கவும்.

**மிதுனம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், இருக்கும் அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. பெண்களுக்கு, பணத் தேவை அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

**கடகம்:** பெருந்தன்மை மிக்கவராக விளங்குவீர்கள். நற்செயலில் ஈடுபட்டு, சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** செயலில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை, ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். பெற்றோரின்தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மாறுபட்ட சூழ்நிலையை சந்திக்க நேரிடலாம். நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு, மன அமைதிக்கு வழி வகுக்கும்.

**துலாம்:** செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமையாக மாறலாம். தொழில், வியாபாரம் சிறக்க, விடாமுயற்சி அவசியம். இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள், நகையை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** சிலர் சுயநலத்துடன் அணுகலாம். விழிப்புடன் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், உழைப்பிற்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்து டன் செயற்படுவர். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடலாம்..

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சி, வியப்பூட்டும் விதத்தில் இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தை, உடனடியாகச் சரி செய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**மீனம்:** புதிய முயற்சி, முழு அளவில் வெற்றியளிக்கும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் கூடும். குடும்பத் தேவைகளை, தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள்.

Day dreamer Retweeted

ஆண்களுக்கு அன்பின் அர்த்தம் தெரிவதில்லை என்று எண்ணாதீர்கள். ஏனெனில் அவன் நேசிக்க ஆரம்பித்தால் அன்னையின் அன்பையே தோற்கடித்து விடுவான்.



திருடன் ஒரு வீட்டுக்குள் நுழையும்போது அவன் கால் பட்டு சத்தம் உண்டாகிறது



வீட்டுக்காரர்: யாரு?
திருடன் : மியாவ்
வீட்டுக்காரர் : யாரது?
திருடன் : மியாவ்
வீட்டுக்காரர்: அட யாரது?
திருடன்: அட. காது கேக்கலையோ பூனைடா டேய்...

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 5 | | | 6 | | |
| | | | | 6 | | 3 | | |
| 3 | | 9 | 1 | | | | | 5 |
| | | | 4 | 9 | | 7 | | |
| 8 | | | | | | | | 2 |
| | | 1 | | 3 | 6 | | | |
| 6 | | | | | 7 | 1 | | 9 |
| | | 4 | | 1 | | | | |
| | | 7 | | | 9 | 2 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 9 | 1 | 3 | 8 | 5 | 7 | 2 |
| 5 | 3 | 7 | 6 | 2 | 9 | 1 | 4 | 8 |
| 8 | 2 | 1 | 5 | 4 | 7 | 6 | 9 | 3 |
| 2 | 9 | 4 | 8 | 1 | 6 | 7 | 3 | 5 |
| 1 | 8 | 5 | 9 | 7 | 3 | 4 | 2 | 6 |
| 3 | 7 | 6 | 4 | 5 | 2 | 8 | 1 | 9 |
| 7 | 5 | 3 | 2 | 6 | 1 | 9 | 8 | 4 |
| 6 | 1 | 8 | 3 | 9 | 4 | 2 | 5 | 7 |
| 9 | 4 | 2 | 7 | 8 | 5 | 3 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

அது என்னடா ரீ.வி. பார்க்கும்போது மட்டும் நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பது உங்கள் சன் ரீ.வி, உங்கள் கே. ரீ.வி, உங்கள் விஜய் ரீ.வி என்டு சொல்லுறீங்க. இதில வாற லாபத்துக்கு எங்களுக்கா பங்கு தாரீங்க?



யாரடா ஏமாத்துறீங்கள்?

கட்டின புடைவையோட உன்னை வரச் சொன்னா இது என்ன சூட்கேஸ் நிறைய புடைவைகளா இருக்கே?



இதெல்லாம் ஏற்கனவே கட்டின புடைவைகள் தான் டார்லிங்.

மதுபோதைக்கு அடிமையானோர் தொடர்ந்து கொய்யா சாப்பிட மது அருந்துவதிலிருந்து தப்பிக்கலாம். -செய்தி



ம்ம்ம்... நான்சன்ஸ், எங்களுக்கு சைட் டிஸ்சே கொய்யாப்பழம்தான்டா...!!



நாய் குரைச்சா ஓடவோ... கல் எடுக்கவோ வேணாம். செல்போன் எடுத்து நோண்டுங்க. இந்த நாய் பேஸ்புக் பார்க்க ஆரம்பிச்சுருச்சு. இனிமே நாம என்ன குரைச்சாலும் கண்டுக்காது எண்டு போயிடும்...!

'ஆபரேசனுக்கு நேரமாகிடுச்சே, அந்த நோயாளி இன்னும் என்ன பண்றார்?
"செல்ஃபி எடுத்து, "ஐயம் இன் தியேட்டர்" எண்டு பேஸ்புக்கில அப்லோட் பண்றார் டாக்டர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளை**
**ஆவணி-31**
வெள்ளிக்கிழமை
-16.09.2016
திதி: பூரணை
பி.இ.01.18
நட்சத்திரம்: சதயம்
மு.ப.08.22
ராகுகாலம்:
10.33-12.03 வரை
சுபநேரம்:
06.03-07.33 வரை

# வாழைப்பழ கேக்



**தேவையான பொருள்கள்:**
கோதுமை மா : 250 கிராம்
சீனி : 250 கிராம்
வெண்ணெய் : 200 கிராம்
வாழைப்பழம் : 250 கிராம்
உலர் திராட்சை : 125 கிராம்
பேக்கிங் பவுடர் : 1 தேக்கரண்டி
அப்ப சோடா : 1/2 தேக்கரண்டி
கோழி முட்டை : 4
வாழைப்பழ எசன்ஸ் : 1 தேக்கரண்டி
வெனிலா எசன்ஸ் : 1/4 தேக்கரண்டி



**செய்முறை:**
கோதுமை மாவுடன், பேக்கிங் பவுடர், அப்பச் சோடா இரண்டையும் அரித்துக் கொள்ளவும். வாழைப்பழத்தை நன்கு பிசைந்து கொள்ள வேண்டும். வெண்ணெயை, சீனியுடன் சேர்த்து நன்கு அடித்துக் கொள்ளவும். முட்டையை நுரை பொங்க அடிக்க வேண்டும். அடித்த முட்டையுடன், வெண்ணெய் கலவையை சேர்க்க வேண்டும். முட்டை கலவை, வெண்ணெய் கலவை, கோதுமை மற்றும் பிசைந்து வைத்துள்ள வாழைப்பழம், திராட்சை, முந்திரி, எசன்சுகள் அனைத்தையும் நன்கு பிசைந்து கலவையிட வேண்டும். கேக் தட்டில் பட்டர் பேப்பர் இட்டு, வெண்ணெய் தடவி, கலவையை ஊற்றி அவனில் வேக் பண்ணவும். வாழைப்பழ கேக் தயார்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 500 | 450 |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 700 | 700 | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 500 | 500 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 300 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 500 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 450 | – | – |
| ஒரா | 400 | 400 | 300 | – | 300 | 300 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 100 | 200 | – |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | 600 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | 400 | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 250 | – | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 120 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 400 | – |

## இது புதுசு



பெண்களுக்கான நாகரிக சப்பாத்துகள் அறிமுகமாகியுள்ளன. இவை, நாகரிக ஆடைகளுக்கு மட்டும் பொருந்தும். இது ஆயிரத்து 100 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப் படுகின்றன.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 60 | 50 | 60 | 70 | 40 | 40 | 90 | 30 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 100 | 100 | 110 | 90 |
| மரவள்ளி | 80 | 90 | 100 | 80 | 80 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 40 | 40 | 80 | 40 | 40 | 40 | 100 | 50 |
| பாகல் | 100 | 70 | 120 | 80 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 120 | 160 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 90 | 100 | 90 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 100 | 80 | 80 | 120 | 90 | 90 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 60 | 70 | 20 |
| தக்காளி | 40 | 60 | 50 | 60 | 40 | 80 | 120 | 35 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 | 100 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 40 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 70 | 100 | 70 | 100 | 200 | 80 |
| புடோல் | 50 | 40 | 40 | 60 | 40 | 40 | 70 | 30 |
| கோவா | 80 | 80 | 80 | 100 | 80 | 100 | 90 | 40 |
| வெண்டி | 80 | 80 | 60 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 120 | 180 | 180 | 80 | 170 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 | 100 | 100 | 90 | 90 |
| தேங்காய் | 40 | 35 | 50 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 200 | 280 | 140 | 300 | 200 | 120 | 180 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 100 | 100 | 200 | 80 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 150 | 200 | 140 | 160 | 200 | 80 | 100 |

## சமையலறையில் இருக்க வேண்டியது



சமையலறையில் முக்கியமாக இருக்க வேண்டிய பொருள் என்னவென்று கேட்டால் அடுப்பு, பாத்திரங்கள் என்றுதான் சொல்வார்கள். ஆனால், மின் விசிறி என்பது யாருக்கும் நினைவில் வராது. ஆனால், ஒரு சமையலறையில் நிச்சயம் இருக்க வேண்டியது மின் விசிறியாகும்.
உள்ளிருக்கும் அனல் காற்றை வெளியே அனுப்பும் மின் விசிறியை சமையலறையில் பொருத்த வேண்டியது மிகவும் அவசியம்.

வீட்டில் அனலை உருவாக்கும் ஒரு பகுதி என்றால் அது சமையலறைதான். எனவே, அப்பகுதியில் இருக்கும் அனலை வீட்டை விட்டு வெளியேற்றுவது மிகவும் அவசியமாகிறது. சமையலறையின் அருகில் எப்போது நீங்கள் சமைத்துக் கொண்டிருந்தாலும், அப்போது இந்த மின் விசிறி இயங்கிக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது. இதனால் சமையலறையில் நின்று பணியாற்றுபவர்களுக்கும் அனலினால் ஏற்படும் பாதிப்பு குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்

கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிறைடல் மேக்கப்(20), சாறிரொப்பிங்(10), பிறைடல் டிரெஸ்சிங்(6), பேசியல்(20), ஸ்ரெயிட்னிங், பேமிங், கேளிங், பிளக்ஸ்பொட்ட, றீட்மென்ட், ஹெயார்(கலறிங் ஹென்னாட் றீட்மென்ட், டையிங், ஓயில்மசாஜ்), பிம்பிள்ட்றீட்மென்ட், மெசினறி றீட்மென்ட்(3 வகை), திரெட்டிங், வக்ஸிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், நெயில்ஆட், மெகந்திடிசைன், ஸ்கீன்அனலைசிங், டாண்டப்ட்றீட்மென்ட், ஹெயார்செற்றிங், ஹெயார்ஸ்ரைல்(15) ஆகியன.

மேலும் தையல், கேக்ஐசிங், ஹான்ட்வேர்க், சாறிவேக் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

டிப்ளோமா கோர்ஸ்

ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
மகளிர்மட்டும்.

077 936 2642 பழைய வீதி, கோப்பாய்.

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்

யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்...

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.

உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.

**பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:**
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.

**இலவசம்:** PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...

**பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...**
செல்வோர் : யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.

**ஆரம்பம்: அடுத்த மாதம். உடன் பதிவு செய்யுங்கள்.**

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

## அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாச்சார திருமண மண்டபம்


# ASR Wedding Halls

திருமணங்கள், பதிவுத்திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் உட்பட சகலவிதமான வைபவங்களையும் உங்கள் எண்ணம்போல் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக நடத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்.**

புதுப்பொலிவுடன் புதிய பைவர் மணவறையில் உங்கள் உறவுகளின் திருமணங்களை நடத்திட முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.
ஒக்டோபர் 28,31 ஆகிய முகூர்த்த திகதிகளில் இடங்கள் இருப்பதால் இப்போதே உங்கள் பதிவுக்கு முந்துங்கள்.

**எமது திருமண மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணைந்த அனைவருக்கும் செல்வச்சந்நிதியான் அருள் கிடைக்க வாழ்த்துகின்றோம்.**



**Annamalaiyan**
**Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd**

இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 373 4116, 021 222 1355
asrhall@hotmail.com
Find us on : Facebook.com/jaffnaasrenterprises

ஆர்.வி.ஜி. குழுமம்



# றமணன் அழகுகலைப் பயிற்சி நிலையம்

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி மத்தி

புதிய பிரிவுகள் ஆரம்பம்

டிப்ளோமா கோர்ஸ்

முற்கூட்டியே பதிவு செய்யவும்

பிறைடல் மேக்கப், சாறிரொப்பிங், பிறைடல் ரெஸ்சிங், பேசியல், ஸ்ரெயிட்னிங், பேமிங், கேளிங், பிளக்ஸ்பொட்ட றீட்மென்ட், ஹெயார் (கலறிங் ஹென்னாட் றீட்மென்ட் டையிங், ஓயில் மசாஜ்), பிம்பிள்ட்றீட்மென்ட், மெசினறி ட்றீட்மென்ட், திரெட்டிங் வக்ஸிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், நெயில் ஆட், மொந்திடிசைன், ஸ்கின் அனலைசிங்; டான்டப்ட்றீட்மென்ட், ஹெயார் செற்றிங், ஹெயார்ஸ்ரைல் ஆகியன. மேலும் தையல், கேக் ஐசிங், ஹான்ட்வேர்க், சாறிவேர்க் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்
மகளிர் மட்டும்

## றமணன் டிசைனிங்

- பந்தல்
- கதிரை
- நவீன மணவறை
- பூமாலை
- பலூன் டிசைனிங்
- நிழல்க் குடை, மேசை, கதிரை
- கம்பளங்கள், நில விரிப்புக்கள்
- செல் சேவிஸ் பாத்திரங்கள்
- சமையல்ப் பாத்திரங்கள்
- கேக் ஐசிங், றெஜிபோம் கேக் ஐசிங்
- சிகை அலங்காரம்
- முக அலங்காரம்
- மணப் பெண் அலங்காரம்
- தலை மசாச்
- மருதானி
- நெயில் ஆட்
- பேஷியல்
- இமை சேப்

mail - uramanandesign@gmail.com

077 491 1974 / 021 221 5666 / 070 277 2990

(சி.25466)
(13.18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தியாகி திலீபனின்...

தேசத்தில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவத்துக்கு எதிராக 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவு ஒறுப்புப் போராட்டத்தை இதே நாளில் நல்லூர் ஆலயச் சுற்றாடலில் ஆரம்பித்திருந்தார்.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர் காவற்படை என்று அழைக்கப்படுவோருக்கு வழங்கப் பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள் பாடசாலைகள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள இராணுவ பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும் என்ற 5 கோரிக்கைகளையே திலீபன் முன்வைத்திருந்தார்.

இந்தப் போராட்டத்திற்கு யாழ். குடாநாட்டு மக்கள் பெரும் ஆதரவு வழங்கியிருந்தனர். 12 நாள்கள் உணவு ஒறுப்பு போராட்டம் நடந்தது. திலீபனின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அவர் செப்ரெம்பர் 26ஆம் திகதி வீரச்சாவைத் தழுவியிருந்தார். இதன் மூலம் அகிம்சைவாதி காந்தியின் தேசத்தின் முகத்தில் கரியை பூசிய திலீபனின் 29ஆவது ஆண்டு நினைவு, உணவு ஒறுத்தல் போராட்டத்தை ஆரம்பித்த தினமான செப்ரெம்பர் 15ஆம் திகதியான இன்று தமிழர்கள் வாழும் தேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 26ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படும் தியாக தீபம் திலீபனின் நினைவு வாரத்தை அமைதியாக கடைப்பிடிப்பதுடன், தமிழரின் உரிமைகளுக்கான போராட்டங்களை முன்னெடுப்பதுமே அவருக்கு நாம் வழங்கும் மரியாதையாகுமென குறிப்பிட்டுள்ள சமூக ஆர்வலர்கள், இந்த வாரத்தில் ஆடம்பரக் கொண்டாட்டங்கள், களியாட்ட விழாக்களை நடத்தப்படுவது ஏற்புடையது அல்ல எனத் தெரிவித்துள்ளனர். (வ-5)

## டில்லியின் ...

முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றவேளை, சம்பூர் விவகாரம் தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன. இவற்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரவை இணைப்பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன மேற்கண்ட விடயத்தை குறிப்பிட்டார்.

'உத்தேச சம்பூர் அனல்மின் நிலையத் திட்டம் தொடர்பில் சுற்றாடல் அறிக்கையை சூழலியலாளர்கள் ஜனாதிபதியிடம் கையளித்தனர். இந்தத்திட்டத்தால் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. சுற்றாடல் துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் அனல்மின் நிலையத்தை அமைப்பதற்கு அனுமதியளிக்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயணம் மேற்கொண்டிருந்தபோது, அந்த நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடியிடமும் இது தொடர்பில் விளக்கமளித்தார். இதை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டது. அந்த வகையில் இராஜதந்திர அணுமுறையின் அடிப்படையிலேயே திட்டம் கைவிடப்பட்டது.

இதற்கான மாற்றுத்திட்டமாக, இயற்கை எரிவாயு மற்றும் சூரிய சக்தி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பிலான முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. உரிய ஆய்வுகளை நடத்திய, ஆலோசனைகளை பெற்ற பின்னர் நடவடிக்கை இடம்பெறும்' - என்றார் அமைச்சர் ராஜித. (வ-5)

## 7ஈழத் தமிழ் ...

கூடியிருந்தன. இதன்போது தெரிவிக்கப்பட்டதாவது:

குறித்த இரண்டு மாநில மக்களும் ஈழத் தமிழ் மக்களுக்காக ஆதரவுகளையும், ஆறுதல்களும் கூறிவந்தவர்கள். அந்த மக்கள் துன்பப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. கர்நாடகாவில் தமிழர்களுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறைகள் காரணமாக வன்முறைகள் மற்றும் பொருள்சேதம் எனப் பல வழிகளில் இந்திய மக்கள் துன்பங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இது தொடர்பில் புதுடில்லி அரசும் மாநில அரசுகளும் உரிய நடவடிக்கை எடுத்து அனைத்துத் தரப்பு மக்களையும் காப்பாற்ற வேண்டும்.

ஓரிரு நாள்களில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் அச்சம் காரணமாக பாதுகாப்புத்தேடி தமிழ் நாட்டை நோக்கி சென்றுள்ளனர். எனவே புதுடில்லி அரசு உடனடி நடவடிக்கை எடுத்து அந்தமக்களின் வாழ்க்கையை வழமைக்குக் கொண்டுவரவேண்டும் என்பதே எமது கோரிக்கை எனத் தெரிவிகப்பட்டது. இது தொடர்பில் ஏழு ஈழத் தமிழ் கட்சிகளும் கூட்டாகக் கோரும் மனு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரிடம் இன்று மாலை கையளிப்பதென கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (வ-4,ரி1,10)

## போராளியைக் ...

அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

1998ஆம் ஆண்டில் பருத்தித்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிச் சந்தேகநபர் மீது இராணுவ அதிகாரி துப்பாக்கிச்சூடு நடத்தினார். சம்பவத்தில் சந்தேகநபர் பலியானார். இராணுவ அதிகாரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் பின்னர், அவருக்கு அண்மையில் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. உயிரிழந்தவரின் உறவினருக்கு 20 லட்சம் ரூபா இழப்பீட்டை வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்றுக் கேள்விகள் எழுப்பட்டன.

இதன்போது முதலில் பதிலளித்த இராணுவப் பேச்சாளர், விமல் விக்கிரமகே என்ற இராணுவ அதிகாரி 22 வருட கால இராணுவ சேவையின் பின்னர் சுயமாகவே ஓய்வு பெற்றார். அவர் பதவியில் இருக்கும்போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் இராணுவம் ஆரம்பகட்ட விசாரணைகளை நடத்தியிருந்தது. சிவில் நீதிமன்றத்திலும் விசாரணை நடைபெற்றதால், அந்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ளும் நிலைப்பாட்டிலேயே இராணுவத் தளபதி இருந்தார். சிவில் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் இராணுவம் தலையிட முடியாது. தனக்குரிய இழப்பீட்டுத் தொகையை செலுத்துமாறு இராணுவத்திடம் அவர் எந்தவொரு கோரிக்கையையும் இன்னும் விடுக்கவில்லை - என்றார் இராணுவப் பேச்சாளர்.

குறித்த இராணுவ அதிகாரிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவாரா என்று செய்தியாளர் ஒருவர் எழுப் பிய கேள்விக்கு இதன்போது பதில் வழங்கிய அமைச்சர் ராஜித, அவர் இன்னும் அவ்வாறானதொரு கோரிக்கையை விடுக்கவில்லை. விடுப்பதாக இருந்தால் முன்னரே விடுத்திருக்கலாம். அவர் அப்படியொரு கோரிக்கை விடுக்கும் பட்டசத்தில் அது பற்றி ஜனாதிபதி பரிசீலிக்கலாம்.

உரிய விசாரணைகளின் பின்னர்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை நாம் மதிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடு படையினரை பழிவாங்கும் நடவடிக்கை அல்ல - என்றார் அமைச்சர். (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சுப்ரமணியம்



பிறப்பு 06.06.1940 இறப்பு 13.09.2016

புலோலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் 13.09.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இந்திராணி தம்பதியினரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுகனின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும் பாலவேணியின் அன்பு மாமனாரும் சுவேதா, சுஜெந், வேரா, விகாஸ்(ஜேர்மனி) ஆகி யோரின் பேரனும் செல்லக்கண்டு, காலஞ் சென்ற சின்னராசா மற்றும் இராசேந்திரம், தங்கவேலு, கனகரத்தினம், ஆனந்தவேல், காலஞ்சென்ற வசந்தராணி மற்றும் தவமலர்தேவி, திருமலர்தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருஞானம்மா, காலஞ் சென்ற புவனேஸ்வரி மற்றும் இரத்தினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதிவீதி, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்பு 021 320 5874

### மாரிமுத்து மார்க்கண்டு

(கட்டட ஒப்பந்தகாரர்)



மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகவும், டச்சுவீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து மார்க்கண்டு 10.09.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ராசம்மாவின் அன்புக் கணவரும் ஜெயந்தி, ஜெனித்தா, சசியன், உசந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் புவனேஸ்வரராஜா(பட்டு) ஆகியோரின் அன்பு மாமனும் கிருசாந், சர்மி, கிரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

டச்சு வீதி, உடுவில்.

தகவல்: குடும்பத்தினர்.

(68232)(12.18)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நாகராசா

(இளைப்பாறிய பிரதேச முகாமையாளர் அரச மரக்கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.)



தொட்டிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா நாகராசா 12.09.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான முருகையா - தங்கப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் சிவயோகத்தின் அன்புக் கணவரும் பத்மாஸ்வரன்(உதவி பிரதேசமுகாமையாளர், அரசமரக் கூட்டுத்தாபனம், வெள்ளவாய), நாகசிலோசனா(லண்டன்), தவசீலன்(லண்டன்), நாகரஞ்சனா (ஆசிரியர் - யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலாதேவி, கைலாயநாதன்(லண்டன்), பியூலா(லண்டன்), அஜந்தன்(தேசிய வீடமைப்பு அதிகாரசபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஷகானா, விதுசியா, கஜன், அஸ்வின், அரோன், லக்ஸ்மிகாஆகியோரின் அன்புப் பேரனா ரும் கிருஷ்ணப்பிள்ளை காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, பூமலட்சுமி மற்றும் சரஸ்வதி, தில்லையம்பலம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் , சக்திவேல், சிவசங்கரப்பிள்ளை மற்றும் பவானி, சிவஞானம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தொட்டிலடி, சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்.

021 225 6022

### கந்தவனம் ரவீந்திரன்



பிறப்பு 26.07.1957 இறப்பு 14.09.2016

அல்வாய் வடக்கு, நக்கீரன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட கந்தவனம் ரவீந்திரன் நேற்று (14.09.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம்- முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அருளானந்தம்-நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும் அனுசுலாவின் அன்புக் கணவரும் சித்திரவதி, காலஞ்சென்ற தங்கத்துரை மற்றும் தேவரத்தினம், காலஞ்சென்ற சிவராசா மற்றும் யோகராணி காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் கிருஷ்ணமூர்த்தி (மனோ - ஜேர்மனி), தங்கச்செல்வன் (சுவிஸ்), சிவராசவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கயலகன், கஜானா, காருகன், கஜனிகா(யா/ மெதடிஸ்த்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை), கிருசாரகன்(யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்) வாணிகா (யா/ தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2016) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு, அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் **இலகுப்பிள்ளை சிறீதரன்** அவர்களின் அன்புத் தந்தை

### சின்னத்தம்பி இலகுப்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிக் கூட்டுறவு சங்கம்**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கடமையாற்றும் சக ஊழியர் **பு.மயூரன்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி தவமணிதேவி புஸ்பநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**Tilko Jaffna City Hotel.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 12 . 06 . 1961



மறைவு 16 . 08 . 2016

அமரர்

### முத்துக்குமார் விஜயகுமார்

கடந்த 16.08.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.09.2016) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, தொடர்ந்து சுப்பர்மடம் நடனி இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"நடனி இல்லம்"**
**சுப்பர் மடம், பருத்தித்துறை.**

**மனைவி,**
**பிள்ளைகள்.**

(N 138)(10.18)

## நடேசர் அபிசேகம்

யாழ்ப்பாணம், செப்.15
யாழ்ப்பாண இந்து சமயப் பேரவையின் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் ஆலய ஆவணி மாத நடேசர் அபிசேகம் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ந-ரி1)

## விற்பனைக்கு

புதிய சிசில் 1 கதவு குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்குண்டு. வண்ணார்பண்ணையில்.
தொடர்பு 077 8 690 161

(J/4616)(10)

## விற்பனைக்கு

பாவிக்காமல் இருப்பிலிருந்த FAN மோட்டர்களும் சில FAN சிறகுகளும் வவுனியாவில் விற்பனைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு:**
**024 2222 572**

(V/102)(10)

## தேவை

நடமாடும் பாண் விற்பனை வாகனம் ஓடுவதற்கு அனுபவமுள்ள சாரதிகள் தேவை.
**முகவரி:**
**புதிய துர்க்கா வெதுப்பகம்**
**கலைவாணி ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு.**

(J/4622)(10)

## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பிதழ்



நிகழும் துர்முகி வருடம் ஆவணி மாதம் 21ஆம் நாள் (06.09.2016) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**பிரம்மஸ்ரீ சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் கந்தராஜேஸ்வரசர்மா** (J.P)
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழிநுட்ப உத்தியோகத்தர்- யாழ். மாநகரசபை)

அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**15.09.2016 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தசாகம் (கல்லெடுப்பு)**
**16.09.2016 வெள்ளிக்கிழமை ஏகோதிஷ்டம், மாசியம்.**
**17.09.2016 சனிக்கிழமை சபீண்டீகரணம்.**
**18.09.2016 ஞாயிற்றுக்கிழமை கிருஹயக்ஞம் (மதியபோசனம்).**

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறும். ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**"இரட்ணா இல்லம்"**
43A, **அச்சுக்கூட வீதி, கொக்குவில்.**

(J/4623)(10)

**குடும்பத்தினர்.**

## ST.JOHN'S COLLEGE AND THE JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY

**APPROVED COURSES BY TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION, SRILANKA.**

- Computer Application Assistant (CAA)
- Computer Hardware Technician (CHWT)
- Computer Network Technician (CNWT)
- Communications Skills (English) & Management (CSM)
- Spoken Sinhala (SIN)

This course is suitable for school leavers and job seekers to achieve NVQ - Level 3 certificates.
Registration on or before 17 th September 2016.
Duration of Course: 19 Sep 2016 to 23 Dec 2016
Time: MON to FRI, 8.00 A.M to 2.00 PM
Location : The Jaffna Academy & School of Technology, Opposite St.John's College, Chundikuli, Jaffna.

**The Director,**
**The Jaffna Academy & School of Technology.**
**021 321 6006**

The Principal,
St.John's College,
Jaffna.
021 222 2432

## கேள்வி கோரல்கள்

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள், புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்**

**நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்**

1. பின்வரும் புனர் நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை நிறைவேற்றுப் பொறியியலாளர் யாழ்ப்பாணம், மற்றும் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாணம் கேள்விச்சபை களின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை விவரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. கோட்டைக்காடு இணைப்பு வீதி (தெல்லிப்பளை) 0.400 km | 51,000.00 | C 7 அல்லது அதற்கு மேலும் |
| 2. வடலியடைப்பு புகையிலைச்சங்கம் வீதி 0.350 km | 20,000.00 | C 8 அல்லது அதற்கு மேலும் |
| 3. செம்மணி சந்தியை புனரமைத்தலும் உயர்ந்த பாதசாரிக் கடவை அமைத்தலும் கண்டி வீதி 314 + 950 km | 34,000.00 | C 7 அல்லது அதற்கு மேலும் |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 30.09.2016 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 30.09.2016 அன்று முற்பகல் 10.30 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை **பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம், காரியாலயத்தில்** பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் ஒவ்வொன்றும் 20.09.2016 தொடக்கம் 29.09.2016 பிற்பகல் 3.00 மணி வரை மீள் அளிக்க முடியாத வைப்புத் தொகையான 2,000/= + பெறுமதி சேர் வரி 11% செலுத்திப் பெற வேண்டும்.

2. தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.
   அ)கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற் குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.
3. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர். அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை. யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.
4. முன் கேள்வி கோரல் கூட்டம் 26.09.2016 அன்று முற்பகல் 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.
5. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 60 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.
6. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
7. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் **பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண** காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (30.09.2016 மு.ப 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
8. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக **பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில்** திறந்து பார்க்கப்படும்.
   கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம். |
|---|---|
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021 – 222 - 2968. |

மாகாணப்பணிப்பாளர் (வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(C/26186)(10.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேகநபரை ...

உறவினர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளித்திருந்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பிரதேச குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையின்போது, இளவாலை வழிப் போக்குவரத்து பஸ்ஸின் உரிமையாளரே சிவகுமாரன் பிரணவன். அவரது உறவினரான கனகலிங்கம் மன்மதன் என்பவரையே சன்னாவும் அவரது நண்பர்களும் வெட்ட வந்தனர் என்றும், இரவு நேரம் அவர்கள் ஆள்மாறி பிரணவனை வெட்டிக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்பதும் தெரியவந்தது.

குற்றப்புலனாய்வு பிரிவின் ஆரம்ப விசாரணையின் மூலமாக, ஆலடி மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த சயின் என்றழைக்கப்படும் சவுந்தரராசா சயிந்திரன் (வயது-25) கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவ்வரைக் கடந்த 31ஆம் திகதி மன்றில் அடையாள அணி வகுப்பில் முற்படுத்துமாறு மன்றினால் திகதி குறிக்கப்பட்டது. எனினும், பிரணவன் கொலையில் கண்கண்ட சாட்சியான மன்மதனுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டதால், அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை.

இந்தநிலையில் அந்த அடையாள அணிவகுப்பு மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்று இடம்பெற்றது. கண்கண்ட சாட்சிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களைத் தாண்டி சாட்சி மல்லாகம் நீதிமன்றில் அடையாளம் காட்டியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கொலை செய்ய வந்திருந்தவர்களில் ஒருவர்தான் தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள சயின் என்று சாட்சி அடையாளம் காட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது. அடையாள அணிவகுப்பின் பின்னர் சந்தேகநபரின் விளக்கமறியல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. கொலைக் குற்றஞ்சாட்டப்படும் ஏனைய சந்தேக நபர்களையும் விரைவில் கைதுசெய்து மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் மன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டது. (வ-4,106)

## பான் கீ மூனுக்கு ...

காரணம் பான் கீ மூன் கொழும்பில் வைத்து அவரின் நிகழ்ச்சி நிரலை மீறி, அதிக நிமிடங்கள் எடுத்து மனித உரிமை விவகாரம் தொடர்பில் பாரதூரமான கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

சில வருடங்களுக்கு முன்பு உகண்டாவில் ஏற்பட்ட பிரச்சினை மற்றும் யூகோஸ்லவியாவில் ஏற்பட்ட படுகொலைகள் தொடர்பில் பான் கீ மூன் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். பின்னர் இலங்கை தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திரம், சுயாதீனம் மற்றும் இராணுவத்தினர் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு முன்வைத்த அனைத்துக் கருத்துகள் மற்றும் அறிக்கைகளை மீறி இவ்வாறு பான்கீ மூன் கருத்துகளை வெளியிட்டிருந்தார். இதன் போது இலங்கை அரசு மௌனமாக இருந்தது. தமது நாடு – நாட்டு இராணுவத்தினர் தொடர்பில் இவ்வாறு தெரிவிக்கும்போது மௌனமாக இருப்பது தலைகுனிய வேண்டிய விடயமாகும்.

உகண்டா பிரச்சினை மற்றும் யுகோசொலோவியா பிரச்சினையுடன் இலங்கை பிரச்சினையை ஒப்பிட முடியாது. இது தொடர்பில் எமது அரசின் (மகிந்த அரசின்) காலத்தில் நாங்கள் தெளிவான நிலைப்பாட்டை ஐ.நா.வில் முன்வைத்துள்ளோம். பொது எதிரணி நாடாளுமன்றிலும் இது தொடர்பில் தெரிவித்துள்ளது.

அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா ஆகியோர் இது பாரதூரமானது விடயம் இல்லை என்று தெரிவித்தனர். இலங்கை மாத்திரமல்ல வேறு நாடுகள் தொடர்பிலும் ஐ.நா. மனித உரிமை சபைக்கு இவ்வாறு பாரதூரமான கருத்துக்களை வெளியிடவுள்ள அதிகாரம் மற்றும் உரிமை இல்லை என்று நாங்கள் தெரிவித்திருந்தோம். இதன் காரணமாக பான் கீ மூனின் காரியாலயத்திற்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு ஏற்பட்டது.

பொது எதிரணி நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எந்தக் கருத்துகள் வந்தாலும் அதற்கு எதிராக செயற்படும். பான் கீ மூனின் இந்தக் கருத்துகள் தொடர்பில் இலங்கை அரசு ஒரு தெளிவான கருத்தை முன்வைக்க வேண்டும். இதன் ஆழ தன்மை தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம் – என்றார். (வ-5)

## மேன் முறையீட்டு...

1989ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். அவரின் பெயரை அரசமைப்புச் சபை ஜனாதிபதிக்கு பரிந்துரைத்தது. அதனடிப்படையிலேயே ஜனாதிபதி இன்று நியமனம் வழங்கி வைக்கிறார் எனத் தெரிவிக்கப் பட்டது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டிருந்த இவர், இன்றைய தினம் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவியேற்கிறார். (வ-5)

## விமல்....

பொறியியல் துறை அமைச்சராக விமல் வீரவன்ச பதவி வகித்த போது, அந்த அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவனங்களின் பெருமளவு நிதிகள் மோசடி செய்யப் பட்டுள்ளதுடன் வாகனங்களும் சொத்துக்களும் முறைகேடாக பயன்படுத்தப்பட்டது குறித்தே விளக்கம் கோரப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அரசு புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டை துண்டாடும் முயற்சிக்கு தன்னால் ஏற்படக்கூடிய எதிர்ப்புக்களை சமாளிக்கவே தன்னை விசாரணைக்கு உட்படுத்தியதாக வீரவன்ச குற்றம்சாட்டினார். (வ)

## மரண அறிவித்தல்கள்

### பாக்கியநாதன் திவிஜன்

(பழைய மாணவர் - கொக்குவில் இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி)



கொக்குவில் கிழக்கு நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் திவிஜன் நேற்று (14.09.2016) புதன் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பாக்கியநாதன் - மோகனரூபி தம்பதியரின் அன்பு மகனும் கஜானா ( NDBவங்கி தலைமையகம், கொழும்பு), சிவாஜனா (கொக்குவில் இந்துக்கல்லூரி, மாணவி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ் சென்றவர்களான பரமேஸ்வரன் - பரமதயா மற்றும் இந்திராதேவி ஆகியோரின் பெறாமகனும் சுந்தரலிங்கம் - பத்மாதேவி (கனடா), பாலராஜன் - பத்மராணி, பவளேந்திரன் - பத்மகலா ஆகியோரின் மருமகனும் காந்தரூபன் - வாணி (கனடா), பிரேமரூபன் - வினோதினி (கனடா) ஆகியோரின் மருமகனும் ரட்ணமகேசன் - வசந்தரூபி (லண்டன்), யோகராஜா - உதயகுமாரி (கனடா), குமாரசுவாமி - சுவர்ணரூபி, லோகநாதன் - ஞானரூபி (கனடா), அகிலன் - யோகரூபி (லண்டன்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிஅஞ்சலி இன்று அவரின் இல்லத்தில் (15.09.2016) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கோயில் வீதி, கொக்குவில்.

தகவல்:
க.பாக்கியநாதன் (தந்தை)

### பரமநாதர் செல்வராஜா



மறவன் புலோவைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதர் செல்வராஜா நேற்று (14.09.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சந்திரவதனாவின் அன்புக் கணவரும் பிரகலா (ஆசிரியை வட்டு மத்திய கல்லூரி), மாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரட்ணராஜாவின் அன்பு மாமனாரும் கஜீபன், தரணிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை,
(குளத்தடி)
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மேரிமக்டலின் வேதநாயகம்



டேவிற் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி மக்டலின் வேதநாயகம் 10.09.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சூசை - றோசம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தங்கம்மா தம்பதியரின் அன்புமருமகளும் வேதநாயகத்தின் (நோர்வே) அன்பு மனைவியும் நிலாயினி (பிரான்ஸ்), மைத்திரேயி (நோர்வே), சாந்தவர்ஷினி (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயும் மொறிசியஸ், லொயலா (பிரான்ஸ்), விஜயகரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் ஸ்ரெஸி (பிரான்ஸ்), ஸ்ரீவ் (பிரான்ஸ்), ஸ்ரெயின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்கம் இன்று (15.09.2016) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு (நோர்வே நேரம்) நோர்வேயில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

தோற்றம்
31
05
1933



மறைவு
13
09
2016


### அமரர் தம்பு மாணிக்கவாசகர்

யாழ்ப்பாணம் கொக்குவிலில் பிறந்தவரும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவரும், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை அறங்காவலர் சபை உறுப்பினரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உறுப்பினரும், கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி ஆலயம் மற்றும் கொழும்பு பம்பலபிட்டி சம்மாங்கோடு அருள்மிகு மாணிக்கப்பிள்ளையார் ஆலய அடியவரும் ஆகிய தம்பு மாணிக்கவாசகர் அவர்கள் 13.09.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு தம்பு, சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற K.T. நடராஜா, விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலாவதி அவர்களின் பாசமுள்ள கணவரும், கதிர்காமர், லோகேஸ்வரன், பிரகலாதன், பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விஜயந்தி, யோகசாந்தினி, ஷாமினிதேவி, லசந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌஷிகன், கீர்த்திகன், சயந்தன், சிவானுஜன், மாதங்கினி, அபிராமி, ஹரிணி, மகள்யா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்றவர்களான கனகசபை, செல்லையா, அன்னம்மா, இராசையா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், நகுலேஸ்வரி அவர்களின் பாசமுள்ள தம்பியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் 16.09.2016 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று காலை 9.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

154, W.A. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு - 06
தொலைபேசி: 0112 366 765, 0779 742 035

### பழனிவேல் சிவகுருநாதன்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், சுதுமலை அண்ணாமலை வீதியை தொழிலிடமாகவும் (சைக்கிள் கடை), மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பழனிவேல் சிவகுருநாதன் அவர்கள் நேற்று (14.09.2016) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனிவேல் - பொன்னம்மா தம்பதியரின் மகனும் தவமணிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசாமி, சுப்பிரமணியம், சிவபாக்கியம் மற்றும் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச்சகோதரரும் மல்லிகாதேவி காலஞ்சென்றவர்களான இராசமணி, நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் விஜயமாலா, ரவிக்குமார், விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணநாதன், சறோஜா, தர்மினி ஆகியோரின் மாமனாரும் கபில்ராஜ், கயூர்ணா, ஜெமினா, ரகுராம், துளசிகா, விந்துஜா, விந்துஜன், வினுஜன், கஜேந்திரன், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2016) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

உடுவில் றோட்
மானிப்பாய்,
(சம்மட்டி லேன்)

தகவல் :
விஜயகுமார் (குமார் - மகன்)
077 7928516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்ரிடி ஓய்வு பெறுவதை விரும்புகிறது பாக். சபை


பாகிஸ்தான் ரி-20 அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடி மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடருடன் ஓய்வுபெற வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற ரி-20 தொடரில் பாகிஸ்தான் மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தியமையைத் தொடர்ந்து அந்த அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து அப்ரிடி நீக்கப்பட்டார்.

அண்மையில் இங்கிலாந்துடன் பாகிஸ்தான் ஒரு ரி-20 ஆட்டத்தில் விளையாடியது. ஒரு வீரராகவேனும் அப்ரிடி அணியில் இடம்பிடிக்கவில்லை. அடுத்ததாக மேற்கிந்தியத் தீவுகளுடன் பாகிஸ்தான் அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணியில் அப்ரிடி உடனடியாக சேர்க்கப்படவில்லை. ஆனால் 16 ஆவது வீரராக சேர்க்கப்பட்டார். இதற்கு அடுத்ததாக பாகிஸ்தான் அணி அடுத்த வருடம் ஏப்ரல் மாதமே ரி-20 தொடரில் விளையாட வுள்ளது.

இந்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடருடன் அப்ரிடி ஓய்வுபெற வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்தது. அப்ரிடி மரியாதையுடன், சிறந்த வீரர் என்ற அடையாளத்துடன் விடைபெறவேண்டும். அதனால்தான் அவருக்கு தீவுகளுக்கு எதிரான அணியில் இடம்கொடுக்கப்பட்டது என அந்தச் சபை மேலும் குறிப்பிட்டது. (ம)



# பரா ஒலிம்பிக் தொடரில் இலங்கைக்கு வெண்கலம்

பரா ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது. பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் பரா ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வரு கிறது. நேற்று முன்தினம் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டி நடைபெற்றது. இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து-கள மிறங்கிய தினேஸ் பிரியந்த வெண் கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். இந்தப் போட்டியில் இந்தியா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியதுடன், சீனா வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியது. (ம)

# பந்து தாக்கி நடுவர் சாவு

ஐஸ் ஹொக்கிப் பந்துதாக்கி நடுவர் சாவடைந்த சம்பவம் செக் குடியரசில் நடைபெற்றது. செக் குடியரசில் 16 வயதிற்குட்பட்டோருக்கான ஐஸ் ஹொக்கித் தொடர் நடைபெற்றது. இதில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டமொன்றில் நடுவராகச் செயற்பட்ட பாவெல் லைங்கா என்பவரின் தலையில் பந்து பலமாகத் தாக்கியது. காயமடைந்த அவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் சாவடைந்தார். (ம)

# கோலூன்றிப்பாய்தல்; மகாஜனாவின் டிலக்சனுக்குத் தங்கம் வடமாகாணத்துக்கு மேலும் சில பதக்கங்களும் கிடைத்தன




யாழ்ப்பாணம், செப். 15

இலங்கைப் பாடசாலைகளின் தடகளச் சம்மேளனம் நடத்தும் தேசியமட்ட 'ஜோன் காப்பற்' தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக் கல்லூரியின் மாணவன் சி.டிலக்சன் தங்கப் பதக்கம் வென்றார். வெவ்வேறுபட்ட போட்டிகளில் வடக்குக்கு மேலும் சில வெண்கலப் பதக்கங்கள் கிடைத்தன.

தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்றுவருகிறது. 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக் கான கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக் கல்லூரியின் மாணவன் சி.டிலக்சன் 4.30 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கம் வென்றார். அருணோ தயக் கல்லூரி மாணவன் தனிஸ் 3.90 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பி. ஆனந் 45.27 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ச.ஹெரினா 1.45 மீற்றர் உயரத் துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

18வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில்அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த கபில்சன் 3.70 மீற்றர் உய ரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைக்கைப்பற்றினார். (ம-23-422)

# 500 மில்லியன் பவுண்ஸ்கள்; மன்செஸ்டரின் வருட வருவாய்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைற்ரெட், கடந்த ஒருவருடத்தில் 513 மில்லியன் பவுண்ஸ்களை வருவாயாகப் பெற்றதாக வெளிப்படுத்தியது.

இங்கிலாந்தில் உள்ள புகழ் பெற்ற கால்பந்தாட்டக் கழகங்களில் மன்செஸ்டர் யுனைற்ரெட்டுக்குத் தனி இடம் உண்டு.

பெரும்தொகைப் பணத்துக்கு வீரர்களை ஒப்பந்தம் செய்வது மன்செஸ்டருக்கு சாதாரண விடயம்.

இங்கிலாந்தின் செல்வந்த கால்பந்தாட்டக் கழகங்களில் ஒன்றாக மன்செஸ்டர் இருப்பதால் இந்தக் கழகத்துடன் ஒப்பந்தமாவது பல வீரர்களின் கனவு.

இந்த நிலையில் குறித்த கழகம் கடந்த ஒரு வருடத்தில் 513 மில்லியன் பவுண்ஸ்களை வருவாயாகப் பெற்றதாகத் தெரிவித்தது. விளம்பரங்கள், அனுசரணைகள் மூலம் 65 சதவீத இலாபத்தைப் பெற்றதாகக் குறித்த கழகம் மேலும் வெளிப் படுத்தியது. (ம)

# ஊரெழு றோயல், மனோகரா, ரெட்றேஞ்சர்ஸ் முன்னேற்றம்

கரணவாய், செப். 15

குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மற்றும், மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

குறிஞ்சிக்குமரன் வி.கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டங்களில், முதலாவது ஆட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 6:4 என்ற கோல் கணக்கில் மனோகரா விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் 6:2 என்ற கோல் கணக்கில் றோயல் விளையாட்டுக்கழகம்வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை மகாஜனா மாவட்டத்தில் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், செப். 15
சமபோச கிண்ணத்துக்காக பாடசாலைகளின் 15 வயதுக்குபட்ட அணிகளுக்கு இடையில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி யாழ். மாவட்டச் சம்பியனானது.
தேசியமட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் தொடரில் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. நேற்றுநடைபெற்ற பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்த 8 ஆவது, 16 ஆவது நிமிடங்க ளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீராங்கனை தர்மிகா அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது மகாஜனா. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படாத நிலையில் மாவட்டத்தில் மகுடம் சூடியது மகாஜனக் கல்லூரி. இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற இந்த இரு அணிகளும் தேசிய மட்டச் சுற்றுக்கு முன்னேறின. (ம-23)




## பற்றிக்ஸை வீழ்த்தி சம்பியனானது ஹென்றிஸ்
## தேசியமட்டத் தோல்விக்கு பதிலடியாகவும் பதிவு



யாழ்ப்பாணம், செப். 15
சமபோச கிண்ணத்துக்காக பாடசாலைகளின் 15 வயதுக்குபட்ட அணிகளுக்கு இடையில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மாவட்டச் சம்பியனானது.
தேசியமட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் தொடரில் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் அணி மோதியது. முதல் 20 நிமிடங்கள் முடிந்த பிற்பாடும் கோல் பதிவாகவில்லை. 22 ஆவது நிமிடத்தில் சென். ஹென்றிஸுக்கு மூலை உதையொன்று கிடைத்தது. அதை பிரசாந் அடிக்க நோட்டன் தலையால் முட்டி கோலாக மாற்றினார். வேறெந்த கோல்களும் முதல் பாதியின் முடிவு வரை பதிவாகவில்லை. இரண்டாம் பாதியிலும் சென். பற்றிக்ஸால் பதிலடி கொடுக்க இயலவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனானது சென். ஹென்றிஸ்.
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் சென். ஹென்றிஸை வீழ்த்தி சென். பற்றிக்ஸ் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. இந்த ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு சென். ஹென்றிஸ் பதிலடி கொடுத்ததாகக் கருதப்படுகிறது. (ம-23)



## போராடி வென்றது மேரிஸ் வி.கழகம்

யாழ்ப்பாணம், செப். 15
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். மேரிஸ் வி.கழக அணி வெற்றிபெற்றது.
இருதயராஜா வி.கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். மேரிஸ் அணியை எதிர்த்து ஐயனார் வி.கழக அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 15
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது.
(ம-108-23)




பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் வயம்ப பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது. இதன் இறுதி நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் தொடர்பே இல்லாத அளவுக்கு முழுவதும் தவறாக தமிழ் பயன்படுத்தப்பட்டது. இது சமூக வலைத்தளங்களில் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகியது. (ம)




குரும்பைகட்டி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதனோட்ட நிகழ்வில் குறித்த பகுதியைச் சேர்ந்த லோ.துவாரகன் முதலாமிடத்தைப் பிடித்தார். இரண்டாமிடத்தை செ.தினேஸ், மூன்றாமிடத்தை அ.ஜெயகஜன் ஆகியோர் தமதாக்கினர். (ம-108)

## பற்றிக்ஸின் கால்பந்தாட்ட அணிகளுக்கு இன்று கௌரவம்

யாழ்ப்பாணம், செப். 15
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் தங்கப் பதக்கத்தையும், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் வென்ற சென். பற்றிக்ஸ் கல்லூரியின் கால்பந்தாட்ட அணிகள் இன்று கல்லூரிச் சமூகத்தால் கௌரவிக்கப் படவுள்ளன. கல்லூரியின் பிரதான மண்டபத்தில் காலை 9 மணிக்கு அதிபர் ஜெறோ செல்வநாயகம் தலைமையில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

### பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மனைப் பொருளியல் பாடத்திற்கு நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு - 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

(தமிழ் மொழி மூலம்) - 2016 (III)

தமிழ் மொழி மூலம் மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2016.09.30** ஆகும்.

விண்ணப்பதாரிகள்

**www.np.gov.lk ⟶ Recruitment and Exam ⟶ Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**ரு.வரதலிங்கம்**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(C/26184)(10.18)


# சரியான செயல்களைச் செய்ய இயலாத சந்தர்ப்பத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் வீடு செல்வதே சிறந்தது

## ரணதுங்க முழக்கம்



"சரியான செயல்களைச் செய்ய இயலாத விடத்து விளையாட்டுத்துறை அமைச்சர் வீட்டுக்குச் செல்வதே சிறந்த செயல்" இவ்வாறு தெரிவித்தார் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சர் ரணதுங்க.

'சேவ் த ஸ்போட்ஸ்' நிறுவனத்தால் கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட மாதாந்தக் கலந்துரையா டலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எந்தவொரு விடயமும் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வெல்ல வேண்டும் என்று 10 ஆண்டுகளுக்கு முன்னரே திட்டமிட்டோம். வெற்றி கண்டோம். ஆனால், தற்போது எமது விளையாட்டு அமைப்புக்களிடம் எந்த விதத் திட்டங்களும் இல்லை. ரியோ ஒலிம்பிக் தொடரில் இலங்கையின் பெறுபேறு தொடர்பாக நான் அதிருப்தியடைந்துள்ளேன். யாரைக் கேட்டாலும் என்னைப் போன்றே அவர்களும் பதில் தருவார்கள். அடுத்த ஒலிம்பிக் தொடர் தொடர்பாகவும் எம்மிடத்தில் திட்டங்கள் இல்லை. இவற்றை ஆராய்வதற்குத் தனிக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும்.

அரசு மாற்றமடைந்த போதிலும், தேசிய ஒலிம்பிக் குழுவில் முன்னைய நபர்களே உள்ளார்கள். எம்மிடையே ஒலிம்பிக் இல்லமொன்று உள்ளது. இந்த இல்லத்தை அமைக்கும் பொழுது, விளையாட்டுச் சங்கங்களுக்கெனத் தனியான அலுவலகங்கள் நிறுவப்பட வேண்டுமென கொள்கை பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் மேசைப் பந்து சங்கத்துக்கென எம்மிடத்தில் அலுவலகமொன்று இல்லை. மேசைப்பந்தாட்ட அலுவலகம் வரவேண்டிய இடத்தில் சீன விடுதியொன்று உள்ளது. எங்களுடைய முக்கிய தேவை பணமா என்பது தொடர்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சரே ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆராய்வதற்கு அல்லது முடிவுகளை எடுப்பதில் அவர் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். கடந்த காலத்தில் விளையாட்டுதுறை அமைச்சர்கள் ஒலிம்பிக் குழுவுடன் பிரச்சினைகளை எதிர்கொண்டார்கள் என்பதை நாம் அறிவோம். சிலர் உண்மைகளை வெளிப்படுத்தி வீடு சென்றார்கள். சரியானசெயலைச் செய்யமுடியாததாயின் விளையாட்டுத்துறை அமைச்சர் வீட்டுக்குச் செல்வதே சிறந்த செயலாகும் என ரணதுங்க மேலும் தெரிவித்தார். (ம)


## வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்
## பணிநிலை வெற்றிடம்

**I. பதவி - முகாமையாளர்**
**சம்பள குறி இல - 115/10**
**சம்பள அளவுத்திட்டம் -** 15305 - 18905 / 170 X 10 - 190 X 10 (13/2015 சுற்றுநிருபப்படி)

### தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட வியாபார பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகள்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர்(உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் தொடர்புபட்ட வியாபாரப் பதவியொன்றில் நான்கு(04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**II. பதவி - எழுதுனர்**
**சம்பள குறி இல - 302/11**
**சம்பள அளவுத்திட்டம் -** 14945 - 17955 / 145 X 10 - 160 X 10

### அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட கணக்குப் பதிவாளர் / எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு(02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13 ஆவது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் கணக்கு அலுவல்களுடன் தொடர்புடைய நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர்(உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் கணக்கு அலுவல்களுடன் தொடர்புடையதாக இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

### பொதுவான தகைமைகள்

01. வயது 18 தொடக்கம் 45 வரை(சங்கப் பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
02. பிணை - தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பவற்றை செலுத்தத்தயாராக இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பதாரி சங்கப்பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
04. விண்ணப்பிக்கும் முறை - மேற்படி பதவிக்கான விண்ணப்பப்படிவத்தினை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10.00 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதியுடன் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு தலைவர், **வலிகிழக்கு வாழைக்குலை உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி வடக்கு** என்னும் முகவரிக்கு 30.09.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்**
**வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கம்.**



**A/L 2017, A/L 2018**
பிரிவிற்கான பொருளியல், கணக்கீடு பாடங்களுக்கான பிரத்தியேக, குழு வகுப்புக்கள்.
★கந்தர்மடம் ★கொழும்புத்துறை
ஆரம்பம்: 15.09.2016 வியாழன் 3 மணி
Call :- 0778448535, 0772168884



**PERSONAL CLASS**
Maths, Science } O/L வகுப்பு
Biology, Chemistry } A/L வகுப்பு
T.P: 07562 95662
(J/4618)(10)



**TOEFL iBT & IELTS**
021-3208342 / 0777-302882
http://edu.kugroup.info/toefl
http://edu.kugroup.info/ielts
**BCBL@KU Education**
No 788/4,Chemmani Rd,Nallur
(Muthirai Junction-Opposite Kiddu Park)



**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்**
**பங்குதாரர்களுக்கான முக்கிய அறிவித்தல்**

எமது 72 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 2016 செப்ரெம்பர் 17ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத சில காரணங்களினால் மேற்படி கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. மீண்டும் பொதுக்கூட்டத்திற்கான திகதி பின்னர் அனைவருக்கும் அறிவிக்கப்படும்.

பங்குதாரர்களுக்கு இதனால் ஏற்படும் சிரமங்களுக்கு வருந்துகின்றோம்.

13.09.2016 (J 4584) (14,17,18)
**இ.சபேசன்**
**காரியதரிசி**



**செரண்டிப் சிறுவர் இல்லத்தினால் நடத்தப்படும்**
A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான புதிய இலவசக் கணினிக் கற்கைநெறிகள்
**Photoshop, Page maker** என்பன, ஏழாலை தெற்கில் அமைந்துள்ள தமிழ்ப் பொதுப்பணி மன்ற சனசமூக நிலையத்தில் September 19 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.
அன்றையதினம் காலை 9.30-10.30 மணி வரை தங்கள் பெயர்களை சனசமூக நிலையத்தில் பதிவு செய்து கொள்ளலாம்



**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
சமுர்த்தி
வெள்ளி, சனி 9.00-3.30 மணிவரை
வட மாகாண நன்நடத்தை உத்தியோகத்தர்
வெள்ளி 9.00-4.00
வட மாகாண ஆய்வு உத்தியோகத்தர்
வெள்ளி 9.00-4.00
வட மாகாண ஆசிரியர்
பிரதி ஞாயிறு 10.00-3.00
சட்டமாணி நுழைவு
வெள்ளி,சனி, ஞாயிறு 9.00-3.00
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
ஆஸ்பத்திரி வீதி,
கொமர்ஷல் வங்கியருகில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



# தொண்டமானாறு
# ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய
## தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 15.09.2016

### தேர் கவிதை



தேர் வரத னேதே வயானை வள்ளி
கணவனே திருமா வின்மரு கபக்திச்
சீர் மனோ வேதா முத்திக் குவித்தே
சூரப துமவீதி யேதே வருய்யப்
போர்செயு தேவே நீன்துகழல் அடியவர்
சிந்தை யுளுறை சிவகுரு வேசகத்
தோர்போற் றிச்சர ணாகும வருள வேல்
நீ! ஓம் செல்வச் சந்நிதி முருகனே

**பண்டிதர்.வ.ஆ.தாங்கமயில் M.A**

## ஆலய வரலாறு

கோயில் என்றால் சிதம்பரத்தைக் குறிப்பது போலச் சந்நிதி என்றால் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியையே குறிக்கும். ஈழத்துத் திருச்செந்தூர் என்று போற்றப்படும் திருத்தலமாகச் சந்நிதி முருகன் ஆலயம் திகழ்கின்றது. பழைமையும் பெருமையும் மிக்க சந்நிதித்தலம் கந்தபுராண வரலாற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. முருகப் பெருமானின் தூதுவராகச் சூரனைச் சந்திப்பதற்கெனத் திருச்செந்தூரில் இருந்து மகேந்திரபுரிக்கு வருகை தந்த வீரவாகுதேவர் இங்கு தங்கி முருகப்பெருமானை வழிபட்டார் என்று கூறப்படுகின்றது. தொண்டைமானாறு வள்ளி ஆறு என்றும் கோயில் இருக்கும் இடம் கல்லடி என்றும் அழைக்கப்பட்டது. ராவக என்ற தவமுனிவர் சமாதி அடைந்த இடத்திலேயே ஆலயத்தின் தல விருட்சமாகிய பூவரசு காணப்படுகின்றது. சந்நிதியானின் அருளை நாடிவரும் பக்தர்கள் இந்த இடத்திலேயே அமர்ந்து பிரார்த்தனை. தியானம் என்பன செய்து முருகனை உள்ளம் உருகி வழிபடுவார்கள். சந்நிதியானின் பூவசர மரநிழல் ஞான பண்டிதன் நடனமாடித் திரிந்து அருள் விளையாட்டுக்களை நடத்தும் இடமாகத் திகழ்கின்றது. மலை போலத் துன்பங்களைத் தாங்கி வரும் அடியவர்கள் இந்த நிழலில் இருந்து உள்ளம் உருக்கிக் கண்ணீர் சொரிந்து சந்நிதியானின் திருவடிகளைத் தஞ்சமெனப் பற்றித் தீர்வுகள் கண்ட வரலாறுகள் பல உள்ளன. பக்தன் இறைவனோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு வணங்கும் ஆலயமாக அன்பின் மிகுதியினால் உரிமையுணர்வோடு முருகனை அடியவர்கள் வழிபடும் தலமாகச் சந்நிதியான் ஆலயம் உள்ளது. ஏழை பங்காளனாகத் திக்கற்றவர்களுக்குத் திசை காட்டும் தெய்வமாகத் தஞ்சம் என வந்தவர்களை அஞ்சேல் என்று அபயகரம் காட்டிக் காப்பாற்றும் காவலனாக பசிப்பிணி போக்கும் மருத்துவனாக. உளநோய் தீர்க்கும் உளவியலாளராக. பலரின் உடற்பிணி தீர்க்கும் வைத்தியனாகப் பாவ வினைகளை அறுக்கும் பரம கருணாநிதியாக சந்நிதியான் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு ஆறுதல் தருகின்றான். முருக பக்தராகிய மருதர் கதிர்காமரைக் கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்ற முருகன் அங்கே மேற்கொள்ளப்படும் பூசை முறைகளைக் காட்டி அந்த வழியிலே தன்னையும் பூசிக்குமாறு பணித்தார். தமது வாயை வெள்ளைத் துணியால் கட்டி அறுபத்து நான்கு ஆலம் இலைகளில் காலையும் மாலையும் அமுது படைத்து விபூதி நிறைந்த தட்டில் கற்பூரத்தை வைத்து தீபம் காட்டிப் பயபக்தியுடன் கதிர்காமர் பூசை செய்து வந்தார். கதிர்காமரின் பரம்பரையில் வந்தவர்கள் ஆசாரசீலர்களாக இன்றும் அந்த மரபிலேயே பூசைகளைச் செய்து வருகிறார்கள். முருகப் பெருமானுக்கு நிவேதித்த ஆலமிலைப் பிரசாதமும், தீர்த்தமும், திருநீறும் தலவிருட்சமாகிய பூவரச மரத்தின் பழுத்த இலையும் தீராத வினைகளையும் தீர்க்க வல்லவையாக உள்ளன. சனிக்கிழமைகளில் சுத்தமான எள்ளில் இருந்து ஊற்றப்படும் நல்லெண்ணெய்யில் திருமுழுக்குப் பூசையும், மாலையில் பிட்டுப் பிரசாதமும் நிவேதிக்கும் வழக்கம் உண்டு.

கதிர்காமக் கொடியேற்றத்தின் போது சந்நிதி வேலவனுக்கு உழுத்தம் பிட்டு நிவேதித்து இங்கிருந்து முருகனை வழியனுப்பும் வைபவமும், கதிர்காமத் தீர்த்தத்தின் பின் முருகன் ஆலயத்துக்கு எழுந்தருளும் போது பயத்தம் துவையலும் இளநீரும் நிவேதித்து வழிபாடு செய்யும் மரபும் இன்றும் காணப்படுன்றது. சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து அடியார்கள் பாத யாத்திரையாகக் கதிர்காமம் சென்று முருகனைத் தரிசித்து வந்தார்கள். உடல் உபாதைகள் எதையும் பொருட்படுத்தாமல் முருக நாமத்தை உச்சரித்தபடியே திருவடி யாத்திரையாகக் கதிர்காமம் செல்லும் அடியவர்கள் அங்கு சென்றடைந்ததும் ஆனந்தக் களிப்பில் தம்மை மறந்து ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் முருகனை வணங்குவார்கள். ஏழு மலையும் தாண்டி வந்த எங்களைத் தானே முருகன் ஏறெடுத்துப் பார்க்கையிலே தூண்டவக்கோனே என்று பக்திப் பரவசத்தில் ஆனந்தக் கூத்தாடி முருகனை வழிபடுவார்கள். உள்நாட்டுப் போரினால் சந்நிதி ஆலயச் சூழலும் சிதைவுற்றது. கோயிலின் மூன்று திசைகளிலும் 45 அன்னசத்திரங்களும் 36 கிணறுகளும் இரண்டு குளங்களும் இருந்தன. ஆயிரக் கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் உணவு உண்ணக் கூடிய முறையில் அன்ன சத்திரங்களும் அமைந்திருந்தன. இதுவேறு எக்கோயிலிலும் இல்லாத விசேட அம்சமாகும். சந்நிதியில் சோறு மணக்குதடா என்று தவத்திரு யோகர் சுவாமிகள் கூறியிருந்தார்.

கோயிலின் தெற்குத் திசையில் தென்னை மரச்சோலையின் நடுவே மயில்வாகன சுவாமிகள் ஆனந்தாச்சிரமத்தினை மிகச் சிறப்பாக நடத்தி வந்தார். இவரின் சீடரான மோகன தாஸ் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தினை நிறுவிச் சிறப்பாக நடத்தி வருகின்றார். அன்னதானப் பணியுடன் ஆச்சிரமத்தின் கலை பண்பாட்டுப் பேரவையால் சமய நிகழ்ச்சிகளும் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. ஞானச்சுடர் ஆன்மீகப் பத்திரிகையைப் பல வருடங்களுக்கும் மேலாக வெளியிட்டு வருகிறார்கள். இன்று பல அன்னதான மடங்கள் ஆலயச் சூழலில் இயங்க ஆரம்பித்துள்ளன.

பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள் எனப் பலரும் சந்நிதி ஆலயச் சூழலில் நடமாடித் திரிந்தார்கள். இன்றும் திரிகின்றார்கள். அவர்களுக்கூடாகச் சந்நிதி முருகன் அருள் வெளிப்பாடுகளைச் செய்வான். கடவுள், சுவாமிகள், கௌரிபாலா என்று அழைக்கப்பட்ட ஜேர்மன் சுவாமிகள், திருப்புகழ் சுவாமிகள் எனப் பல சித்த புருஷர்கள் சந்நிதி ஆலயச் சூழலிலே நடமாடித் திரிந்தார்கள். போர்க்காலச் சூழலினால் பாதிப்புற்ற சந்நிதி ஆலயம் புனரமைக்கப்படுவதற்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கும் சிவபதம் அடைந்துவிட்ட தவத்திரு முருகேசு சுவாமிகள் உறுதுணையாக இருந்து செயற்பட்டார்கள். காவடி, கரகம் ஆகிய கிராமியக் கலைகள் மிகச் சிறப்பாக நடைபெறும் இடமாகவும் சந்நிதி ஆலயம் திகழ்கின்றது. பாற்காவடி, பறவைக் காவடி, ஆட்டக்காவடி, தூக்குக்காவடி எனப் பல காவடிகளை மஹோற்சவ காலத்திலே ஆலய வீதிகளில் காணலாம். கந்தா, முருகா, கதிர்வேலா, ஞானபண்டிதா, சந்நிதிவேலா என அடியவர்கள் முருகனைக் கூவி அழைத்தும் அங்கப் பிரதட்சணம் செய்தும், ஆடியும், பக்தி பூர்வமாக வழிபடும் காட்சியைச் சந்நிதியிலே காணலாம். சந்நிதி முருகனின் அடியவர்களின் கூட்டு முயற்சியினால் இந்திய சிற்பாசாரியார்களின் துணையுடன் திருவாரூர் தியாகராஜப் பெருமானின் தேர் அமைப்பில் 1984ஆம் ஆண்டு சித்திரத் தேர் அமைக்கப்பட்டது.

**சிவத்தமிழ் வித்தகர்**
**சிவமகாலிங்கம்**

## ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய ரதோற்சவம்



நிகழும் மங்கலகரமான துர்முகி வருட ஆவணி மாத 30ஆம் நாள் (15.09.2016) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் எம்பெருமானின் ரதோற்சவம் நிகழ இறையருள் பாலித்துள்ளது.

தேர் என்றதும் சிவபிரான் முப்புரம் எரிக்க முயற்சித்த பொழுது ஆரம்பமானது. முப்புரம் மும் மலம்-, எரித்தல், அழித்தல். அன்றுதொட்டு தேர் போருக்குப் போர் வாகை சூடி வர, திருமண ஊர்வல (வசுதேவ. தேவகி, ஊர்வலம். பெறுபேறு ஹம்சவதம்). குழந்தைகள் சிறு தேர் உருட்டல் ( தென்னம் குரும்பையில் செய்து) போன்ற நிகழ்வுகள் எம் கண் முன் ஓடி வந்தாலும் ஆற்றங்கரையான் சந்நிதி வேலன் தேரில் ஆரோகணித்து வரும் அழகு கண்கொள்ளாக் காட்சி. நால்வேத, சைவசித்தாந்த, ஆகம, புராண, இதிகாசங்களிலிருந்து பக்திரச நனி சொட்டலில் துதைந்த கதிர்காமர், கதிர்காமத்துப் பூசைபோல தூய வெண்துணி வாயை மூட மனமெனும் கல்நெஞ்சுருகு பக்தியில் அநுபூதியாக செய்யும் பூசையின் மகத்துவத்தை கண்டவர் விண்டுவரோ. விண்டவர் தாம் கண்டிடுவரோ.

குபேர மூலையில் திவ்ய லோகத்திலிருந்து காவடிகள் வந்திறங்கும் சங்கதிகள், ஈசானப் பக்கத்து றோட்டருகாமை பறங்கிப்பழனி மலையில் முருகன் நல்லுபதேசித்துத் தைப்பூசம் தோறும் பொங்கல் படைப்பித்துப் பிரார்த்திப்பதும் இன்னோரன்ன அற்புதங்கள் நிறைந்த எம் ஆலயத்தில் பஞ்ச கிருத்திய அழித்தல் தொழிலைச் செய்ய முருகன் அற்றைநாள் தேரில் ஆரோகணித்து வருவான்.

ஊர்கூடி தேர்வடம் பற்றி தேரை
ஊர்ந்து செல்ல அரோகரா முருகா
வேலனுக்கு அரோகரா ஆற்றங்கரை
யானுக்கரோகரா என்று கோசமிட்டு
ஞான சக்தியாகிய வேலை வணங்கி

அருள்பெற விநாயக, வள்ளி, தேவயானை முன்பின் வரும் ரத வரிசைக்காட்சி காண நாற்பதாயிரம் கண் வேண்டுமே. எல்லோரும் நல்லருள் பெற ஆசி கூறி எம் கந்தபுராணக் கந்தப் பெருமானை வழுத்தி பாதங்களை இறைஞ்சிப் போற்றுகின்றோம். [illegible]

**பிரதமகுரு**
**சிவஸ்ரீ ஆறுமுகசாமி சிவசண்முக ஐயர் J.P**
**தலைவர், செல்வச்சந்நிதி ஆலய பரிபாலன சபை.**

## ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர் உற்சவம்

நிகழும் மங்கலகரமான துர்முகி வருட ஆவணி மாத 30ஆம் நாள் (15.09.2016) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு எம்பெருமானின் தேர்த்திருவிழா ஆரம்பிக்க திருமால் மருக சிவகுரு நாத சங்கர்ப்பித்துள்ளதாக திருவருள் பாலித்துள்ளது.

கொடியேற்றத் திருவிழாவின் குறியீடு பஞ்ச கிருத்தியத்தின் படைத்தலையும், வாகனாதி உற்சவங்களைக் காத்தலின் குறியீடு என்றும் வேட்டைச் சப்பறம்,தேர்த்திருவிழாக்கள் அழித்தலின் குறியீடு என்றும் சூர்னோற்சவம் மௌனத் திருவிழா மறைத்தலின் குறியீடு என்றும் தீர்த்தத் திருவிழா அருளலின் குறியீடு என்றும் இறைவனின் பஞ்சகிருத்தியங்கள் என்னும் சித்தாந்தக் கருத்தினைப் பதி ஆகிய இறை பசுவாகிய ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டு பாசம் (மலங்களை) நீக்கிச் செய்யும் இவ் ஐந்து தொழில்களையும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பர்.

எனவே எம்பவவினை அழி , ஊழ் (கு-ஊழ்) ஒழிய குமரன் தேரில் ஆரோகணித்து வீதி உலா வந்து பக்த கோடிகள் பக்திப் பிரபாவத்தில் தோய்ந்து அரகர (அரோகரா) என்று மெய் சிலிர்க்க ஆர்ப்பரித்து தேர்வடம் பற்றி தேரை இழுத்துத் தம் ஊழை அழிக்க முயலும் அருமருந்த குறியீட்டுத் தத்துவத்தைக் கண்டும் தொலைநோக்கில் கண்டு கொண்டும் செய்தி பரிமாறல் சாதனங்களாகிய தினப்பத்திரிகைகளில் கண்டு வாசித்து வந்து வணங்கிஅருள்பெற்று ஏகுமாறு எந்நிதியிலும் பெருநிதியாம் சந்நிதிக் கந்தனை மனமார அழுந்த வழுத்தி இறைஞ்சிப் பக்த கோடிகளுக்கு ஆசியும் கூறுகின்றோம்.

"யாம் இருக்கப் பயமேன்" முருகா

**ஆலய உரிமையாளர்,**
**தங்கராசா ஐயர், அகிலேந்திர ஐயர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி




# தொண்டமானாற்றில் வீற்றிருந்து அருள் புரியும் அன்னதானக் கந்தன்

இலங்கையின் கரையோரத்தை ஆட்சி புரிந்த அந்நியரான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், அதன்பின் ஆண்ட ஆங்கிலேயரும் இந்தப் பகுதிகளுடன் வணிக முறையில் தொடர்புகொண்டிருந்தனர். ஒல்லாந்தர் காலத்துடனேயே இலங்கையின் காணிகளுக்கான பதிவேடுகள் எனக் கூறப்படும் தோம்பு எனும் காணி உறுதிகள் வழங்கப்பட்டன.

இந்தக்காலத்தில் பதியப்பட்ட தோம்புகள் செல்வச் சந்நிதி ஆலயத்தின் தோற்றத்திற்குரிய முதல் எழுத்து வடிவசாதனமாகும். அதன் பின்னர் ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் இலங்கையில் காணப்படும் ஆலயங்கள் எல்லாவற்றையும் உரியவாறு பதிந்து ஆலயப்பதிவேடு என்னும் ஆவணத்தை உருவாக்கினர். இதில் பெருமை மிக்க செல்வச்சந்நிதி ஆலயத்தின் தோற்றம் தொடக்கம் அமைப்பு நடைமுறை என்பவற்றைக் குறித்து வைத்தனர்.

இவர்களின் பதிவேட்டின் துணையைக் கொண்டு செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆரம்ப வரலாறு பரத வம்ச மருதர் கதிர்காமருடன் தொடங்கி மிளிர்ந்ததை உண்மையென அறியமுடிகின்றது.

மருதர் கதிர்காமம் என்பவர் சிறுவனாக இருந்தபோது தொண்டமானாறு ஆற்றங்கரையில் மீன் பிடித்து வந்தார். இவர் வழமைபோல் அன்றும் ஆற்றம் கரையிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அவரை நோக்கி ஒரு குரல் "கதிர்காமர் இக்கரைக்குவா" என்றது. ஆச்சரியத்துடன் கரைக்குச் சென்ற கதிர்காமரிடம் சந்நிதி முருகன் காட்சி கொடுத்தார்.

சிறுவனான கதிர்காமரிடம் தொண்டமான் ஆற்றம் கரையாகிய இவ்விடத்திலே இருக்கின்ற பூவரசமரத்திலே எனக்கொரு ஆலயம் அமைத்து வழிபடுக என்று பணித்தார். அதற்கு கதிர்காமர் நானோ கடற்றொழில் செய்பவன். எனக்கு பூஜை முறைகள் தெரியாது என்று பணிவுடன் கூற முருகன் கதிர்காமரை கண்களை மூடுமாறு பணித்து கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூஜை முறைகளைக் காண்பித்து வழிபாட்டுக்கு ஒரு வேல் ஒன்றையும் வழங்கியதாக நூல்கள் தெரிவிக்கின்றன.

அன்று தொடக்கம் முருக ஆசாரசீலராகிய கதிர்காமர் தொண்டமானாற்றங்கரையிலே செழிப்புற்று வளர்ந்துள்ள பூவரசமரத்தடியில் வேலை பிரதிஷ்டை செய்து வழிபட்டு முடிந்த பின்பு திருநீற்றைக் கொடுக்கும் முறை தெரியாமல் கதிர்காமர் தடுமாறிய போது, "கதிர்காமா நீ திருநீற்றை எடு நான் போடுகின்றேன்" என்று அசரீரி வாக்குக் கேட்டதாக கூறப்படுகின்றது.

அன்று முதல் தட்டிலிருந்து திருநீற்றை எடுப்பது கதிர்காமராகவும் அதைப் போடுபவராகவும் சந்நிதி முருகனாகவும் பக்த அடியார்கள் கருதி அவரின் காலில் விழுந்து திருநீற்றைப் பெறும் பொழுதும் தலையிலும் திருநீறு இடப்படும். இந்தக்காட்சியைக் கண்டு பக்தர்கள் பெரிதும் பரவசமடைவார்கள்.

இப்படிப் பூசை செய்து வந்த கதிர்காமர் மனதிலே நியாயமான கவலை ஒன்று அவர் மனதிலே ஏற்பட்டது. சந்நிதி முருகனுக்கு நைவேத்தியம் படைக்கத் தெரியாதே என்ற கவலையுடன் காணப்பட்டார். அப்படியிருக்கையில் ஒருநாள் முதியவர் ஒருவர் கதிர்காமரை நோக்கி நான் களைப்பாக இருக்கின்றேன். எனக்கு ஓர் ஆலம் இலையில் கொஞ்சம் பச்சரிசிப் பொங்கலும், பயற்றங்கறியும் வைத்துத் தந்தால் போதும் என்றார்.

மகிழ்ச்சியடைந்த கதிர்காமர் உடனடியாகப் பொங்கல் பொங்கி பயற்றங்காயை கறியாக்கி அதன்குழம்பையும் ஊற்றி ஆலம் இலையில் கொடுக்க முதியவர் அற்புதமான பொங்கல் என்று பெருமிதமடைந்து கொண்டே அங்கே அறுபத்தி மூன்று பேர் இருக்கின்றனர். அவர்களுக்கும் உனக்கும், எனக்கும் சேர்த்து அறுபத்தைந்து பேருக்கு ஆலம் இலைகளில் அமுது வழங்க வேண்டும் என்று கூறியவாறு முருகன் காட்சி கொடுத்தார்.

கதிர்காமர் சந்நிதியை நோக்கி ஓடினார். வேல் வழமைக்கு மாறாக பிரகாசித்துக் கொண்டிருந்தது. சந்நிதி முருகன் ஆலம் இலையில் வைக்கப்பட்ட பச்சரிசிப் பொங்கலும் பயிற்றங்காய்க் குழம்பும் உண்டதாக வரலாறு சான்று பகருகின்றது.

இதனாலே தான் இன்றும் செல்வச்சந்நிதியில் பூசை நேரங்களின்போது அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது படைக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது.

ஜராமுனிவர் சமாதியடைந்த இடத்தில் குரு பூசை செய்யவும் வேண்டும் என ஐதீகம் இருந்தமையால் கதிர்காமரும் அவர் பின் வந்த சந்ததியினரும் பிதிர்க் கடமை போன்று இதனைச் செய்து வரலானார்கள். அன்று முதல் இன்றுவரை இதனைக் கடைப்பிடித்து பூசைகள் செய்து வருகின்றனர்.

கதிர்காமர் முதலில் ஆலயம் அமைத்துப் பூசை செய்த பின்னர் மற்றைய பங்காளரது காணிகள் யாவற்றையும் கொள்விலையாக வேண்டினார். இதற்கு தோம்பு உறுதி சான்றாக உள்ளன.

கதிர்காமரும் அவரின் மகனாக வேலுப்பிள்ளையும் மற்றும் பிள்ளைகள் எல்லோருமாக இந்தக் கோயிலை முதன்முதலில் 1824ஆம் ஆண்டு உருவாக்கினர். வேலுப்பிள்ளை மற்றும் கதிர்காமரது பிள்ளைகளும் பனையோலையால் வேயப்பட்ட சிறு கொட்டில் அமைத்து அதில் வழிபாட்டுப் [illegible] பின்னர் தன[illegible] பிள்ளைகளுக்கு இங்கு கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகளையும், பூசை முறைகளையும் அவர் உபதேச முறையில் கூறினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் பிரகாரமே கூறப்பட்டுள்ள தொண்டுகளை மற்றைய பரம்பரையினரும் கைக்கொண்டு வருகின்றனர். இவர்கள் இந்தக் கோயிலின் சுற்றாடலிலும் சுற்றியுள்ள ஊர்களிலும் ஆசாரமாகவும் புனிதமாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது பூசை முறையானது பக்தி மார்க்கத்தின் உச்ச ஸ்தானமாகும்.

செல்வச்சந்நிதி ஆலயத்தில் அமைந்திருக்கும் ஆற்றங்கரை வேலவனது அருளாட்சிச் சிறப்பை நோக்கினால் செல்வங்கள் பலவற்றை தம்மை நாடி வரும் அடியார்க்கு நல்கி அவர்களது பிறவிப் பிணியை அறுக்கும் திருப்பிரசாதத்தை நாள்தோறும் கொடுத்த வண்ணம் இருப்பதைக் காணலாம். நாள்தோறும குறிப்பாக வெள்ளிக்கிழமை தோறும் வரும் அடியார்க்கு சந்நிதி முருகனின் கருணைக் கடாட்சமும் அருளும் கிடைக்கத் தவறுவதில்லை. மருதர் கதிர்காமர் அறுபத்தைந்து ஆலம் இலைகளை வைத்து அமுது படைத்த ஐதிகம் செல்வச் சந்நிதிக்கு உண்டு. அவரின் பின்னர் ஆண்டியப்பா என்பவரால் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் [illegible]லேயே இக்கோயிலில் [illegible]ங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தக் கோயிலைச்சுற்றி ஏறக்குறைய 45 மடங்கள் இருக்கின்றன. இவற்றில் அடியார்கள் பலர் நேர்த்தி வைத்து அன்னதானத்தை தானமாக வழங்குகின்றனர். தீராத நோய்களைத் தீர்ப்பதில் கல்லோடைக் கந்தன் பெரும் வைத்தியராக காட்சியளிக்கின்றார். நோயுற்றவர்கள் இங்கு வந்து ஆற்றிலே மூழ்கி பிறவிப் பிணியை அவன் கழல் பற்றி கசிந் துருகிக் கேட்க அவர்களது தீராத் துன்பங்களைத் தீர்த்து வைக்கின்றார்.

இலங்கையில் அநேக அன்னதான மடங்களைக் கொண்ட ஆலயமாக சந்நிதி முருகன் ஆலயத்தையே குறிப்பிட முடியும். இதனால் தான் சந்நிதி முருகன் அன்னதானக்கந்தன் என்று அடியார்களினால் அழைக்கப்படுகின்றார். ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவதில் சந்நிதி ஆலயம் ஒரு முன்னோடியாகவே விளங்கி வருகின்றது.

எத்தனை ஆயிரம் பக்தர்கள் வந்தாலும் இல்லையென்று சொல்லாமல் மிக அன்புடனும், பணிவுடனும் அன்னதானம் வழங்குவார்கள். அன்னதானக்கந்தன் என்று பெயர் வரக்காரணம் என்னவென்றால் தன்னை நாடி வரும் அடியார்களுக்கு எந்தநேரமும் பாராது அமுது வழங்குவதால்தான். அதிகமான அன்னதான மடங்களைக் கொண்டுள்ள சந்நிதிமுருகன் ஆலயம் சிறப்புற்று விளங்குவதற்கு அதுவும் ஒரு காரணமாகும்.

"எத்தனை ஆயிரம் பக்தர்கள் வந்தாலும் இல்லையென்று சொல்லாமல் மிக அன்புடனும், பணிவுடனும் அன்னதானம் வழங்குவார்கள். அன்னதானக்கந்தன் என்று பெயர் வரக்காரணம் என்னவென்றால் தன்னை நாடி வரும் அடியார்களுக்கு எந்தநேரமும் பாராது அமுது வழங்குவதால்தான். அதிகமான அன்னதான மடங்களைக் கொண்டுள்ள சந்நிதி முருகன் ஆலயம் சிறப்புற்று விளங்குவதற்கு அதுவும் ஒரு காரணமாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்த தியாகராசா

# அன்னையைப் போல் ஆதரிப்பான் ஆறுமுகன்

வீரவாகு தேவர் பாலியாற்றங் கரையில் வேலைப் பிரதிஷ்டை செய்து பணிந்து வழிபாடாற்றிய பின் சூர பன்மனிடம் தூது சென்றதாகப் புராணம் சொல்லும். வியாழ பகவானின் சாபத்தைப் போக்க ஐராவசு என்னும் கந்தர்வன் சிகண்டி முனிவரினால் சாப விமோசனம் பெற்று வடபுல வல்லியாற்றங்கரையில் திருக்கோயில் கொண்ட வேற்பெருமானைத் தரிசித்து பூவரசு மரத்தின் கீழ் மௌன பூசை செய்து தியானித்து முத்தி பெற்றதும் சந்நிதிப் பெருமானின் பேரருள் ஆட்சியை எடுத்தோதும் வேற்படையின் பெரும் சிறப்பை வீரவாகு தேவர்

*“அந்த மில் லொளியின் சீராலறு*
*முகம் படைத்த பண்பால்*
*எந்தை கண்ணினின்றும்*
*வந்த வியற் கையாற் சத்தி*
*யாம்பேர்*
*தந்திடும் பனுவல்*
*பெற்ற தன்மை*
*யாற்றனிவேற்*
*பெம்மான்*
*கந்தனே யென்ன*
*நின்னைக் கண்டுளக்*
*கவலை நீத்தோம் ”*

எனப் போற்றுவதாக கந்த புராணம் சொல்கின்றது. இத்தகு மகிமையும் அருட்கடாட்சமும் நிறைந்த சந்நிதித் திருத்தலம் தமிழ்க் குடிகளுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரதசாதம்.



யாழ்.குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசத்தின் மேற்கு எல்லையில் மேன்மை கொள் தொண்டமானாறு என்னும் பேரூர் வரலாற்றைக் கொண்ட ஊர். இந்து மாகடலும் தொண்டமானாறும் சங்கமிக்கும் எழில் தவழும் நெய்தல் நிலத்தே ஆற்றோரத்தில் கோயில் கொண்டவன் சந்நிதி முருகன். அதனால் சந்நிதியானை ஆற்றங்கரையான் என்ற நாமகரணத்தால் அன்பர்கள் அழைப்பர், கும்பிடுவர். சந்நிதியெனின் அண்மை நிலையென்றும் திருமுன் என்றும் பொருள் சொல்வர் சான்றோர். யாம் பெறுதற்கரிய பெரும் செல்வம் எனப் போற்றும் நிறை மொழி மாந்தர் தன்னை சதாகாலமும் சிந்திக்கும் அடியவர்க்கு தானே செல்வமாயும் இருந்து இன்னும் பெருஞ் செல்வத்தையும் ஈய்ந்து வந்து நல்லருள் புரிவதனாலும் சந்நிதியானைச் செல்வச் சந்நிதி என்னும் திருப்பெயர் சூட்டி வழிபடுகின்றனர். மேலும் சின்னக்கதிர்காமம் என்னும் சிறப்புக்கும் உரியவன். ஆடம்பரக் கட்டடங்களோ மண்டப அமைப்புக்களோ இராஜகோபுரமோ எதுவுமின்றி ஆற்றங்கரையோரத்தில் அமர்ந்து மௌன பூசையையேற்று அறுபத்தி மூன்று ஆல் இலையில் அமுதையேற்று தன்னை அண்டி இருப்போர் தீராத நோய்களைத் தீர்த்து தஞ்சமடைவோரை தொடரும் பிணிகளை வேரற நீக்கி அருளுவதனாலும் சந்நிதிக் கந்தன் உறை கோயிலை சின்னக் கதிர்காமம் என்றும் போற்றுவர். கருணை மிகு கந்தப் பெருமான் அன்னம் பாலித்து அரும் பசி போக்குதலால் அன்னதானக் கந்தன் என்றும், வேண்டுநர் வேண்டியாங்கு எய்தி தங்கள் எண்ணம் எம்பெருமான் அருளால் ஈடேறியமையால் பல வகைக் காவடிகளை எடுத்து நேர்த்திக் கடனை நிறைவு செய்வதனால் காவடிக் கந்தன் என்றும் வணங்கப்படுபவன் சந்நிதிவேலன். புராணத் தொடர்பும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க கந்தப் பெருமான் அன்னையைப் போல் ஆதரிப்பவன் சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம், நித்தியம், அநித்தியம் தெரியும் நிற்குண பக்தி செய் உத்தமர் பரவி நிற்கும் திருவீதியில் வந்தொருகால் விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே” யென யோகர் சுவாமிகள் ஓதிய ஆறுமுகனுக்கு இன்று தேர். மிகப் பெரிய யாத்திரைத் திருத்தலமாக விளங்கும் சந்நிதி வேலன் தேர் காண அலை அலையென மக்கள் கூடுவர். ஈழத்தவர் மட்டுமல்ல புலம் பெயர்ந்து வாழும் எண்ணற்ற சந்நிதியான் மெய்யடியார்களும் வேற்பெருமான் பவனி வரும் சித்திரத்தேர் காணத்திரள்வர். தேரோட்டமானது பஞ்சகிருத்தியங்களில் அழித்தலைக் குறிப்பது. திரிபுரதகனம் செய்ய ஆதி சிவன் இரதத்தில் ஆரோகணித்து அணி வகுத்துச் சென்றமையைப் போல் எங்கள் குருநாதன் குக்குடக் கொடியன் எமது பிணி பொடி பட தேரில் வருகின்றான். நிலை பெறும் சிவாகமங்கள் நிறைந்திடும் தத்துவங்கள் தலை சிறந்தமைந்த கவினுயர் தேரில் சந்நிதி வேலன் பவனி வருகின்றான்

புரள நண்புலனொன்றி நாதா வென்றரற்றி உரைதடுமாறி உரோமம் சிலிர்ப்பக் கரமலர் மொட்டி இருதயம் மலர கண்களில் சுவர என வாதவூரர் வாய் மொழிக்கு ஏற்ப நின்று பணிந்தேத்துவர். வேற்பெருமான் தேர்முன்னே கணபதிதேர் ஊரும். பின்னே சண்முகக் கடவுளின் தேர் ஊரும். தேர்கள் திருவீதியில் பவனி வரும் காட்சி மண்ணகத்தார் மயங்கி மால் மருகனைப் பணிவர். விண்ணகத்தேவரும் மற்றுமுள கணங்களும் களி கொள்வர். தேவ கன்னியர் மலர் தூவி வாழ்த்துவர். முத்தேரும் பவனி வரும் காட்சி உன்னதமானது. உலகு உய்தி பெறவைப்பது.

*“ஆலமர் செல்வன் புதல்வன் திருமுன்*
*பெரியோர் எனினும் புலையோர் எனினும்*
*சிறியோர் எனினும் தெளிவோர் எவரே*
*குறியோர் எனினும் குருவாய் அருள்வான்*
*நெறியோடு ஒழுகும் நிலை பெற்றிடினே”* என்ற கந்தர் அநுபூதி சொல்லும் நிலையில் நிற்பரேல் குருவாய் அருளும் குண முடைய குமரன் அனுக்கிரகம் கைகூடும். நாளென் செயும் வினை தான் என் செய்யும் என நம்பினால் கூற்றும் நம்மை நெருங்காது கருணை கூர் முகங்கள் ஆறுடை பிரமமாய் நின்ற சோதிப்பிழப்பானன் முருகன் அல்லவோ.

மேலும் சந்நிதி முருகன் அடியவர்களோடு அடியாராக நின்று உலாவருபவன் என்பது நன்னெறி மாந்தரின் நம்பிக்கை. அத்தோடு பெருமை சேர் கந்தக் கடவுளுக்கு பெரும் பொருள் செலவில் பெரிய தொரு தேர் நவமணி பஞ்ச லோகம் நாகத்தின் இரத்தினங்கள் திவளுயர் பரவை முத்து சேர்த்து நன்கிழைத்தனர், கொடிமணித்தேரும் கண்டனர். கந்தப் பெருமான் பவனி வந்த தேர் கொடியவர்களால் 21.04.1986ஆம் ஆண்டு எரியூட்டப்பட்டது. எரிந்தது கந்தன் தேர் மட்டுமல்ல, தமிழ் மக்களின் நெஞ்சங்களும் சேர்ந்து எரிந்தன. செந்தீயால் எழுதப்பட்ட வரலாறு என்றும் அழியாது. மக்கள் மனங்களை விட்டு நீங்காது. செய்தார்க் குப் பழியும் போகாது வெட்டவெட்ட தளைக்கும் மறத்தமிழர் கூட்டம் வீழாது, வீழ்ந்தாலும் மாளாது. சந்நிதி முருகள் அருளால் மீண்டும் புதிய சித்திரத் தேர் அமைத்தனர். புவன மாதியோர் மகிழ செஞ்சுடர் வேற் படை கந்தன் திருவீதியில் பவனி வந்தது.


> நாளென் செயும் வினை தான் என் செய்யும் என நம்பினால் கூற்றும் நம்மை நெருங்காது கருணை கூர் முகங்கள் ஆறுடை பிரமமாய் நின்ற சோதிப்பிழப்பானன் முருகன் அல்லவோ. மேலும் சந்நிதி முருகன் அடியவர்களோடு அடியாராக நின்று உலா வருபவன் என்பது நன்னெறி மாந்தரின் நம்பிக்கை. அத்தோடு பெருமை சேர் கந்தக் கடவுளுக்கு பெரும் பொருட் செலவில் பெரிய தொரு தேர் நவமணி பஞ்ச லோகம் நாகத்தின் இரத்தினங்கள் திவளுயர் பரவை முத்து சேர்த்து நன்கிழைத்தனர், கொடிமணித்தேரும் கண்டனர்.


மாந்தர் மகிழ்ந்தனர், கந்தன் கருணைக்கு நிகரேது. வீரவாகுத் தேவர் பிரதிஷ்டை செய்து வழிபட்டவேல். முருகன் கையளித்து மருதர் கதிர்காமர் வைத்து வணங்கியவேல். கரு வறையில் இறையாய் இருக்கும் வேல், எற்தை முருகன் கைவேல். வீரவேல், விண்ணோர் சிறை மீட்ட தீரவேல், உமையவள் ஈய்ந்துவந்த ஞானவேல். எனவே கர்ப்பகிரகத்தில் உள்ளிருந்து அருளாட்சி புரியும் வேலுக்குத்தான் எத்தனை வல்லமை, எத்தனை மகிமை, எந்நிதியும் தருவான் சந்நிதியான் என அவன் திருப்பாதத்தை காலங் காலமாய் கசிந்துருகி கைதொழும் தமிழர்களை வாழவைப்பாய் முருகா. தமிழர் இடர் தீர்ப்பது உன் கடனே முருகா.

*“மும்மலம் அறுப்பதற்காய் முக்கண்ணன் இரதத்தேதி*
*எம்மையே இனிது காக்க ஏறுவான் ஞானத்தேரில்*
*செம்மல ரொத்த ரூபன் செல்வச் சந்நிதி வாழ்வேதன்*
*எம்மிடர் தீர்ப்பதற்காய் ஏறினார் ஏழ்பார்தேரில்*
*போற்றிக் குமரக்கந்தன் பொலிதர வீதி யெல்லாம்*
*சாற்றிடும் தொண்டர் சூழ தரணமா வீதி வந்து*
*வீற்றோடு சிவம் சிறக்க நீடருள் புரிவாயே!”* எனச்சந்நிதி வேலன் தேர்ப்பவனியை புகழ்ந்தேத்தியவர் அருட்கவி. தேரோட்டமானது மும் மலத்தின் பிணிநீக்கமே. இனிப் பிறவாத பெருவாழ்வு அப்பெருவாழ்வை ஈடேற்றும் பொருட்டு வருதலை செஞ்சடை ஆதி புராதனன் முப்புரம் செற்றனன் என்பர் மூடர்கள் முப்புரமாவது மும்மல காரியம் என்கிறது திருமந்திரம்

முடியாப்பிறவிக்கடலில் புகார் முழுதும் கெடுக்கும் மிடியால் படியில் விதனப்படார் என்றோதுகின்றது கந்தர் அலங்காரம். ஆன்மாவைப் பீடித்து அலைக்கழிக்கும் பிறவிப் பிணியை நீக்கி பரிகாரம் செய்து பரிபாலிக்கவே இரத பவனி இடம் பெறுவதும் இடர்களைந்து ஆன்மாக்களை ஈடேற்றும் அருள் நோக்கம் கொண்டது. வேற்பெருமான் திருத்தேர்பவனி கண்டு மெய்யடியார் ஆடுவதும் பாடுவதும் [illegible] யார் செய்கை [illegible]” என்னும் [illegible] பாடலுக்கு ஒப்ப ஆடியும் பாடியும் முருகன் திருமுன் என்புனைந்துருகி நெக்கு நெக்கேங்கி அன்பெனும் ஆறு கரையது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அபயம் தந்து அகிலத்தை காவல் செய்ய

# அன்னதானக் கந்தன் தேரேறி வருகின்றான்

மதுரகவி காரை
எம்.பி.அருளானந்தன்

ஈழமணித்திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவது போல வடபால் செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. அன்னதானக்கந்தனாக தொண்டமானாறு ஆற்றங்கரையினிலே அருளாட்சி செய்து வருகின்ற சந்நிதிக்கந்தனுக்கு இன்று(15.09.2016) தேர்த்திருவிழாவாகும்.

இன்றைய தேர்த்திருவிழாவிலே ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் வேற்று நாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் செல்வச்சந்நிதியில் கூடுகின்ற கண்கொள்ளாக் காட்சியைக் காணமுடிகின்றது.

கதிர்காமத்தில் காவடிக்கந்தனாகவும், மாவிட்டபுரத்தில் அபிஷேகக்கந்தனாகவும், நல்லூரில் அலங்காரக்கந்தனாகவும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற முருகப்பெருமான் செல்வச்சந்நிதியில் அன்னதானக்கந்தனாக ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

வட இலங்கையில் வடமராட்சிப்பகுதியில் தொண்டமானாறு என்னும் புராதன நகரம் உண்டு. கருணாகரத் தொண்டமான் எனும் சிற்றரசருடன் தொடர்பு பூண்ட நகரம் இந்தப் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. தொண்டமான் ஆற்றங்கரையில் கழிமுகத்துக்கு அண்மையில் செல்வச்சந்நிதி முருகன் கோயில் அமைந்துள்ளது.

செல்வச்சந்நிதி ஆலயம் சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம் கல்லோடை எனும் சிறப்புப்பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. கோயில் சூழலில் இயற்கை அழகு எல்லோரையும் ஈர்ப்பது மருதமரக் காடும் பாக்கு நீரிணைக் கடலும் மருங்கே காணும் வயலும் இடையே கிழக்கே இருக்கும் வல்லை வெளியும் திணை ஒழுக்கம் காட்டும்.


செல்வச்சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். இந்த ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும் கதிர்காமத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இரு ஆலயங்களிலும் வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. பூசையில் மந்திரங்கள் இடம்பெறுவதில்லை. வேறு எந்தக் கோயிலிலும் காணப்படாத சடங்கு முறையே சந்நிதியில் காணப்படுகின்றது. கதிர்காமத்து கொடியேற்ற நாளில் சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாகவும் பின்னர் கதிர்காமத்து தீர்த்தத் திருவிழாவன்று சந்நிதி திரும்பிவருவதாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன.

ஒருநாள் இரவு முருகன், பூசாரியார் கதிர்காமரை நித்திரையில் இருந்து எழுப்பி அப்பா நான் பாதயாத்திரையாக வந்தமையால் பசி, தாகம் அதிகரித்துள்ளது. ஏதும் உண்பதற்குக் கொடு என்று கேட்டாராம். கதிர்காமரும் நான் தங்களுக்கு அமுது படைக்க இவ்வேளை எங்கு போவேன் என்று மனம் நொந்தார். உன்னிடம் இருக்கும் சிறிதள வான பயற்றை துவைத்து இளநீரும் தா என்று கேட்டுவாங்கி முருகன் திருவமுது செய்தார்.

இன்றும் அவ்விதமாக பயற்றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத்திலிருந்து திரும்பி வருகின்ற முருகனுக்கு பூசைக்கு படையல் செய்து வருவது நடைமுறையில் உள்ளது. செல்வச்சந்நிதி சூழலிலே காணப்பட்ட மடங்கள் சில சிதைந்த நிலையிலே இருக்கின்றன. அந்தக் காலங்களில் அம்மடங்களிலே அடியார்கள் தங்கவும் அன்னதானம் நிறைவேற்றவும் வசதியாக அமைந்தன. இன்றும் சந்நிதியான் ஆச்சிரமம். ஆனந்தா ஆச்சிரமம் போன்ற மடங்கள் அப்பணியை நிறைவேற்றி வருகின்றன.

சந்நிதி பூசை நேரங்களில் ஒலிக்கும் பறைமேளம் அன்பர்களை பரவசப்படுத்தும். நிறைந்த கர்ப்பூர ஒளியிலும் செறிந்த புகை மண்டல நடு விலே மின்னல் போல ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப்படாதார் எவருமில்லையென்றே கூறலாம். சந்நிதி மூலஸ்தானத்தில் வேலே காட்சிய ளித்து எம்மை ஆட்சி செய்கின்றது.

> கதிர்காமத்தில் காவடிக் கந்தனாகவும், மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும், நல்லூரில் அலங்காரக்கந்தனாகவும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற முருகப்பெருமான் செல்வச்சந்நிதியில் அன்னதானக்கந்தனாக ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2016


24/7 HOURSE Service

**Sai** Holiday Inn Jaffna.

A/C Non A/C Rooms



Wi-Fi (Free) Attached
Bathroom & Hotwater
T.V. Fridge, Van Services,
24 hours Security (CCTV)




**Wedding Hall Available**
132, Kacheri Nallur Road,
Jaffna.

Mob: 077 607 8888
T.P: 021 222 4615 / 021 222 4616 | Fax : 021 222 4616

சந்நிதியான் தேர் திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

THE SASIKA DRIVING SCHOOL

த சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள
எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

DS No - 882

தற்போது புதிய கிளை மல்லாகத்திலும்

சாரதி அனுமதிப் பத்திரம்
பெறுவதற்குத் தேவையான
ஆவணங்கள்



✓ தேசிய அடையாள அட்டை
✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப் பிரதி)
✓ திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி - பெண்களுக்கு மட்டும்)
✓ மருத்துவச் சான்றிதழ் (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
✓ சாரதி அனுமதிப் பத்திரம் (வைத்திருந்தால்)

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

- விண்ணப்பதாரி கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல்,பரீட்சை மாதிரி வினாத்தாள்,செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
- எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்துLearners Permit பெற்றுத் தரப்படும்.

வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.

**தலைமைக் காரியாலயம்**

இல. 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 021 221 7678, 077 614 0361
HOTLINE - 077 722 6247
SasikaLearners
sasikadrivingschool@gmail.com

**கிளை நிறுவனங்கள்:**

| வேலணை | மல்லாகம் | சங்கானை |
|---|---|---|
| வங்களாவடிச் சந்தி, வேலணை. | கே.கே.எஸ்.வீதி | ஒடக்கரை வீதி, சங்கானை. |
| 021 221 5472 | 021 224 3393 | 021 225 1664 |
| 070 301 3012 | 070 301 3014 | 070 301 3016 |

**Diamond** கொங்கிறீட் கல் இயந்திரங்கள்
இன்று யாழ் மண்ணில்
Hydraulic, Vibration, Full automatic Machines



Pan Mixer
(DPM 350,DPM 500)
350 L, 500 L
கொள்ளளவு
கொண்ட பன் மிக்சர்கள்.

QTJ4 - 40B







QTJ4 - 40 Block Machine
நாள் ஒன்றுக்கு 1500
தொடக்கம்
2000 கற்களை உற்பத்தி
செய்யக்கூடிய இயந்திரம்.



QTJ4-26A Automatic Block Machine



முற்றிலும் தன்னியங்கி
இயந்திரம். நாள் ஒன்றுக்கு
3500 தொடக்கம் 4500 கற்கள்

எமது இயந்திரத்தினை பயன்படுத்துவதனால் நீங்கள் பெறும் நன்மைகள்

- நாளொன்றுக்கு 1500 தொடக்கம் 9000 கற்களை உற்பத்தி செய்யமுடியும்.
- மனித வலுவினை ( Labour Charge) குறைக்க முடியும்.
- ஒருவருட உத்தரவாதம் (Warranty ) மற்றும் விற்பனைக்கு பிந்திய சேவைகள்.
- இயந்திரத்திற்கு தேவையான உதிரிப்பாகங்கள்.
- Bank Loans மற்றும் Leasing ஒழுங்கு செய்து தரப்படும்.

எமது நிறுவனத்துக்கு யாழ்நகரப்
பகுதியில் காட்சியறைக்குப்
பொருத்தமான கட்டடம்
தேவை.

**Diamond High Quality Cement Block Machineries**
No:112 Pahala Bomiriya, Kaduwela, Srilanka.
P.No: 011 253 9155 Tamil: 076 994 6575 English: 077 750 7024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எந்நிதியும் தருவான் சந்நிதியான்

## 5 % முதல் 50 % வரை விலைக்கழிவுடன்

**வடமராட்சி நெல்லியடியில் இயங்கி வந்த**

# கோகில்ஸ் பேபி நீட்ஸ் தற்போது அதே இடத்தில்

# கோகில்ஸ் பேபி நீட்ஸ் அன் பான்சி

**என்னும் புதிய நாமத்துடன் பிரமாண்டமான கட்டடத்தில் முற்றிலும் புதிய தோற்றத்துடன்**

வாருங்கள் வந்து ஒரு முறை பாருங்கள்! கர்ப்பிணித் தாய்மார்களுக்கான வைத்தியசாலைப் பொருள்கள் அத்துடன் குழந்தைகளுக்கான வைத்தியசாலை உடைகள் மற்றும் குழந்தைகளுக்கான தொட்டில்கள், மோட்டார் சைக்கிள், கார் மற்றும் விளையாட்டுப் பொருள்கள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள், குழந்தைகளுக்கான பிஸ்கட் வகைகள், பெண்களுக்கான அழகுசாதனப் பொருள்கள், வீட்டுத்தளபாடப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், வாருங்கள் வந்து எமது விலையைப் பாருங்கள்!

நல் உள்ளங்கொண்ட வாடிக்கையாளர் அனைவருக்கும் அன்னதானக்கந்தன் அருள்பாலிக்கட்டும்.



**இல.41, பிரதான வீதி, நெல்லியடி.** **T.P: 021 226 3545**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2016

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சந்நிதியான் அருள் கிடைக்கட்டும்.

## சாயிராம் மதர் & பேபி நீட்ஸ்

(மந்திகை வைத்தியசாலைக்கு அருகில்)

கர்ப்பிணிப் பெண்களுக்கான ஆடை வகைகள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான பொருள்கள், பரிசுப்பொருள்கள் அனைத்துக்கும் நாடவேண்டிய ஒரே இடம்.

வெஸ்ரேன் யூனியன் Western Union சேவையும், போட்டோக்கொப்பி சேவையும் மலிவு விலையில் செய்து கொடுக்கப்படும்.

Hospital Road, Manthikai.

T.P: 021 226 1459

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சந்நிதியான் அருள் கிடைக்கட்டும்.

## BLUBERRY CREAM HOUSE

புளூ பெரி ஐஸ்கிறீம்

சகல விதமான சிற்றுண்டி வகைகளும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும். ஸ்பெசல் ஐஸ்கிறீம் மற்றும் கொழும்பு ஐஸ்கிறீம், பிஸ்கட் வகைகள் பெற்றுக் கொள்ள ஏற்ற இடம்.

சாவகச்சேரி வீதி, மந்திகை.

தேர் ஏறிவரும் செல்வச் சந்நிதியின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

## மனோகரன் ஹாட்வெயார்

உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள் PVC பைப், பாயின் வகைகள் என்பவற்றுடன் துவிச்சக்கர வண்டிகள், எலெக்ரிக் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி. தொ.பே: 021 226 4192

செல்வச் சந்நிதியானின் தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

## நெல்லியடியில் பிரமாண்டமான புடவை மாளிகை

விதம் விதமான சாறிவகைகள், சல்வார் துணிகள், சேட், ரீசேட், பஞ்சாபிகள் இன்னும் ஏராளமான புடவைகளுடன்

சிறுவர் முதல் அனைவருக்கும் ஏற்ற பல வகையான ஆடைகளைப் பெற்றிடலாம்.

## செல்லமுத்தூஸ்

புடவை மாளிகை

பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

தொ.பே.இல. 021 226 3238

## SAI BEAUTY PARLOUR

சாயி பியூட்டி பார்லர்

பேஷியல்கள், ஐபுறோ, முடி சுருள் பண்ணுதல், முடி அயன் செய்தல் மற்றும் திருமணம், பிறந்த நாள், ஐஸ்சிங் கேக் சேவைகளும் வழங்கப்படுகின்றன. மணப்பெண் ஒப்பனைகள் (காலத்திற்கு ஏற்ப) நவீன முறையில் மேற் கொள்ளலாம்

இயற்கையான
அமைதியான...
ரம்மியமான சூழலில்.....

மணப்பெண் ஒப்பனைக்கு கற்பனைத்திறன் கொண்ட பெண் கலைஞர்களின் சேவை.

சுனிதா அசோக் 077 882 0006
தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.

## சந்நிதி மெடிக்கல்ஸ்

சந்நிதி முருகனே! அடியார்கள் அனைவருக்கும் இன்னருளைப் பொழிந்திடுக

SANNITHY MEDICALS

- சகல விதமான ஆங்கில மருந்துகள்,
- பால்மா வகைகள்,
- தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் தேவையான பொருள்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

SANNITHY MEDICALS
Main Street, Point Pedro- 077 655 8237

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் செல்வச் சந்நிதியான் அருள்பாலிப்பாராக

## ஸ்ரீ சுசிலா

ஆபரண மாளிகை

*Sri Susila*

*Gold House*

(916 KDM) தங்க நகைகள் மொத்தமாகக் கிடைக்கும்.

239, பிரதான வீதி, பருத்தித்துறை

239, Main Street, Point Pedro.
T.P. No: 077 721 0206
021 226 1003, 021 320 7437

சந்நிதியான் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

## நிதர்சா விற்பனை நிலையம்

*Nitharshaa Trade Centre*

மின்சார இலத்திரனியல் வாணிபம்

பதிவு.இல VADA/N/B.R/674

குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி, சலவை இயந்திரம், றேடியோ, சமையல் உபகரணங்கள், மின் விசிறிகள் போன்ற வீட்டுக்குத் தேவையான சகல உபகரணங்களையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம் நிதர்சா விற்பனை நிலையம்.

கிராமக் கோட்டுச் சந்தி, பருத்தித்துறை

எந்நிதியும் தரும் சந்நிதியான் தேரேறி வந்து எல்லோருக்கும் அருள்பாலிப்பாராக

st
Saravana Tex

## நெல்லியடி சரவணா ரெக்ஸ்

பண்டிகைக்காலங்களுக்கேற்ற ஆடை வகைகளினதும் பாரம்பரியத்தின் கைராசியான திருமணப் பட்டுப் புடவைகளினதும் சாம்ராச்சியம்

171, பிரதான வீதி, நெல்லியடி
(சம்பத் வங்கி அருகில்) கரவெட்டி.
021 226 2992

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2016

சந்நிதியான் தேரேறி வந்து எல்லோருக்கும் நல்லருள் பாலிப்பாராக
## ஸ்ரீ முருகன் மெடிக்கல்ஸ்
■ ஆயுள்வேத மருந்து வகைகள்
■ ஆங்கில மருந்து வகைகள்
■ பால்மா வகைகள் ■ அழகு சாதனப் பொருள்கள்.
யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்
பிரதான வீதி, பருத்தித்துறை.
077 558 1531

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சந்நிதியான் அருள் கிடைக்கட்டும்.
சகல விதமான அச்சு வேலைகளும் சிறந்த முறையில் குறிப்பிட்ட தவணையில் செய்து கொடுக்கப்படும்.
## தீபன் பதிப்பகம்
உரிமையாளர் சி.தீபானந்
தொ.இல 077 652 0315
நீதிமன்ற வீதி, பருத்தித்துறை.
பிரதான வீதி, பருத்தித்துறை.
theepanoffsetprinters@gmail.com

சந்நிதியான் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.
## ஐங்கரா களஞ்சியம்
Dealers in hardware, Electrical Goods and Paints Etc.
கட்டடப் பொருள்கள், மின்சாரப் பொருள்கள் மற்றும் S-loan குழாய்கள், பெயின்ற் வகைகள்
Mainstreet, Point pedro. T.P: 077 190 7478

தேரேறி வரும் சந்நிதியானின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.
## RAINBOW TILES STORES
றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள், எஸ்லோன் பி.வி.சி பைப் வகைகள், கட்டடப் பொருள்கள், விவசாய மருந்து வகைகள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சாரப் பொருள்கள் என்பன மலிவு விலையில் கொள்வனவு செய்யலாம்.
பருத்தித்துறை வீதி, சிலையடி, மந்திகை
021 226 2696 077 869 5418

அனைவருக்கும் செல்வச்சந்நிதியான் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்.
## நந்தினி பழக்கடை
சகல விதமான உள்நாட்டு, வெளிநாட்டு பழவகைகள் மற்றும் வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய பருத்தித்துறை தட்டை வடை மற்றும் பலகார வகைகள், சுத்தமான பனங்கட்டி, என்னுப்பாகு, கேக், பிஸ்கற் வகைகள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
நந்தினி பழக்கடை
நவீன சந்தை (பஸ் நிலையம் அருகில், பருத்தித்துறை)
T.P: 077 273 7514

அன்னதானக் கந்தனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.
## Vinmeen Ankhady
Pointpedro Road, Nelliady.
P.Vageesan. T.P: 077 651 6622
K.Sriranganathan. T.P: 021 226 3027

சந்நிதியானின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.
## தமிழ்ப்பூங்கா பதிப்பகம்
Tamil Poongaa Printers
பிரதான வீதி, நெல்லியடி. Main Street, Nelliady
T.P : 021 226 4014, 077 959 7145
Email: tamilpoonka@gmail.com
www.nelliadytamilpoonka.blogspot.com

செல்வச் சந்நிதி முருகன் தேரேறி எம் மக்களுக்கு அருள்பாலிப்பாராதக
## ATF
## அருண் புடைவையகம் & அழகுமாடம்
சாறி, சல்வார், ஆண்களுக்கான சேட், ரீசேட் மற்றும் சிறுவர்களுக்கான சகல ஆடைவகைகள்
Arun Tex & Fancy House
பிரதான வீதி, நெல்லியடி.
021 226 2857

Real Italian
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சந்நிதியான் அருள் கிடைக்கட்டும்.
## Vinmeen Pizza
நவீன உயர்தர வெதுப்பக உற்பத்திகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Vinmeen RESTAURANT & BAKERY
No.83, MAIN STREET, NELLIADI. KARAVEDDY.
T.P: 021 226 1051
மங்கலகரமான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே: 021 226 1354

செல்வச் சந்நிதி முருகன் தேரேறி எம் மக்களுக்கு அருள்பாலிப்பாராதக
80 Years 1936 - 2016
## குகன் ஸ்ருடியோ பருத்தித்துறை
வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குமுகமாக எமது நிறுவனமான குகன் ஸ்ருடியோ 10.02.2016 முதல் புனரமைக்கப்பட்ட கட்டடத்தில் (பருத்தித்துறை துறைமுக முன்புறமாக/கொட்டடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில்) இயங்கிவருகின்றது.
ஆட்பதிவு திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டை(NIC) புகைப்படம் எடுப்பதற்கும், குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் கடவுச்சீட்டுக்குரிய புகைப்படங்களை (Online Passport Photo) எடுப்பதற்கும் எமது நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது
021 226 3218
077 728 3706

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org